பக்கங்கள் - 28
விலை - 30 ரூபா

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 35 கதிர் 10 கார்த்திகை 20ஆம் நாள் வெள்ளிக்கிழமை 06 டிசெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# ஜனநாயகத்துக்கு விரோதமான திருத்தங்களுக்கு ஆதரவில்லை

## அமெரிக்கத் தூதுவரிடம் சம்பந்தன் இடித்துரைப்பு

கொழும்பு, டிசெம்பர் 6

ஜனநாயகப் பண்புகளுக்கு விரோதமான எந்தவொரு திருத்தங்களுக்கும் நாம் ஆதரவளிக்கப் போவதில்லை. சுயாதீன ஆணைக் குழுக்களை இல்லாதொழிப்பதற்கு சார்பாக எம்மால் செயற்பட முடியாது - இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

23



## கடல் அலையில் அள்ளுண்டார் இளைஞன்

யாழ்ப்பாணம், டிசெ. 6

காங்கேசன்துறை கடலில் நேற்று நீராடிக் கொண்டிருந்த வேளையில் இளைஞரொருவர் கடல் அலையால் அடித்துச் செல்லப்பட்டார். மாத்தறையைச் சேர்ந்த செல்வநாயகம் அலெக்ஸாண்டர் என்ற இளைஞனே அவ்வாறு அடித்துச் செல்லப்பட்டவராவார். அவருக்கு வயது 21.

23

## ஐ.தே.க தலைவராக ரணில் தொடர்வார்?

கொழும்பு, டிசெ. 6

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க தொடர்வதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்று சிறிகொத்தாவில் இருந்து நேற்று இரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலை அடுத்து எதிர்க்

23

## டெங்கால் பாதிக்கப்பட்டு சிறுமியொருவர் மறைவு!

### மன்னாரில் சோகம்

மன்னார், டிசெ. 6

மன்னாரில் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிறுமியொருவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.

மன்னார் நகர பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குற்பட்ட மன்னார் சின்னக்கடையில் வசிக்கும் மரியதாசன் டிவினியா (வயது -9) என்பவரே உயிரிழந்தவராவார்.

30ஆம் திகதி காய்ச்சலால் பீடிக்கப்பட்ட அவர் தொடர்ச்சியான மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்ட

23


## எதிர்க்கட்சித் தலைவராக சஜித்தை நியமிக்க முடிவு

கொழும்பு, டிசெ. 6

எதிர்க்கட்சித் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசவை நியமிக்க ஏகமனதாக முடிவெடுத்துள் ளது ஐ.தே.க.

சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலை அடுத்தே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்

23




## பரீட்சைகளை மையப்படுத்தும் கல்விமுறை தேவையில்லை

### அரச தலைவர் உத்தரவு

கொழும்பு, டிசெ. 6

பரீட்சைகளை மையமாகக் கொண்ட கல்விமுறை வேண்டாம். பிள்ளைகளின் தோள்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சுமைகளை நீக்கும் வகையிலான பின்புலமொன்று உருவாக்கப்படல் வேண்டும் என்று வலியுறுத்தினார் அரசதலைவர் கோத்தபாய ராஜபக்ச.

கல்வி, உயர்கல்வி அமைச்சர்கள், கல்வி நிறுவனங்களின் அதிகாரிகள்

23

## யாழ். பல்கலைக் கழக பட்டமளிப்பு அங்கியில் தவறாகத் தமிழ்மொழி!

யாழ்ப்பாணம், டிசெ. 6

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா இன்று, நாளை, நாளைமறுதினம் என்று மூன்று தினங்கள் இடம்பெறவுள்ள நிலையில், பல்கலைக் கழக பட்டமளிப்புக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அங்கியில் யாழ்ப்பாணப்




23

## அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை

கொழும்பு, டிசெ. 6

ஏழு தமிழ் அரசியல் கைதிகள் அரசால் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று நேற்று செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், அந்தத் தகவலை மறுத்துள்ளன சிறைச்சாலை வட்டாரங்கள்.

அரசியல் கைதிகள் எவரும் விடுதலை செய்யப்பட

23

## தேசிய கல்வியியல் கல்லூரிகளை பல்கலைப் பீடங்களாக்க அனுமதி

கொழும்பு, டிசெ. 6

தேசிய கல்வியியல் கல்லூரிகளைப் பல்கலைக் கழக பீடங்களாகத் தரம் உயர்த்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கான தீர்மான வரைவு

23

## இலங்கையர்களுக்கு தொடர்ந்து வழங்கப்படுகிறது நுழைவிசைவு

கொழும்பு, டிசெ. 6

இலங்கையர்களுக்கு நுழைவிசைவு வழங்கும் செயற்பாட்டை சுவிஸ் தூதரகம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது என வெளியான செய்தியில் உண்மை

23



DFCC கார்ட் மூலம்
சகல பரிசுப் பொருட்களையும்
கொள்வனவு செய்து
இப்பண்டிகைக் காலத்தை
மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடுங்கள்!

கிரடிட் மற்றும் டெபிட் கார்ட்டுகளுக்கு
50% வரையிலான சேமிப்பை அனுபவியுங்கள்.

ஒவ்வொரு DFCC கிரடிட் கார்ட் கொள்வனவிற்கும் 1% பண மீளளிப்பு

மேலதிக விபரங்களுக்கு பிரவேசியுங்கள்: www.dfcc.lk/promotions

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# மிகவும் சக்தி வாய்ந்த 2020இன் ஆரம்பம் உங்கள் பிறந்த திகதியின்படி எப்படி இருக்கும்?




இந்த ஆண்டு இந்த மாய இணைப்புடன் முடிவடைகிறது. இது மிகவும் சக்தி வாய்ந்தது. இது மகிழ்ச்சி, படைப்பாற்றல், செல்வம் என பலவற்றுடன் தொடர்புடையது. இந்த டிசெம்பர் மாதம் வருடம் முடிய உள்ளதால் உங்களுக்கு பல ஆச்சரியங்களைக் கொண்டு வர காத்திருக்கிறது. அதுமட்டும் அல்ல, எதிர்வரும் ஆண்டுக்கான அதிர்ஷ்டத்தையும் பலருக்குக் கொடுக்க காத்திருக்கிறது. நியூமராலஜியைப் பொறுத்தவரை எம்முடைய பிறந்த திகதி என்பது மிகவும் முக்கியமானதாகும். அதனை அடிப்படையாகக் கொண்டுதான் எமக்கான பலன்கள் கணிக்கப்படுகின்றன. அந்த வகையில் உங்கள் பிறந்த எண்ணின் படி 2020இன் ஆரம்பம் எப்படி இருக்கிறது என்பதை இந்த பதிவில் பார்க்கலாம்.

**எண் 1**

பிறந்தஎண்1ஆகஉள்ளவர்களுக்கு இந்தஆண்டு கடின்மாக உழைத்த ஆண்டாகவும், விரக்தி நிறைந்த ஆண்டாகவும் இருக்கும். ஆனால் ஆண்டின் இறுதியான இந்த மாதத்தில் அதற்கான பலனை நீங்கள் அடையலாம். உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கான அடுத்த படி இந்த மாதத்தில் உங்களுக்கு ஏற்படும். உங்களின் திடமான மனநிலையும், கடின உழைப்பும் இந்த ஆண்டுக்கான நல்ல முடிவையும், அடுத்த ஆண்டுக்கான சிறந்த தொடக்கத்தையும் உங்களுக்கு வழங்கும்.

**எண் 2**

பிறந்த எண்ணின் கூட்டுத்தொகை 2 ஆக உள்ளவர்களுக்கு டிசெம்பர் மாதம் நல்ல மாதமாக இருக்கப்போகிறது. அலுவலகத்தில் சம்பள உயர்வு குறித்த நல்ல செய்திகள் உங்களுக்காக காத்திருக்கும். உறவுகளை பொறுத்தவரையில் இந்த மாதம் அனைவரும் உங்களை விரும்புவார்கள். உங்களின் யோசனைகள் மற்றும் திட்டங்களை நிறைவேற்றவும், முன்னேறவும் இது சரியான சமயம்.

**எண் 3**

பிறந்த எண் 3 ஆக உள்ளவர்கள் பயணம் மேற்கொள்ள இது சிறந்த காலமாக இருக்கும். உங்களுக்கு பிடித்தவர்களுடன் பயணம் மேற்கொள்வது உங்களின் வாழ்க்கைக்குப் புதிய பரிணாமத்தைக் கொடுக்கும். உங்களின் நேர்மை, உத்வேகம், செயல்திறன் குறித்து பொதுவெளியில் கேள்விகள் எழலாம். முடிந்தவரை உங்கள் ஓய்வு நேரத்தை தியானத்தில் செலவழியுங்கள். இந்த மாதம் உங்களின் மகிழ்ச்சிக்கான மாதமாகும்.

**எண் 4**

பிறந்த எண் 4 ஆக உள்ளவர்களுக்கு இந்த மாதத்தில் பெரிய முன்னேற்றம் காத்திருக்கும். நீங்கள் இந்த மாதத்தைப் புதுப்பித்த ஆற்றல் மற்றும் உற்சாகத்துடன் தொடங்குவீர்கள், இது அடுத்த வருடமும் தொடரும். இந்த நேர்மறையான ஆற்றலை உங்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் செலுத்துங்கள். நீங்கள் தனிமையான ஆளாக இருந்தால் உங்களின் உள்ளுணர்வுகளை எழுப்பக்கூடிய ஒருவரைச் சந்திக்க வாய்ப்புள்ளது.

**எண் 5**

எண் 5ஐ பிறந்த எண்ணாகக் கொண்டவர்களுக்கு இந்த மாதம் அதிக உள்ளுணர்வு மற்றும் உணர்திறன் நிறைந்ததாக இருக்கும். உங்களின் காயங்கள் ஆறக்கூடிய காலம் இது. உங்கள் இதயம் சொல்வதைப் பின்பற்றி நடக்க முயற்சி செய்யுங்கள். உங்கள் அன்பானவர்களுக்காக நேரம் ஒதுக்க வேண்டிய காலமிது. வேலையில் நல்லிணக்கத்தை வைத்திருக்க உங்கள் இராஜதந்திரம் தேவைப்படலாம். உங்கள் எல்லைகளை அறிந்து நடந்து கொள்ள வேண்டியது நல்லது.

**எண் 6**

பிறந்த எண்ணை 6 ஆக கொண்டவர்கள் மெதுவாகவும், ஓய்வாகவும் செயற்பட வேண்டிய நேரமிது. ஏனெனில் உங்களின் அடுத்த வருடம் அதிக ஆற்றலுடனும், அதிக சுழற்சிகளுடனும், புதிய தொடக்கங்களுடனும் வரப்போகிறது. அவற்றை ஏற்றுக்கொள்ள உங்களை தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள். எனவே உங்களுக்கு பொருந்தாத எல்லாவற்றையும், எந்தவொரு மன அழுத்த சூழ்நிலையையும் விட்டுவிட்டு, உங்களை சீரானதாகவும் அமைதியாகவும் வைத்திருக்க முயலுங்கள். வரும் மாற்றங்கள் எதுவாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள தயாராக இருங்கள்.

**எண் 7**

பிறந்த எண்ணை 7 ஆக கொண்டவர்கள் இந்த ஆண்டின் இறுதியில் அடுத்த வருடத்துக்கான நோக்கங்களையும், குறிக்கோள்களையும் தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள். சிலசமயம் உங்களின் சொந்த யோசனைகளே உங்களை குழப்பமடையச் செய்யக்கூடும். உங்களை மனதை தெளிவாக வைத்துக்கொள்ள உங்களுக்கு நேர்மறை ஆற்றலை வழங்கும் விடயம் என்னவென்பதை கண்டறிய வேண்டும். உங்கள் குறிக்கோள்களுடன் நீங்கள் இணைக்கப்பட்டிருந்தால், நீங்கள் தேடுவதை உங்கள் குறிக்கோள்கள் எதிர்கொண்டால், நீங்கள் செழித்து வளர வாய்ப்புள்ளது.

**எண் 8**

பிறந்த எண்ணை 8 ஆக கொண்டவர்கள் மாற்றங்களுக்குத் தயாராக இருங்கள். உங்கள் வாழ்க்கையையே மாற்றக்கூடிய ஒரு பயணத்துக்கு நீங்கள் அழைக்கப்படலாம். உங்களின் குறிக்கோள்களை நிர்ணயித்து அதை நிறைவேற்றுவதற்கான புதிய நபர்களைச் சந்திக்க இந்த மாதத்தில் பயணத்தை திட்டமிடுவது நல்லது. இந்த மாதத்தில் நீங்கள் செய்யும் ஒவ்வொரு பயணமும் உங்கள் வாழ்க்கையின் அடுத்த தொடக்கத்துக்கான ஆரம்பப்புள்ளியாக இருக்கும்.

**எண் 9**

இந்த மாதத்தில் உங்கள் வாழ்க்கை, குடும்பம், தொழில் மற்றும் உறவுகள் போன்ற அனைத்து விடயங்களிலும் உங்களின் அதிக கவனம் தேவைப்படும்.

விடுமுறை நாள்களில் குடும்பத்தை ஒன்றாக்கக் கொண்டுவருவது மிகவும் பயனுள்ள மற்றும் மகிழ்ச்சியானத் தருணமாக இருக்கும். இது அனைத்து அம்சங்களிலும் ஆண்டின் மிகவும் பலனளிக்கும் மாதமாக இருக்கும்.

# சனிக்கு அதிபதியான பெருமாளுக்கு உகந்த சனிக்கிழமை விரதம்

நவக்கிரகங்களில், சனிபகவானை ஆயுள்காரன் என்று சொல்வார்கள். சனியின் ஆதிக்கம் பொறுத்துத்தான் ஒருவரின் ஆயுள் காலம் நிர்ணயிக்க முடியும். ஆனால், அந்தக் கிரகத்தையும் கட்டுப்படுத்துபவர் பெருமாள். சனிக்கு அதிபதியான பெருமாளுக்கு சனிக்கிழமைகள் உகந்த நாள்கள். சனிக்கிழமை விரதம் இருப்பவர்கள் அதிகாலை எழுந்து நெற்றியில் திருநாமம் தரித்து "ஓம் நமோ நாராயணாய " என்று உச்சரித்து விரதத்தை ஆரம்பிக்கலாம்.

அன்று ஒரு நேரம் மட்டுமே உணவு உண்ண வேண்டும். அசைவம் கூடாது. அதன் பின் பெருமாள் கோவிலுக்குச் சென்று பெருமாளை வழிபடுதல் அவசியம். மாலையில் பெருமாளுக்கு எள் எண்ணெய் தீபம் ஏற்ற வேண்டும். அருகில் கோவில் இல்லாதவர்கள் வீட்டிலேயே பெருமாளின் படத்தை வைத்து வழிப்பாட்டைச் செய்யலாம். சனிக்கிழமை இருக்கும் விரதம் எளிமையானது. பகலில் பழம், தீர்த்தம் மட்டும் சாப்பிட்டு, இரவில் எளிய உணவுடன் விரதம் முடிக்கலாம். இப்படி விரதம் இருப்பதன் மூலம் சனிக் கிரகத்தின் ஆதிக்கத்தில் இருந்து தங்களைக் காத்துக் கொள்ள முடியும். அன்று விரதம் இருக்கும்போது தங்கள் பலன்களை அதிகரித்துக் கொள்ளவும், மற்ற ராசியினரும் லக்னத்தினரும் சனியினால் ஏற்படும் கெடுபலன்களைக் குறைத்துக் கொள்ள, அவர்களும் சனிக்கிழமை விரதம் இருக்க வேண்டும்.

## டிசெம்பர் மாதத்தில் 12 ராசிகளுக்குமான நன்மை தீமைகள்!

**மேடம்**
நன்மை: அனைத்திலும் வெற்றி வாகை
தீமை: நேரத்தில் கவனம்

**இடபம்**
நன்மை : பொறுப்புக்கள் அதிகரிப்பு
தீமை: உடல் நலத்தில் அக்கறை தேவை

**மிதுனம்**
நன்மை: புதிய உத்வேகம் பிறக்கும்
தீமை: அதிக அலைச்சல் - பிரயாணம்

**கடகம்**
நன்மை: சுபநிகழ்ச்சிகளில் இருந்த தாமதம் அகலுதல்.
தீமை: உடல்நலத்தில் அக்கறை தேவை

**சிம்மம்**
நன்மை: பணவரத்து சீராக இருக்கும்
தீமை: தொழில் சார்ந்த விடயங்களில் வாக்கு கொடுக்கும் போது கவனம் தேவை

**கன்னி**
நன்மை: வீடு, மனை வாகனம் அமைதல்
தீமை: உறவினர் நண்பர்களிடம் கருத்து வேறுபாடு

**துலாம்**
நன்மை: தைரியம், தன்னம்பிக்கை அதிகரித்தல்
தீமை: வாக்குவாதங்கள் ஏற்படுதல்

**விருச்சிகம்**
நன்மை: குடும்பத்தில் மகிழ்ச்சி
தீமை: வாகனப் பிரயோகத்தில் நன்மை

**தனுசு**
நன்மை: பொறுப்புகள் அதிகரித்தல்
தீமை: எதிர்மறை எண்ணங்கள் தோன்றுதல்

**மகரம்**
நன்மை: சுபவிரயச் செலவுகள்
தீமை: நேர நிர்வாகத்தில் குளறுபடி

**கும்பம்**
நன்மை: இலாபம் அதிகரித்தல்
தீமை: குழந்தைகளுடன் கருத்து வேறுபாடு

**மீனம்**
நன்மை: வேலை முன்னேற்றம்
தீமை: வீடு மனை வாங்குவதில் தாமதம்



## மாவீரர் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

வவுனியா,டிசெ.6
புலம் பெயர்ந்த உறவுகளின் நிதிப்பங்களிப்பில் வவுனியாவைச் சேர்ந்த மாவீரர் குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.
பிரான்ஸ் நாட்டில் புலம் பெயர்ந்து வசித்து வரும் தாயக உறவுகளான இனிஸ்மன், பெனிஸ்டன், சோபியா ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் பொதிகள் வழங்கப்பட்டன.
தெரிவு செய்யப்பட்ட 4 மாவீரர் குடும்பங்களுக்கு தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார் உலர் உணவுப் பொதிகளை வழங்கினார். (க)



## மாவட்ட குழுக் கூட்டமும் தெளிவூட்டல் கருத்தரங்கும்

மருதனார்மடம்,டிசெ.6
யாழ்ப்பாண மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இளைஞர் குழுக்களுக்கான மாவட்டக் குழுக் கூட்டமும், கழிவு மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பானதெளிவூட்டல்கருத்தரங்கும் இடம்பெற்றன.
இந்தக் கருத்தரங்கு மருதனார்மடம் விவசாய கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாண மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் இன்பம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றன.
நிகழ்வில் கருத்துரைகளை தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் திட்ட பொறுப்பாளர் சித்திரா தர்மலிங்கம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் செயற்றிட்டப் பொறுப்பாளர் தட்சா தவச்செல்வம் ஆகியோர் வழங்கினர். (ஐ-160)



## வாழ்வாதார உதவி

முல்லைத்தீவு,டிசெ.6
போரில் கணவனை இழந்து 4 பிள்ளைகளுடன் வாழ்ந்து வரும் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக பசுமாடு வழங்கப்பட்டது.
முல்லைத்தீவு முத்தையன் கட்டுப் பகுதியைச் சேர்ந்த குடும்பத்துக்கே இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின்கீழ் இந்த உதவி அண்மையில் வழங்கப்பட்டது. (ஐ)

## டெங்குக் கட்டுப்பாடு தொடர்பில் சிறப்புக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.6
டெங்குக் கட்டுப்பாடு தொடர்பில் சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று வடக்குமாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் மாகாண சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.
இந்தக் கலந்துரையாடலில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தல் தொடர்பாகவும், வைரஸ் தொற்று மற்றும் மலேரியா தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன், அவற்றிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான முன் ஏற்பாடுகள் மற்றும் தொடர் நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.
மேற்படி கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகள், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், யாழ்ப்பாண மாநகர ஆணையாளர், சுகாதாரப் பிரிவினர், பொலிஸார், சிவில் சமூகப் பிரதிநிதிகள், சுகாதாரம் சார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)



## வாசிப்பு மாத நிறைவும் பரிசளிப்பு நிகழ்வும்

கொடிகாமம்,டிசெ.6
சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிறைவும்,பரிசளிப்பு நிகழ்வும் பிரதேச சபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றன.
பிரதேச சபை தவிசாளர் க. வாமதேவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பிரதிப் பதிவாளர் ந.இராசவிசாகன்,சிறப்பு விருந்தினராக அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலய அதிபர் ஐ.தேவசஸ்வரன்,மதிப்புறு விருந்தினர்களாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக அபிவிருத்தி அலுவலகர் திருமதி செ.ஜெகதீசன், கொடிகாமம் சாவகச்சேரி பிரதேச சபைச் செயலர் திருமதி கிரிஜா வாசுதேவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
நூலக அபிவிருத்தி குழு உறுப்பினர் வே.நவரத்தினம் ஒரு தொகுதி நூல்களை கச்சாய் பொது நூலகத்துக்கு அன்பளிப்பு செய்தார்.
வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.
மாணவர்களின் தனி நடனம்,குழு நடனம் என்பனவும் உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களின் காத்தவராயன் சிந்துநடைக்கூத்தும் இடம் பெற்றன. (ஐ-159)





## குடமியன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா

கொடிகாமம்,டிசெ.6
குடமியன் அ.த.க பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது.
நிகழ்வில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த ஆறு மாணவர்களுக்கு மகேஸ்வரி வீரகத்தி ஞாபகார்த்த புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.
மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.
அதிபர் ம.வினாஷ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி அ.மனோரஞ்சிதன், சிறப்பு விருந்தினராக குடமியன் கிராம அலுவலர் அ.பிரதீபன், மதிப்புறு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி.பிரபாகரன், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-159)



## பயிற்சி வகுப்பு

வவுனியா,டிசெ.6
உள்ளூராட்சி மன்றங்களில் எவ்வாறு ஒவ்வொரு பிரஜைகளும் பங்காற்றுதல் எனும் தொனிப்பொருளில் பயிற்சி வகுப்பு ஒன்று அண்மையில் வவுனியாவில் இடம்பெற்றது.
வவுனியாவில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெற்ற நிகழ்வில் வளவாளராக நவரத்தன கென் நாயக்க கலந்து கொண்டார்.
தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் எல்.எஸ்.டி நிறுவனத்தினரால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.
சிறப்பு அதிதிகளாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க வடக்கு கிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாஜன், பருத்தித்துறைப் பிரதேச சபை உறுப்பினர் ரஜிதா விஜயழகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-160)



## வருடாந்த கலைவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.5
யாழ்ப்பாணம் இணுவில் பொதுநூலக சனசமூக நிலைய முன்பள்ளியின் கலைவிழா நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நூலக கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக உடுவில் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி.தி.வடிவாம்பிகை கலந்து கொண்டார்.
இதன்போது முன்பள்ளி மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. (ஐ)




# twitter

g .@murugan_itz

பின்பு பார்த்துக் கொள்ளலாம் எனத் தள்ளிப்போட்ட எந்தச் செயலும் அற்புதம் ஆனதாய் சரித்திரம் இல்லை.!

சப்பாணி @manipmp

எங்கே புத்திசாலித்தனமாக இருப்பது அபாயகரமோ அங்கே முட்டாள்தனமாக இருப்பது புத்திசாலித்தனம்.


சப்பாணி @manipmp

இறந்தவர்கள் 'லேட்'
இறக்காதவர்கள் 'லேட்டர்'

ஆர்வக்கோளாறு™

பொய்யால் சலிப்படையாதவர்கள் அரசியல்வாதிகள்! நம்பிக்கையால் சலிப்படையாதவர்கள் மக்கள் .!!

# சினிமாவில் இருந்து ஓய்வு பெறுகிறார் அமிதாப்பச்சன்




இந்தி நடிகர் அமிதாப்பச்சன் 1969இல் 'சாட்ஹிந்துஸ்தானி' படத்தில் அறிமுகமாகி சுப்பர் ஸ்டாராக உயர்ந்தார். 50 ஆண்டு கால சினிமா வாழ்க்கையில் 190 படங்களுக்கு மேல் நடித்து உலக ரசிகர்களை தன்பால் இழுத்து வைத்துள்ளார். இந்தி நடிகை ஜெயபாரதியைத் திருமணம் செய்து கொண்டார். பல தேசிய விருதுகளைப் பெற்று நாடாளு மன்ற உறுப்பினராகவும் பணியாற்றி உள்ளார்.

அமிதாப்பச்சனுக்கு இப்போது 77 வயது ஆகிறது. அவருக்கு சில மாதங்களாக உடல் நலக்குறைவு ஏற்படுவதும் பின்னர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்து மீண்டும் படப்பிடிப்புக்குச் சென்று நடிப்பதுமாக இருக்கிறார். இப்போது 2 இந்திப் படங்களில் நடித்து வருகிறார். பிரம்மஸ்திரா இந்திப் படத்தின் படப்பிடிப்புக்காக நீண்ட பயணம் மேற்கொண்ட அவரைக் காண வழிநெடுக ரசிகர்கள் திரண்டு நின்றனர். அதைப் பார்த்து சந்தோசப்பட்டார். இந்த நிலையில் நடித்தது போதும் இனிமேல் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்து இருக்கிறேன் என்று அமிதாப்பச்சன் அறிவித்து உள்ளார். இதுகுறித்து அவர் கூறும்போது, "எனது உடல் ஓய்வு கேட்கிறது. மனது ஒன்றை யோசிக்கிறது. ஆனால் உடல் இன்னொன்றைச் செய்கிறது. அதனால் இனிமேல் நடிப்பில் இருந்து ஓய்வு எடுத்துக் கொள்ள முடிவு செய்து இருக்கிறேன்" என்றார்.

# பொன்மொழிகள்

- எடுத்துச் சொல்வதை விட மற்றவர் முன் எடுத்துக் காட்டாக வாழ்வதே சிறப்பு!
- பொறாமை மடமைக்கு ஒப்பானது! போலித்தனமோ தற்கொலைக்கு ஒப்பானது!
- பட்டங்கள் மனிதனுக்குத் தரும் பெருமையைவிட, மனிதனால் பட்டங்கள் சிறப்புறுவதே நல்லது!
- பிறர் செய்த தீமைகளை அறிவுடையோர் பொறுத்துக் கொள்வர். அன்புடையோர் மன்னித்து மறந்து விடுவர்.
- தேவையில்லாமல் தாராளம் காட்ட வேண்டாம்! அது தீமையைப் பயக்கும்!
- நோய் வரும் வரை உண்பவன், நோய் தீரும் வரை உண்ணா நோன்பு கடைப்பிடிக்க நேரிடும்!
- 'நேரமில்லை' என்ற சொல், சோம்பேறித்தனத்தின் நாசூக்கான சொல்லாகும்!
- எண்ணங்கள் சிறந்தவை! அற்றைச் செயற்படுத்துகின்றமை அதனினும் சிறந்தது!
- சூழ்நிலைகளால் உருவாக்கப்பட்டவன் மனிதன் அல்லன். மனிதனால் உருவாக்கப்படுவதே சூழ்நிலை!






# மழை பெய்வதை யார் யார் எப்படி சொல்வார்கள்?

**இரும்பு வியாபாரி:** கனமா பெய்யுது
**கரும்பு வியாபாரி:** சக்கைப் போடு போடுது
**சலவைக்காரர்:** வெளுத்துக்கட்டுதுங்க
**நர்ஸ்:** நார்மலாதான் பெய்யுது
**பஞ்சு வியாபாரி:** லேசா பெய்யுது
**பொலிஸ்காரர்:** மாமூலா பெய்யுது
**வேலைக்காரி:** பிசுபிசுன்னு பெய்யுது
**ஜூஸ் கடைக்காரர்:** புழிஞ்சு புழிஞ்சு எடுக்குது
**டீ கடைக்காரர்:** ஆத்து ஆத்துன்னு ஆத்துது
**மதுக்கடைக்காரர்:** சும்மா கும்முன்னு பெய்யுது
**கோவில் பூசாரி:** திவ்யமா பெய்யுது
**செருப்பு கடைக்காரர் :** செம்ம அடி அடிக்குது
**மசாஜ் பார்லர்காரர்:** சும்மா புடிபுடின்னு புடிக்குது
**பேண்ட் வாத்தியக்காரர்:** கொட்டோ கொட்டுன்னு கொட்டுது
**மனைவி:** செடி அடி அடிக்குது
**கணவன்:** வாங்கு வாங்குன்னு வாங்குது...!

# சரியான கேள்வி



வேலைக்குப் போய் திரும்பி வந்த தன் அம்மாவிடம் 5 வயது சிறுமி கேட்டாள். அம்மா எங்கள் வீட்டு அலுமாரி சாவியை வேலைக்கார அம்மாவிடம் ஏன் கொடுத்து விட்டுப் போகவில்லை?

அதைப் போய் அவரிடம் கொடுப்பாங்களா?

அலுமாரியில் இருக்கும் நகை, பணம் எல்லாவற்றையும் ஏன் அவரிடம் கொடுத்துவிட்டுப் போகவில்லை.

அதெல்லாம் அவரிடம் கொடுக்கக்கூடாது.

உங்கள் ATM கார்ட்டை ஏன் அம்மா கொடுத்துட்டுப் போகவில்லை?

என்ன கேள்வி இது..? நீ சொல்வதெல்லாம் ரொம்ப முக்கியமான பொருள், அவற்றையெல்லாம் அவரிடம் கொடுக்கக் கூடாது.

அப்போ ஏம்மா என்னை மட்டும் அவரிடம் விட்டுட்டுப் போறீங்கள்?

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் நான் முக்கியமில்லையா?

# மகிழ்ச்சியின் எல்லை

முல்லாவின் வீட்டுக்கு அருகில் ஒரு செல்வந்தனின் வீடு இருந்தது. அவனிடம் ஏராளமான பணமும் மற்றும் வீடு வாசல், தோட்டம் துறவு என சொத்துக்களும் நிறைய இருந்தன. ஆனால் அந்தச் செல்வந்தன் ஒருநாள் கூட மகிழ்ச்சியாக இருந்ததில்லை.

முல்லாவைச் சந்திக்கும் போதெல்லாம், "என்னால் ஒரு நிமிடம் கூட மகிழ்ச்சியுடன் இருக்க முடியவில்லை. எப்பொழுது பார்த்தாலும் கவலையாகவும், கலக்கமாகவும் அல்லவா இருக்கிறது. நான் கொஞ்ச நேரமாவது மகிழ்ச்சியுடன் இருக்க முல்லா அவர்களே எனக்கு ஒரு யோசனை கூறக் கூடாதா?" என்று பரிதாபமாகக் கேட்டார்.

செல்வந்தன் ஒரு பெரிய பேழையில் தன்னுடைய பணத்தையெல்லாம் சிறு சிறு மூடைகளாகக் கட்டிப் போட்டு வைத்திருந்தான்.

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவன் அந்தப் பணப் பைகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துப் பார்த்து வைப்பான்.

முல்லா அவன் வீட்டுக்கு அடிக்கடி சென்று அவனுடன் பொழுது போக்காகப் பேசிக் கொண்டிருந்து விட்டு வருவது வழக்கம்.



அன்றும் அவர் வழக்கம்போல செல்வந்தன் வீட்டுக்கு வந்தார்.

அந்தச் சமயத்தில் செல்வந்தர் பணப் பெட்டியைத் திறந்து பணமூடைகளை எடுத்துப் பார்த்து விட்டு வைத்துக் கொண்டிருந்தார்.

"என்ன ஐயா செய்து கொண்டிருக்கிறீர்கள்" என்று கேட்டவாறு பணப்பெட்டி இருக்குமிடத்தை நோக்கி நடந்தார் முல்லா.

முல்லா வீட்டுக்குள் வருவதைக் கண்ட செல்வந்தன் அவசர அவசரமாகப் பணப் பைகளைப் பெட்டியில் வைத்துப் பூட்டத் தொடங்கினான்.

அப்போது அவனுடைய பணப் பைகளில்ஒன்று அவனை அறியாமலே பணப் பெட்டிக்கு அருகில் விழுந்து விட்டது.

செல்வந்தன் அதைக் கவனிக்கவில்லை ஆனால் முல்லா கவனித்தார்.

உடனே அவர் பாய்ந்து சென்று பணப் பையைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடினார்.

"ஐயோ என் பணப்பை போய் விட்டதே" என்று கூக்குரலிட்டவாறு முல்லாவைத் துரத்திக் கொண்டு செல்வந்தன் ஓடினான்.

முல்லா இரண்டொரு தெருக்கள் வழியாக வேண்டுமென்றே ஓடினார்.

செல்வந்தன் பணம் போய் விட்டதே என்று கூக்குரலிட்ட வண்ணம் முல்லாவைப் பின் தொடர்ந்து ஓடினான்.

முல்லா கடைசியாக செல்வந்தன் வீட்டுக்கே ஓடி வந்தார். பணப்பையை அவனுடைய பணப் பெட்டியின் மீது தொப்பெனப் போட்டார்.

செல்வந்தன் ஓடி வந்து பணப் பையைத் தூக்கிக் கொண்டு அப்பாடி இப்பொழுது தான் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது என்ற மலர்ந்த முகத்துடன் கூறினான்.

பிறகு "முல்லா அவர்களே எதற்காக என் பணத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினீர்கள்? இந்தப் பணம் கிடைக்காவிட்டால் என் உயிரே போயிருக்கும்" என்றான்.

"இப்பொழுது உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறதா?" என்று முல்லா கேட்டார்" மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை முல்லா பறிபோய் விட்டது என்று நான் நினைத்த பணம் திரும்பக் கிடைத்து விட்டதே! என் மகிழ்ச்சிக்குச் சொல்லவும் வேண்டுமா?" என்று கூறினான் செல்வந்தன்.

"எதற்காகப் பணத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினேன் என்று கேட்டீரல்லவா? உமக்கு கொஞ்ச நேரமாவது மகிழ்ச்சியை ஊட்டலாமே என்பதற்காகத்தான் பணத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினேன் உம்மால் எப்போதுமே மகிழ்ச்சியாக இருக்க முடிய வில்லை என்று கூறினீர் அல்லவா? அதற்காகத்தான் உமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டுமே என்று பணத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினேன்" என்றார் முல்லா.

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் இராசரத்தினம்

(முருகன் ஸ்ரோர்ஸ் - ஊர்காவற்றுறை)



காரைநகர் தன்னையை பிறப்பிடமாகவும் வேம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசரத்தினம் (முருகன் ஸ்ரோர்ஸ். ஊர்காவற்றுறை) நேற்று (05.12.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் ராசமணியின் அன்பு கணவரும் காலஞ்சென்றவர்களான பாலசுப் பிரமணியம். கந்தையா சரஸ்வதி ஆகியோரின் அன்பு தம்பியும் புஸ்பமலர். நவமலர். ரதிமலர். கிருபானந்தராசா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சச்சிதானந்தன். மோகனதாஸ், விக்னேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிலோஜன். நிலோஜினி. நிரஞ்ஜுனி. நிசாந்தன். நவமயூரன். தர்சினி. விதுசன். அன்பழகன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2019) வெள்ளிக்கிழமை நடைபெற்று ந.ப. 12.00 மணியளவில் தில்லை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**



### திருமதி பத்மாவதி இரத்தினலிங்கம்

மலேசியாவை பிறப்பிடமாகவும் தொண்டைமானாறு மற்றும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி இரத்தினலிங்கம் நேற்று (05.12.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - தங்கமணி தம்பதிகளின் அன்பு மகளும் தம்பு மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பு இரத்தினலிங்கத்தின் அன்பு மனைவியும் தனலிங்கம். மகேஸ்வரி. துரைலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும் கிருஷ்ணதாஸ் (சாந்தா மோட்டோர்ஸ்). சந்திரதாஸ் (தொண்டைமானாறு). குணசேகரன் (T.R குணசேகரன்). ஜெயசேகரன் (பொப்பியூலர் மோட்டோர் ஸ்ரோர்ஸ். முன்னாள் தலைவர். யாழ்ப்பாணம் .வணிகர் கழகம். முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சத்தியவாணி. திலகவதி. டயாமிளா. தேவிகா ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருஷாந்தன் நிஷாந்தன். அகல்யா. துவர்ஷன். அஷ்வினி. அஸ்மிலா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் யஸ்வின். அகரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (08.12.2019) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

## மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல் - 2020

**யாழ் மாவட்ட செயலகத்தால் 2020ம் ஆண்டிற்கு பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.**

1. **சுத்திகரிப்புச் சேவை** (Cleaning Service)
2. **புகைப்படப்பிரதி இயந்திர பராமரிப்பு** (Photo Copy Machine Maintenance Service)
3. **பாதுகாப்புச் சேவை** (Security Service )
4. **வளி பதனாக்கிகள் பராமரிப்பு சேவை** (Air Conditioner Maintenance Service )

❖ மேலதிக தகவல்களையும், விண்ணப்பப்படிவத்தினையும் செயலக பெறுகைகள் அலகில் (அறை இல.42) 09.12.2019 ஆந் திகதியிலிருந்து 23.12.2019ம் திகதிவரை அலுவலக நாள்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ஒவ்வொரு சேவைக்கும் ரூபா 500.00 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ஒவ்வொரு சேவைக்கும் ரூபா 5000.00 உம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

❖ செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக்கொள்ளப்பட்ட விவரங்களுக்கேற்ப தயாரிக்கப் பட்ட விண்ணப்பப் படிவங்களை ரூபா 5000.00 செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியுடன், **"தலைவர், பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரியிட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்ட சேவையினுடைய விவரத்தினை குறிப்பிட்டு 24.12.2019 ஆம் திகதி பி..ப. 02.30 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக செயலக பெறுகையலகிலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்த்தல் வேண்டும்.

❖ கேள்விகள் அன்றைய தினம் உடனடியாக பி.ப. 02.30 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

❖ பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**நா.வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்,**
**யாழ் மாவட்டம்.**

# புதிய அரசியல் தீர்வுக்கு செல்ல வேண்டியுள்ளது

கஜேந்திரகுமார் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ 6

இந்தியாவும் வெளிச் சக்திகளும் நாமும் ஒரு புள்ளியில் சந்திப்பதற்குத் தயாராக உள்ளோம். தமிழ் மக்களுக்கும் இந்தியா வுக்கும் இடையில் புரிந்துணர்வு வரக்கூடிய வகையில் மாற்றுத் திட்டத்துக்கு, புதிய அரசியல் தீர்வுக்கு நாம் செல்ல வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ.கஜேந்திரகு மார் வலியுறுத்தியுள்ளார்.

மேற்குறித்த தீர்வு இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் வகையிலும் தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கும் வகையிலும் புதிய அரசியல் தீர்வாகவே இருக்க முடியும். அப்படி நடந்தால்தான் தமிழ் மக்களின் நலன்களும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு நலன்களும் பாதுகாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒற்றையாட்சிக்குள் இருக்கும் 13ஆம் திருத்தத்தை தீர்வாக வலியுறுத்தினால் தமிழ் மக்கள் அதனை நிராகரிப்பார்கள் என்பது ராஜபக்சக்களுக்கு நன்றாகத் தெரியும்.

தற்போது கோத்தபாய ராஜபக்ச 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த மாட்டேன் என கூறியுள்ளார். தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லாத 13ஆம் திருத்தத்தையே வழங்கத் தயாரில்லாத, அதனையே மோசமாகக் குறைக்க விரும்புகின்ற ஒரு தரப்பு ஒருபோதும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யப்போவதில்லை. ஆனாலும் இலங்கை இந்திய ஒப்பந்தம் வேறு, 13ஆம்திருத்தம் வேறு. நாம் 13ஆம் திருத்தச் சட்டத்தையே தீர்வாக ஏற்றுக்கொள்ள மறுக்கின்றோமே தவிர ஒட்டுமொத்த இந்திய -இலங்கை ஒப்பந்தத்தையும் அல்ல.

இந்த நுணுக்கத்தை இந்தியா விளங்கிக்கொண்டு தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய, தமிழ் மக்களின் அபிலாசைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தக்கூடிய வகையிலே தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் அயலுறவுக் கொள்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கோருகின்றோம். மாற்றிக் கொள்ளாவிட்டால் ஈழத்தமிழ் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் ஒருபுறம் இருக்க இந்திய வல்லரசுக்கும் எதிர்காலத்தில் பாரதூரமான பெரும் பாதிப்புக்களை உருவாக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேககங்களும் இல்லை.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவுக்கோ அன்றி வேறு எந்தவொரு நாட்டுக்கோ வழங்கப்படக்கூடாதென்ற நோக்கத்து க்காகவே 1987 இல் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதாவது ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசு இந்த ஒப்பந்தம் ஊடாக, கேந்திர முக்கியத்துவம்' வாய்ந்த சொத்துக்களை, இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் மூன்றாந்தரப்பு நாடு ஒன்றுக்கு இந்தியாவின் அனுமதியில்லாமல் வழங்காது என்ற வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் இந்தஒப்பந்தத்தைமதிக்காமல்,நிராகரிக்கும் வகையில் இந்திய அனுமதி பெறாது சீன வல்லரசுக்கு அம்பாந்தோட்டை துறைமுகம் வழங்கப்பட்டுள்ளது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறையில் வைத்திருக்க வேண்டும் என்று வலியுத்துவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்ப்பு இல்லை. ஒப்பந்தத்தில் சில குறைபாடுகள் இருக்கலாம். எனினும் இலங்கை இந்திய ஒப்பந்தம் தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என்றுவலியுறுத்துவதனை நாம் எதிர்க்கவில்லை. என்றுள்ளது. (த)

## மரண அறிவித்தல்கள்




### தம்பு ரவீந்திரன்

காளி கோவிலடி கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு ரவீந்திரன் நேற்று **(05.12.2019)** வியாழக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

### செல்லையா முருகேசு



காரைநகர் மணல்காட்டை பிறப்பிடமாகவும், கல்வியங்காடு வீரபத்திரர் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது பிரேசர் அவன்யு, தெஹிவளையில் வசித்து வந்தவருமாகிய செல்லையா முருகேசு கடந்த **(03.12.2019)** செவ்வாய்க் கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரதநாயகம்- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயேந்திராணியின் பாசமிகு கணவரும், டுக்ஷனின் அன்புத் தந்தையும், ஜெயந்தினி, ரஜீவன், பிரகாஷ் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுவாஷிகா, சாஷிகன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், கனகம்மா மற்றும் சரஸ்வதி, காலஞ்சென்ற அம்பலவாணர், சண்முகம், ஏரம்பமூர்த்தி, கந்தையா, பாக்கியம், காலஞ்சென்ற தெய்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசகுலேந்திரன், காலஞ்சென்ற ஶ்ரீதரன் மற்றும் கமலராணி, குலநாயகம், கலாராணி, லதாராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் **08.12.2019** ஞாயிற்றுக் கிழமை முற்பகல் **11.00** மணிக்கு இல.**19B**, பிரேசர் அவன்யு, தெஹிவளையில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CS2000(16/17)

**தகவல்: குடும்பத்தினர்**
**077 310 4294**


## வீடு வாடகைக்கு விடப்படும்

**கோப்பாய் கல்வியியற் கல்லூரிக்கு** அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று **நாள், கிழமை, மாத, வருட வாடகைக்கு விடப்படும். வாகன தரிப்பிட வசதிகளும்** உண்டு. **(அரச அலுவலகங்கள், களஞ்சிய சாலைகள், தனியார் நிறுவனங்களுக்கும்** வழங்கப்படும்)

**077 613 9931, 071 011 0590**

(cs.29740)

## வாடகைக்கு விடப்படும்

**மண்டபங்கள்** மற்றும் **பொது வைபவங்கள்** சிறப்பாக நடைபெற **மின் பிறப்பாக்கி (Generator 60 Kva Perkins)** எங்களிடம் தயாராகவுள்ளது. ஒரு **மணித்தியாலத்திற்கு 3000/=** மட்டுமே. **Stand by - 4000/=**

தொடர்புகளுக்கு:- அ.செந்தூரன்
காளி கோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.
**077 613 9931, 077 528 8555**

(cs.29741) (13)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**பழைய மாணவர் சங்கம்** (Alumni Association)
**மீளச்செயற்படுத்துவதற்கான ஒன்றுகூடல்**

**காலம் : 21.12.2019 சனிக்கிழமை காலை 10.00 மணி**
**இடம் : விஞ்ஞான பீட பௌதீகவியல் விரிவுரை மண்டபம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்தினை திறம்பட மீளச் செயற்படுத்தும் முகமாக மேற்படி ஒன்றுகூடல் நிகழ்வானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்று வெளியேறிய மாணவர்கள் அனைவரையும் இவ்வொன்று கூடல் நிகழ்வில் பங்கேற்று பழைய மாணவர் சங்கத்தினை திறம்பட செயற்பட உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**பதிவாளர்**

(in.11893)(13)

## கேள்விஅறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகர சபை
## சபை நிதி- 2019

01. யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

02.கேள்வியானது தேசிய போட்டிவிலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

03.ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை, இல.04/2016(i)ற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வட மாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காதபட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.

04.தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 ல் காட்டப்பட்டுள்ளது.

05.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை **ஆங்கில மொழியில் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 2216468, 021 2222019)** என்னும் முகவரியிலிருந்து 06.12.2019ம் திகதியில் இருந்து 20.12.2019ம் திகதிவரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1,000.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை. பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

06.கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 23.12.2019ம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07.கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (10.02.2020) நாள்களாகும்.

08.கேள்விப் பிணைவைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

09 கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 16.12.2019 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.

10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | நிதி | ஒப்பந்தக் காலம் (மாதம்) | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1 | JMC/WD/CF (Bu)/2019- 112 | Modification of Kurunagar water Tank to Utilize Muster point | 1.106 | Council Fund | 2 | C9 & C8 | 12,000.00 | 09.03.2020 |

**ஆணையாளர்,**
**பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவர்**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

**05.12.2019**

(IN/11891) (11)

integrity icon Sri Lanka

இது உங்களுக்கான தருணம் !
இவ்வருடத்திற்கான நேர்மையான அரச அலுவலரை கௌரவிக்கும்
இண்டர்கிரிட்டி ஐக்கன் 2019 ற்கு
உங்கள் வாக்கை பிரயோகியுங்கள்!

ICON<SPACE>வேட்பாளரின் இலக்கத்தை குறிப்பிட்டு 0115882626 க்கு அனுப்பவும்.

திரு. ஏ.எம்.ஏ. அமரசிங்ஹ — ICON<SPACE>1
திரு. பி.கே.பி. சந்திர கீர்த்தி — ICON<SPACE>2
திரு. கே. குணநாதன் — ICON<SPACE>3
செல்வி. பி.ஏ.சி. பிரியதர்ஷனி — ICON<SPACE>4
வைத்திய கலாநிதி டி. சத்தியமூர்த்தி — ICON<SPACE>5

டிசம்பர் மாதம் 6ம் திகதி மதியம் 12 மணிக்கு முன்பதாக உங்கள் வாக்கை வழங்குங்கள் !
இண்டர்கிரிட்டி ஐக்கன் 2019 விருது வழங்கும் வைபவம் டிசம்பர் மாதம் 9ம் திகதி நடைபெறவுள்ளது.

இண்டர்கிரிட்டி ஐக்கன் 2019ன் இறுதி போட்டியாளர்கள் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு www.integrityicon.lk
ஒரு SIM கார்ட்டிற்கு ஒரு வாக்கு மட்டுமே செல்லுபடியாகும் வழமையான SMS கட்டணம் மட்டுமே.

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity
Dialog | Diakonia | Norwegian Ministry of Foreign Affairs | accountabilitylab | Taiwan Foundation for Democracy | Open Society Foundations

மாபிள் வேலை
தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும்
1 சதுர அடி - 40 ரூபா
077 334 1281

MAJESTIC CINEPLEX

குண்டு — Jaffna Bronze — 10.15AM | 1.30PM 9.45PM (Fri/Sat)
இருட்டு — Jaffna Platinum / Silver — 10.00AM | 4.00PM / 10.15PM (Fri/Sat)
அடுத்த சாட்டை — Jaffna Silver — 10.00AM
எனை நோக்கி பாயும் தோட்டா — Jaffna Platinum — 1.00PM | 7.00PM | 10.00PM (Fri/Sat)
FROZEN II — Jaffna Bronze — 4.00PM (Tamil) | 7.15PM (English)
வர்மா — Jaffna Silver — 4.30PM
Jaffna Silver — 1.30PM | 7.45PM

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
011 5 999 999
CEYLON THEATRES Since 1928
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

## பச்சிலைப்பள்ளி சபையினரும் டெங்கு ஒழிப்பில் ஈடுபட்டுள்ளனர்

கிளிநொச்சி, டிசெ. 6

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினர் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

நாட்டில் பல பாகங்களிலும் டெங்குத் தொற்றுக் காரணமாகப் பல உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன.

இந்த நிலையில், டெங்குத் தொற்றைத் தடுக்கும் நோக்கில் பிரதேச சபையினரால் பற்றைக்காடுகளாக உள்ள உரிமையாளர் அற்ற காணிகள் மற்றும் அரச காணிகளைத் துப்புரவு செய்யும் பணிகள் இடம்பெற்றுவருகின்றது என்று சபைத் தவிசாளர் சு.சுரேன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 25 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. தவிசாளர் மட்டுமன்றி உப தவிசாளர் கயன், உறுப்பினர்கள் .ரமேஷ், வீரவாகுதேவர் ஆகியோரும் பார்வையிட்டு வழிகாட்டி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-6)

வேலையாள்கள் தேவை
அலுவலகத்துக்கு சுத்திகரிப்பு பணிக்கு ஆண்.பெண் இருபாலாரும் தேவை. வயதெல்லை 21 - 45
(யாழ். மாநகரசபைக்கு உட்பட்டோர் விரும்பத்தக்கது)
077 497 5962


காணித்துண்டுகள் விற்பனைக்கு
சுன்னாகம் சந்திக்கும், புன்னாலைக் கட்டுவன் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் வீதியோரமாக 45 அடி அகலம் கொண்ட 2 பரப்புக்காணித் துண்டுகள் (பரப்பு 800.000/=) முதல் 1200.000 /= வரை)
விற்பனைக்கு உண்டு.
077 386 7696

அத்தியாவசிய பொருட்கள் தொடர்பாக
Cargills food city
அதிகுறைந்த விலைகள்

ரூ. 112 மைசூர் பருப்பு 1kg*
ரூ. 92 சம்பா சிவப்பு பச்சரிசி 1kg
ரூ. 95 வெள்ளை நாட்டரிசி 1kg
ரூ. 195.00 மைசொய்ஸ் மெக்கரல் 425g
ரூ. 17.00 பெரிய வெங்காயம் 100g
ரூ. 3.80 வட்டக்காய் 100g
ரூ. 8.00 புளி வாழைப்பழம் 100g
ரூ. 140.00 நடுத்தரவு இறால் 100g
ரூ. 99 வெள்ளை சீனி 1kg*
சேமிப்பு ரூ. 50.00 — ரூ. 445.00 Fortune மரக்கறி எண்ணெய் 1Ltr
சேமிப்பு ரூ. 44.00 — ரூ. 246.00 வட்டவல தேயிலை 200g
சேமிப்பு ரூ. 21.00 — ரூ. 149.00 மெகி ... 325g
சேமிப்பு ரூ. 20.00 — ரூ. 180.00 மெலிபன் ... கிறக்கர் 500g

Cargills
வீடு செல்லும் போது

# மரண அறிவித்தல்கள்



தோற்றம் 19 . 04 . 1963

மறைவு 04 . 12 . 2019

## வீரசிங்கம் புஸ்பாகரன்

துண்டி வீதி, கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் புஸ்பாகரன் நேற்றுமுன்தினம் (04.12.2019) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - காந்திமதி தம்பதியரின் அன்பு மகனும், அல்வாயைச் சேர்ந்த காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை தம்பதியரின் மருமகனும், சாந்தினியின் அன்புக் கணவரும், பிரேமராணி, காலஞ்சென்ற நவீந்திரன் மற்றும் விமலராணி, விஜயராணி, செல்வராணி (திருப்பதி), விஜயேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசலிங்கம், ரமணானந்தன், சிவலிங்கம், உதயகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

அன்னாரின் **துக்க நினைவு மைத்துனரான சிவலிங்கம் அவர்களின் கொழும்புத்துறை இல்லத்தில் நடைபெறும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.337, கொழும்புத்துறை வீதி, கொழும்புத்துறை.**

(cs.29744) (13.17)

**தகவல்: சி. சிவலிங்கம்**



## நாகலிங்கம் குமாரசாமி

**(ஓய்வூதியர் - யாழ் கச்சேரி காணிப்பதிவகம்)**

நெடுந்தீவு கிழக்கினைப் பிறப்பிடமாகவும் 93/6, இராசாவின் தோட்ட வீதி யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் குமாரசாமி (ஓய்வூதியர் - யாழ்.கச்சேரி காணிப்பதிவகம்) நேற்று (05.12.2019) வியாழக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அம்பலம் - சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் நாகம்மா அவர்களின் அன்புக்கணவரும் சுந்தரகுமார் ( குமார், யாழ். நில அளவைத்திணைக்கள ஊழியர்) காலஞ்சென்ற புஸ்பகுமாரி மற்றும் வசந்தகுமாரி, மல்லிகாகுமாரி, இராசகுமாரி, ஆகியோரின் பாசமிகு தந்தையும் சு.கலாநிதி, மு.சதானந்தம், செல்வகுமார், ந.அஜித்ராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும் வைத்தியநாதன், தர்மலிங்கம், விஜயரத்தினம், குணரத்தினம், கமலாம்பிகை காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, துரைராஜசிங்கம் முத்துக்கிருஸ்ணன், நடராசா, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான தெய்வானை, தங்கமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரணவன், பிரணவி, பிரியதர்சினி, சர்மிலன், விதுசா, கீர்த்திகா, அனோர்ஜன், அபிஷேக் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2019) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணிக்கு நடைபெற்று .பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல 93/6, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**

உதயன்

விளம்பர தொடர்புகளுக்கு

advt@uthayan.com, 0214931111

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியையான

**திருமதி மேரி கலிஸ்ரா ஜெயரஞ்சன்**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சிலுவைராசா**

**செபமாலையம்மா (நேசமணி)**


அவர்கள் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்.

யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.



## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் திருமதி

## பார்வதிப்பிள்ளை முத்துத்தம்பி

தோற்றம் 25.04.1933

மறைவு 06.11.2019

கடந்த 06.11.2019 புதன்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தாயாரின் வீட்டுக் கிருத்தியம் இன்று [06.12.2019] வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்திலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வுகள் நியூலட்சுமி மண்டபத்திலும் [இல.195A, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி] நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

CS29750(16/17)

**இல.32, பொற்பதி வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## இராமு சுப்பிரமணியம் (இரத்தினம்)

**(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)**



தோற்றம் 12.12.1938

மறைவு 05.12.2019

மயிலங்காடு, ஏழாலை தெற்கு, ஏழாலையை பிறப்பிடமாகவும் இலந்தகட்டி ஏழாலை கிழக்கு, ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இராமு சுப்பிரமணியம் நேற்று (05.12.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராமு - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்புப் புதல்வனும் சுசிலாதேவியின் (லீலா) அன்புக்கணவரும் கபிலன் , யாழினி (பிரான்ஸ்), பரணன் (மிருசுவில் - Paran net com உரிமையாளர்) காலஞ்சென்ற தமிழவன், காலஞ்சென்ற தமிழினி, சிவராமன் (கிராம அலுவலகர், J/208 மற்றும் Ram net Com உரிமையாளர்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2019) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று காடாகடம்பை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இலந்தகட்டி, ஏழாலை கிழக்கு, ஏழாலை**

**தகவல் : குடும்பத்தினர்**

## திருமதி சத்தியபாமா லோகேஸ்வரன்



யாழ்.நல்லூர் தெற்கு, கச்சேரி - நல்லூர் வீதி, அரியாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பாக்கியம் தம்பதிகளின் நான்காவது புதல்வியும், காலஞ்சென்றவர்களான யாழ். கச்சேரி கிழக்கு வீதி அரியாலையைச் சேர்ந்த சுப்பையா சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், லண்டன் ஐபிசி வானொலி ஆகியவற்றில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற உங்களில் ஒருவன் லோகேஷ் இன் அருமை மனைவியுமாகிய 'கன்னிகா' என செல்லமாக அழைக்கப்பட்ட திருமதி சத்தியபாமா லோகேஸ்வரன் கடந்த 01.12.2019 ஞாயிற்றுக்கிழமை மாலை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் கலைமதி (நோர்வே), கலைரதி (கனடா), மதுரா (லண்டன்), கலைநிதி (லண்டன்), கலைஅரசி (நீஸ்- பிரான்ஸ்), அநுரா (நீர்கொழும்பு) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்றவர்களான அன்னலெட்சுமி, துரைராஜசிங்கம் ருக்மணி (சதிலீலா), இராசாத்தி, இராமநாதன் (மயில்சண்), காலஞ்சென்ற ரங்கநாதன் மற்றும் கனடாவைச் சேர்ந்த பதி ஸ்ரீரங்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08-12-2019 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் இல. 96. இராமநாதன்வீதி, நாயன்மார்கட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- மகன் அநுரா**

**077 325 9463**

*Kalai Aham Graphics*

"இம்முறை ஏதோ ஒரு காரணத்தால் கை நழுவிய வெற்றி இதோ இன்னும் ஒரு முறை கொஞ்சம் விழிப்புணர்வோடு முயற்சித்தால் கிடைத்துவிடும்" - ஒலிவர் கோல்ட்ஸ்மித்


# தோல்வி என்பது பதற்றமா? பரவசமா?

ப்ஜிலா ஆசாத்

நான் எது செய்தாலும் தோல்வியில் முடிகின்றது. அடுத்தடுத்த தோல்வி தந்த பாதிப்பால் இன்று என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. ஏதாவது செய்யலாம் என்று நினைத்தால் எனக்குள் நடுக்கமும், பதற்றமும், பயமும் ஏற்படுகின்றன. வெற்றி என்பது இனி என் வாழ்க்கையில் சாத்தியமே இல்லையா? எத்தனை முறை தோற்றோம் என்று எண்ணாமல், ஏன் தோற்றோம் என்று எண்ணினால் அடுத்த முறை நிச்சயம் உங்களுக்கு வெற்றிதான்.

வெற்றிக்கும் தோல்விக்குமான இடைவெளி 'இன்னும் ஒருமுறை முயல்வோம்' என்பதில் இருக்கிறது என்கிறார் பிரிட்டன் எழுத்தாளர் ஒலிவர் கோல்ட்ஸ்மித். "இம்முறை ஏதோ ஒரு காரணத்தால் கை நழுவிய வெற்றி இதோ இன்னும் ஒரு முறை கொஞ்சம் விழிப்புணர்வோடு முயற்சித்தால் கிடைத்துவிடும்" என்று கூறுகிறார்.

நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான கருத்



தும் இருக்கிறது. எந்த ஒரு முயற்சியும் வெற்றி அடையாமல் முடிவடைவது இல்லை. நாம் ஆரம்பிக்கும் எந்தச் செயலும் வெற்றி அடைந்தால்தான் முடிவுறுகிறது. இறுதி முயற்சி உங்கள் விழிப்புணர்வு சார்ந்து இருக்கிறது என்று அறிவுறுத்துகிறார்.

நீங்கள் நினைத்த நேரத்தில், முயற்சித்த தருணத்தில் கிடைக்காத வெற்றியை, தோல்வியாகவோ அல்லது வெற்றிக்கான படிக்கல்லாகவோ உருமாற்றுவது உங்கள் கையில்தான் இருக்கிறது. தோற்ற விடயங்களை குற்ற உணர்ச்சி இல்லாமல் அலசிப் பார்த்தால், மீண்டும் மீண்டும் முயன்றதில் அந்த விடயத்தில் நீங்கள் எத்துணை வல்லுநராகி இருக்கிறீர்கள் என்பது உங்களுக்கே புரியும்.

தோல்வி அடுத்த வெற்றிக்கான ஓர் அத்திபாரம். அத்திபாரம் எப்படி மண்ணுக்கு கீழே போடப்படுமோ அதுபோன்று வெற்றியைத் தராத முயற்சிகள் உங்கள் உழைப்புக்கான அத்திபாரமாக, வெளியில் தெரியாமல் உங்களை உறுதியாக்கி இருக்கும். இதை உணர்ந்து கொண்டால், பின்னிழுக்கும் தோல்வி, எப்படி வில்லின் நாணை பின்னிழுத்து விட்டால் அம்பு சீறிப் பாயுமோ அது போல் உங்களை அதிவேகமாக வெற்றிப் படிகளில் ஏற்றி விடும்.

ஆனால், கீழே விழுந்து விடாதீர்கள் என்று சொல்லி வளர்க்கப்படுவதால், விழுவதே பெரும் தவறு என்று பதறுகிறோம். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் கீழே விழுந்து விட்டால் அப்படியே அவமானத்தில் நாம் வெட்கித்துப் போகிறோம். ஏதோ மாற்ற முடியாத பெரும் தவறு செய்து விட்டது போன்று மிகப் பெரும் குற்ற உணர்வுக்கு உள்ளாகி, எங்காவது நம் முகத்தை ஒளித்துக் கொள்ள முயற்சிக்கிறோம்.

பல சமயங்களில் முதல் முறை தோல்வியில் ஏற்படும் அவமானமும் பதற்றமும் பயமுமே அடுத்தடுத்த தோல்விகளை விதைக்கிறது.

விழுந்துவிடக் கூடாது என்ற கவனத்துடன் இருப்பது சரிதான். அப்படி ஆசைப்படுவதிலும் தவறு இல்லை. ஆனால் விழவே கூடாது என்று நினைப்பது பேராசை மட்டுமல்ல யாருக்குமே சாத்தியமில்லாத நிராசை. அது மனித சக்திக்கு அப்பாற்பட்டது. முதலில் உங்களுக்கு நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள், விழுவது தவறல்ல, அதில் எந்த அவமானமும் இல்லை. விழுந்தாலும் எவ்வளவு விரைவாக எழுந்திருக்கிறோம் என்பதில் தான் வெற்றி இருக்கிறது.


சிறு குழந்தை நடை பழகுவதை பார்த்திருக்கிறீர்களா? தானே சீராக நடக்கும் முன் அது எத்தனை முறை கீழே விழுகிறது. அவ்வாறு விழும்போது குழந்தை என்ன செய்கிறது என்று கவனித்திருக்கிறீர்களா? ஒரு குழந்தை கீழே விழுந்தால், நீங்கள் பதறாத வரை அது அழுவது இல்லை. அழகாய் நிமிர்ந்து அருகில் உள்ளவர்களைப் பார்த்துச் சிரிக்கும். அதாவது நான் புதிதாக ஒன்றை முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். அதில் முன்னேற்றம் தெரிகிறது என்று சொல்லாமல் சொல்வதைப் போல. அத்தோடு நிற்காமல் உடனே எழுந்து மறுபடி நடக்க முயற்சிக்கும். இது அந்தக் குழந்தையின் தாயோ அல்லது வேறு யாரோ இன்றைக்கு இவ்வளவு போதும் என்று அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொள்ளும் வரை நடக்கும். குழந்தை தானாக நடை பழகும் தன் முயற்சியை நிறுத்தாது. இதில் ஒரு பெரிய வாழ்வியல் தத்துவத்தையே இயற்கை குழந்தைக்குப் போதித்திருப்பதையும் அந்தக் குழந்தை எமக்கு போதிப்பதையும் என்றாவது உணர்ந்திருக்கிறீர்களா?

எடிசன் மின்குமிழைக் கண்டுபிடிப்பதற்கு முன்னர் ஆயிரம் முறை தோற்றார். ஆனால் அந்தச் சாதனையாளர் ஆயிரம் சோதனை செய்து மின்குமிழைக் கண்டுபிடித்தேன் என்கிறார். அவர் சாதனையின் இரகசியம். இப்படித் தோல்வியை நாம் பாடமாக எடுத்துக் கொள்ளும்போது அது வெற்றியில் முடிகிறது. தோல்வியைக் கண்டு துவண்டு ஓடும்போது, பயம், பதற்றத்தில் வந்து விடுகிறது.

தோல்வியிலிருந்து நாம் கற்றுக் கொள்ள முயலாமல் பதற்றத்தை தொற்றிக் கொள்ள அனுமதிக்கும்போது, முதலில் நாம் ஏதோ தவறிழைத்து விட்டதாகத் தோன்றும். பின்னர் எமக்கு எதுவும் சரியாகச் செய்யத் தெரியாது என்று மனம் நம்பத் தொடங்கும். இது, நாம் சுதாரிப்பதற்குள் ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த கதையாய் ஆழ் மனமெங்கும் வியாபித்து எம்மை செயலாற்ற விடாமல், பயமும் பதற்றமுமான மன அழுத்தத்தில் விட்டுவிடும். இதுவே தோல்வியை இயல்பாய் ஒரு பாடமாய் எடுத்துக் கொள்ளும்போது அது எம் மனதுக்கு முன்னிலும் சிறந்த வெற்றிக்கான வீரிய விதையாகி விடுகிறது.

எண்ணங்கள் சரியாக இருந்தால், மன நிலையில் உறுதி இருந்தால் எந்தத் தோல்வியையும் வெற்றியாக மாற்றி விடலாம். சரித்திரம் படைக்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் இது சாத்தியமானது என்கிறது உளவியல்.

> "தோல்வி அடுத்த வெற்றிக்கான ஓர் அத்திபாரம். அத்திபாரம் எப்படி மண்ணுக்கு கீழே போடப்படுமோ அது போன்று வெற்றியைத் தராத முயற்சிகள் உங்கள் உழைப்புக்கான அத்திபாரமாக, வெளியில் தெரியாமல் உங்களை உறுதியாக்கி இருக்கும். இதை உணர்ந்து கொண்டால், பின்னிழுக்கும் தோல்வி, எப்படி வில்லின் நாணை பின்னிழுத்து விட்டால் அம்பு சீறிப் பாயுமோ அது போல் உங்களை அதிவேகமாக வெற்றிப் படிகளில் ஏற்றி விடும்.



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : .news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# முதலீட்டுக்கு அவசியம் நம்பிக்கை, உறுதிப்பாடு

இலங்கையில் முதலிட வருமாறு உலக நாடுகளுக்கு மீண்டும் ஒருதடவை அழைப்பு விடுத்துள்ளார் அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச. தனது உத்தியோகபூர்வ கீச்சகத்தில் நேற்றையதினம் இந்த அழைப்பை விடுத்தார் அரசதலைவர். இலங்கையின் அடையாளங்களுக்கு மதிப்பளித்து இலங்கை மீது நம்பிக்கை வைத்து இந்தியா, சீனா உள்ளிட்ட உலக நாடுகள் இலங்கையில் முதலிட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார் அவர்.

இலங்கை, மிகப்பெரும் கடன் நெருக்கடியில் சிக்கியுள்ளது என்றவாறாகப் பல்வேறு கருத்துக்களை இந்திய பொருளியல் நிபுணர்களும், உலகின் பொருளாதார வல்லுநர்களும் ஏலவே வெளியிட்டுள்ளனர். இந்த இமாலய நெருக்கடியில் இருந்து மீண்டெழுவதற்கு அந்நிய முதலீடுகளே முதன்மைத் தேவை. இத்தகைய தொரு நிலையில் அரசதலைவராகப் பொறுப்பேற்றதன் பின்னர் 'வெளிநாட்டு முதலீடு' என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றார் கோத்தபாய.

வெளிநாட்டு முதலீட்டின் அவசியத்தை வலியுறுத்தும் கோத்தபாய ராஜபக்ச, அதற்குரிய சூழலியல் காரணிகள் இலங்கையில் நிலவுகின்றனவா என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

அண்மையில் இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலுக்கான பரப்புரைகளில், கோத்தபாய ஆட்சிக்கு வந்தால் வெள்ளைவான் கலாசாரம் மீண்டும் புத்துயிர்ப்புப் பெறும், காணாமல் ஆக்கப்படுதல், படுகொலைகள் என்பன நிகழும், ஊடக அடக்குமுறைகள் தொடரும் என்றெல்லாம் வலியுறுத்தியது சஜித் பிரேமதாஸ அணி. இந்தப் பின்னணியில் ஆட்சிப்பீடம் ஏறிய கோத்தபாய ராஜபக்ச வெறும் இரண்டே வாரங்களில் எதிரணியினரின் குற்றச்சாட்டை படிப்படியாக மெய்ப்பித்து வருகின்றார்.

சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றிய பெண் அதிகாரியொருவர் கடத்தப்பட்டதாகச் சொல்லப்படும் விடயம் இலங்கையில் மட்டுமல்லாது உலக அளவில் பூதாகரமாகியுள்ளது. 'இலங்கையில் ஊடக அடக்குமுறைகள் ஆரம்பித்துள்ளன. தேடுதல்கள், அச்சுறுத்தல்கள், விசாரணைகள் என்பவற்றை எதிர்கொண்டுள்ள இலங்கை ஊடகவியலாளர்களின் துயரத்தை நாம் பகிர்கின்றோம்' என்று எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு கவலை தெரிவித்துள்ளது. இத்தகையதொரு நிலையில் இலங்கையில் முதலிடுவதற்கு எவ்வாறு பன்னாட்டுச் சமூகம் முன்வரும் என்பதை கோத்தபாய அரசு சிந்திக்க வேண்டும்.

ஊழலும், வணிகக் கொள்ளையும், உயிர்த்தஞாயிறு தாக்குதலும் இலங்கையில் பொருளாதாரத்தை பெரும் பின்னடைவுக்கு உட்படுத்தியுள்ளன. சீனத்துக் கடன் இலங்கையின் பொருளாதார மீட்சியை மேலும் மேலும் தாமதத்துக்கு உட்படுத்தி வருகின்றது. இவற்றிலெல்லாம் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு அரச தலைவர் என்ற வகையில் கனதியான நடவடிக்கைகளை கோத்தபாய முன்னெடுக்க வேண்டும். இலங்கையில் இருக்கும் அரசியல் நெருக்குவாரங்களுக்கு, இலங்கை மீதான குற்றச்சாட்டுக்க்ளுக்கு உரிய பதிலை வழங்காமல் வெறும் 'முதலீட்டு அழைப்புக்களை' விடுத்துக்கொண்டிருப்பதால் பயனில்லை. இது அவருக்குப் புரியட்டும்.



# சிங்களவர், தமிழர் தலைவிதியை தீர்மானிக்கப்போகும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தல்

இந்துமதி

அடுத்த ஆண்டு மார்ச் மாத ஆரம்பத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் ஏப்ரல் மாத இறுதிப் பகுதியில் தேர்தல்கள் இடம்பெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவித்துள்ளார். 2015ஆம் ஆண்டும் அரச தலைவர் தேர்தலும் நாடாளுமன்றத் தேர்தலும் அடுத்தடுத்துச் சில மாத இடைவெளியில் இடம்பெற்றிருந்தன.

அரச தலைவர் தேர்தலில் சஜித் பிரேமதாச தோல்வியடைந்தமைக்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும் அப்போதைய அரசின் மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகவே தோல்வி ஏற்பட்டது. அரச தலைவர் ஒரு கட்சியையும், தலைமை அமைச்சர் வேறொரு கட்சியையும் சேர்ந்தவர்களாக இருந்தமை ஒற்றுமையீனத்துக்கு வழி வகுத்துவிட்டது. மக்களுக்குரிய சேவைகளை உரியவகையில் அரசால் முன்னெடுக்க முடியவில்லை. இது மக்களின் அரசின் மீதான வெறுப்பை அதிகரித்துவிட்டது. இதன் பிரதிபலிப்பை அரச தலைவர் தேர்தலில் காணமுடிந்தது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நீண்ட காலமாகவே பதவிப்போட்டி இடம்பெற்றுவந்துள்ளது. இன்றுவரை அது நீடிக்கவே செய்கின்றது. ரணில் விக்கிரமசிங்க கட்சியைத் தொடர்ந்து தமது ஆதிக்கத்துக்குள் வைத்திருக்கவே விரும்பியதால் கட்சிக்குள் ஒற்றுமையீனம் ஏற்பட்டது.

மைத்திரிபால சிறிசேனவை அரச தலைவர் பதவியில் அமர்த்தியதில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், சந்திரிகா அம்மையாருக்கும் பெரும்பங்கு இருந்தது. ஆனால் தமது பதவியின் இறுதிக் காலத்தில் இவ்விருவரையும் மைத்திரி ஓரம் கட்டிவிட்டு மகிந்த தரப்பினருடன் இணைந்து கொண்டார். ஆரம்பத்தில் சஜித்துக்கு ஆதரவு வழங்குகின்றேன் என்று கூறிய மைத்திரி பின்னர் தமது மனதை மாற்றிக் கொண்டார்.

வடக்கு- கிழக்கிலிருந்து சஜித்துக்கு வழங்கப்பட்ட ஆதரவு தெற்கில் தவறாகச் சித்திரிக்கப்பட்டு சிங்கள மக்களின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. ஐக்கிய தேசியக் கட்சியினர் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளைப் பெரிதும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். அரச தலைவர் தேர்தலில் சுமார் 55 இலட்சம் வாக்குகளைப் பெற்ற அந்தக்கட்சி விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தல் இடம்பெற்றால் கணிசமான நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்புள்ளது.

இதனால் மகிந்த தரப்பினர் எதிர்பார்க்கின்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அவர்களால் அடைய முடியாது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லாமல் செய்வதே மகிந்த தரப்பின் முழு நோக்கமாகவும் உள்ளது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முஸ்லிம்கள் அங்கம்வகிக்காத அமைச்சரவையொன்று தற்போது பதவியேற்றுள்ளது. முஸ்லிம் தரப்பினர் பெரும் விரக்திக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலைத் தமிழர்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றனர் என்பது பெரிய கேள்வியாகவே உருவெடுத்துக் காணப்படுகின்றது. கடந்த தடவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் ஓரளவு கணிசமான ஆசனங்களைக் கொண்டிருந்ததாலும் தெற்கில் நிலவிய அரசியல் குழப்பங்களாலும் சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்தது.

தமிழரொருவர் இரண்டாவது தடவையாக அந்தப் பதவியில் அமர்வதற்கான வாய்ப்பும் கிடைத்தது. இனிமேல் அவ்வாறானதொரு வாய்ப்புக் கிடைப்பது துர்லபமே. தமிழர்கள் பல பிரிவுகளாகப் பிளவுண்டு நிற்பதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. சம்பந்தன், ரவூப் ஹக்கீம், மனோ கணேசன் ஆகியோர் ஒன்றிணைந்து நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளப்போகின்றனர் என்று தகவல் வெளிவந்துள்ளது. ஆனால் இது சாத்தியமானதா? என்ற கேள்வியும் கூடவே எழுகின்றது.

இதனைக் காட்டிலும் தமிழர்கள் அனைவரும் இணைந்து தேர்தலைச் சந்தித்தால் அதிக பயன் கிடைக்குமென்ற சிந்தனையும் மனதில் எழுகின்றது.

ஆனால் தமது இனத்தின் நன்மையை விடவும் பதவி ஆசைக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்படுவதால் தமிழர்களை ஒற்றுமைப்படுத்துவதென்பது சாத்தியமில்லாத ஒன்றாகவே மாறிவிட்டது. இதனால் ஏற்படக்கூடிய தீயவிளைவுகளை மக்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் சிங்கள மக்களுக்கு மட்டுமல்லாது தமிழர்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே அமையப் போகின்றது.

ஏனென்றால் அவர்களின் அரசியல் எதிர்காலம் இந்தத் தேர்தலிலேயே அடங்கியுள்ளது. அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நாட்டின் தலைவிதியை இந்தத் தேர்தலே தீர்மானிக்கப்போகின்றது.

# மத வேறுபாடு நாட்டுக்கு உகந்ததல்ல!

■ சேரலாதன்



இலங்கையொரு பௌத்த நாடு. இதனை அடிப்படையாகக் கொண்டு அரசு ஆட்சியை முன்னெடுக்கும் என்று அமைச்சர் பந்துல குறிப்பிட்டுள்ளார்.

நாட்டைப் பொறுத்தவரையில் சனத்தொகை வீதத்தின் அடிப்படையில் சிங்கள பௌத்தர்களே பெரும்பான்மையினர். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்களும் இங்கு வாழ்கின்றனர். நாட்டில் மத நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமென்றால் மதங்களுக்கிடையில் பாகுபாடு காட்டக்கூடாது.

மனிதர்களை நல்வழிப்படுத்துவதற்காகவே மதங்கள்உருவாக்கப்பட்டன. வெறுப்புக்கும், காழ்ப்புணர்வுக்கும் மதங்களில் இடமில்லை. எந்தவொரு மதமும் கொலை, களவு, பாலியல் பலாத்காரம், குரோதம், பழிவாங்கும்எண்ணம் ஆகியவற்றைக்கொண்டிருப்பதில்லை. அன்பு, கருணை, பொறுமை ஆகியவற்றையே அவை போதிக்கின்றன. மதத் தலைவர்கள் இறைவனுக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்பட வேண்டியவர்கள். அவர்களும் அதற்கேற்றாற்போன்றுதம்மைஉயர்ந்தநிலையில்வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அவ்வாறானதொரு நிலையை இன்று காண முடியவில்லை.

இலங்கையைப் பொறுத்தவரையில் சிங்களவர்கள் பெரும்பான்மையினராக உள்ள போதிலும் அவர்கள் அனைவருமேபௌத்த மதத்தைச்சேர்ந்தவர்கள் அல்லர். அவர்களின் கணிசமான எண்ணிக்கையானவர்கள்கிறிஸ்தவர்கள். சிங்கள இனத்தவர்கள் மத ரீதியாகப் பிளவுபட்டிருக்கின்றார்கள்.

இந்தநிலையிலும் இதுவொருசிங்களபௌத்தநாடு எனக் கூறுவது சிங்கள இனத்தவர்களைப் பிளவுபடுத்திப் பார்க்கின்றதொரு செயலாகும். ஓர் இனம் மத ரீதியாகப் பிளவுபடும்போது அதன் அத்திபாரமே தகர்ந்துவிடும்.

அது மட்டுமல்லாது நாட்டின் அரசியலிலும் சிங்கள பௌத்தர்களேஆதிக்கம்செலுத்தவிரும்புகின்றனர். நாட்டின் அரச தலைவராகச் சிங்கள பௌத்தர் ஒருவரேபதவி வகிக்கவேண்டுமென்ற எழுதப்படாதவிதி உள்ளது. தலைமை அமைச்சர்பதவியைக்கூட சிங்கள கிறிஸ்தவர் ஒருவர் வகிக்க முடியுமா என்ற சந்தேகமும் எழுகின்றது.

பௌத்த மதம் இந்து மதத்தில் இருந்து உருவானது எனக் கூறப்படுவதை எவரும் மறுக்க முடியாது. பௌத்தத்தை உருவாக்கிய கௌதம புத்தர் ஓர் இந்துவாகவே இந்த உலகில் ஓர் அரச குடும்பத்தில் பிறந்தார். அவரால் உருவாக்கப்பட்ட பௌத்த மதத்தில் இந்துத்துவக்கோட்பாடுகள் ஏராளமாகக்காணப்படுகின்றன. இந்துக் கடவுள்களை வணங்குகின்ற வழக்கம் பௌத்தர்களிடத்தில் உள்ளது. இனத்தால் வேறுபட்டிருந்தாலும்சிங்களபௌத்தர்களும், தமிழ் இந்துக்களும் தமது புது வருடத்தை ஒரே தினத்திலேயே கடைப்பிடிக்கின்றனர்.

முஸ்லிம்களும் இன ரீதியாகவும் மத ரீதியிலும் ஒன்றுபட்டுக்காணப்படுகின்றார்கள். முஸ்லிம்கள் என்ற மத அடையாளமே அவர்களை ஒரே குடையின் கீழ் ஒன்றுபடுத்திக் காட்டுகின்றது.

உலகம் முழுவதும் பல கோடி இந்துக்கள் வாழ்ந்தாலும் ஒரேயொரு இந்து நாடாக நேபாளம் மட்டுமே விளங்குகின்றது. இந்திய மக்கள் தொகையில் 80 வீதமானவர்கள் இந்துக்களாக உள்ளபோதிலும் அதையொரு இந்து நாடாக எவருமே அழைப்பதில்லை. பல மதப் பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் அங்கு வாழ்வதையும் காண முடிகின்றது. இந்திய உப கண்டமென அழைக்கப்பட்ட இந்தியா இன்று மூன்று துண்டுகளாக உடைந்து காணப்படுகின்றமைக்கு மதப் பூசல்களே காரணமாக அமைந்துவிட்டது. இன்றும்கூட மதப்பூசல்கள் இந்தியாவுக்குப் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தி வருகின்றன.



**சிங்கள பௌத்த நாடு எனக் கூறுவது சிங்கள இனத்தவர்களைப் பிளவுபடுத்திப்பார்க்கின்றதொரு செயலாகும். ஓர் இனம் மத ரீதியாகப் பிளவுபடும்போது அதன் அத்திபாரமே தகர்ந்துவிடும்.**

இலங்கையின் ஆட்சியாளர்கள்பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குகின்றார்கள். இலங்கை மதச்சார்பற்றநாடாகமாறவேண்டும். அது இந்தியாவைப் போன்று பெயரளவில் இருப்பதால் பயனில்லை. அது மன ரீதியாக மாற்றப்பட வேண்டும்.

மதரீதியானநிந்தனைகளுக்கு இடமளிக்கக்கூடாது. பௌத்தர்களே இல்லாததமிழர்பகுதிகளில்பௌத்த விகாரைகளை அமைப்பது ஏற்புடையதல்ல. வலி. வடக்கில்மிகப்பெரியவிகாரையை இராணுவத்தினர் அமைத்து வருகின்றனர். அரசின் ஆதரவு இல்லாமல் இதை மேற்கொண்டிருக்க முடியாது. இதை விட தமிழர் பகுதிகளில் உள்ள இந்து ஆலயங்களில் மதத்தின் பெயரால் நீதிக்குப் புறம்பான அடாத்தான செயல்கள் இடம்பெறுகின்றமையையும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்து ஆலயமொன்றின் வளாகத்தினுள் இறந்த உடலைத் தகனம் செய்தகொடுமையும் இந்தநாட்டில்தான்நடந்து முடிந்துள்ளது. இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்திலும்தொடருவதுநாட்டுக்குநல்லதல்ல. மத அடிப்படையிலான வேறுபாடுகள் நாட்டின் ஒருமைப்பாட்டையே சிதைத்துவிடும். ஆட்சியாளர்கள் இதை உணர்ந்து செயற்பட்டால் நாட்டில் மத நல்லிணக்கத்தை எதிர்பார்க்க முடியும். ■

## ஆசிரியருக்கான கடிதம்

### இஸ்ரேல் நாட்டைப் பின்பற்றி மழை நீரைச் சேமிப்போம்!

யாழ். குடாநாட்டில் மழை தொடர்ந்து பெய்வதால் சிறுகுளங்கள்நிரம்பியுள்ளமையுடன்மேலதிகநீரின் ஒரு பகுதி கடலில் கலப்பதுடன் மறுபகுதி தாழ்வான பகுதிகளில் தேங்கி நிற்பதைக் காண முடிகின்றது.

குடாநாட்டைப் பொறுத்தவரையில் மழை நீரைச் சேமித்து வைப்பதற்கான சரியான திட்டங்கள் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதனால் மழை நீரின் பெரும் பகுதி வீணாகிக் கொண்டிருப்பதை வேடிக்கை பார்ப்பதற்கு மட்டுமே எம்மால் முடிகின்றது. வறண்ட பிரதேசமான யாழ். குடாநாடு தனது சகல நீர்த் தேவைகளுக்கும் மழை நீரையே நம்பிக் கொண்டிருக்கின்றது.

இங்கு வாழ்கின்ற மக்கள் தமது குடிதண்ணீர்த் தேவைக்கும்வேறுதேவைகளுக்கும்தமதுவிவசாய முயற்சிகளுக்கும் மழை நீரையே தமது நீராதாரமாகக் கொண்டுள்ளனர்.

கோடை காலத்தில் குடிதண்ணீருக்கு குடாநாட்டில் தட்டுப்பாடு நிலவுகின்றது. இரணைமடுக் குளத்து நீரை நம்பியிருந்த மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். கடல் நீரும் கைவிட்டுவிட்டது. மாரி காலத்தில் இங்கு கிடைக்கின்ற மழைநீரைத்தகுந்த முறையில் சேமித்து வைத்தால் நீர்த்தட்டுப்பாடு ஒருபோதுமே இங்கு ஏற்படாதென்பதை உறுதியாகக் கூற முடியும். யூதர்களின் இஸ்ரேல் தேசமும் ஒரு வறண்ட பகுதியாகும்.

ஆனால் அங்கு நீருக்கு ஒருபோதுமே தட்டுப்பாடு ஏற்படுவதில்லை. மழைநீரின் ஒரு சொட்டைக் கூட வீணாக்காது அவர்கள்சேமித்துவைப்பதால்அங்கு இந்த நிலை காணப்படுகின்றது.

நாமும் இஸ்ரேலைப் பின்பற்றி நடந்து கொண்டால் நீருக்கான தட்டுப்பாட்டைப் போக்கிக் கொள்ள முடியும்.

**அஞ்சலா செரீன்**, கொழும்புத்துறை.

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# டெங்கு தொற்றை கட்டுப்படுத்த நகர மக்களே ஒத்துழையுங்கள்!

## யாழ். மாநகர முதல்வர் கோரிக்கை



யாழ்ப்பாணம்,டிசெ.6

டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளதால் அதைக் கட்டுப்படுத்த, யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள் வசிக்கும் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று மாநகர முதல்வர் இமானுவல் ஆனல்ட் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மக்கள் தங்களது வீடுகளில் மழை நீர் மற்றும் கழிவு நீர் தேங்கி நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்களை விரைந்து சுத்தப்படுத்த வேண்டும். பிளாஸ்ரிக், பொலித்தீன், கண்ணாடிக் குவளைகள் மற்றும் இதர கழிவுகளை உரிய முறையில் தரம் பிரித்து அகற்ற வேண்டும். தங்கள் வீட்டுச் சூழலில் வெற்றுக் கொள்கலன்களில் நீர் தேங்கி நுளம்பு பெருகாமல் பார்த்துக் கொள்வது தங்களின் பொறுப்பும் கடமையுமாகும்.

டெங்குத் தொற்றை உடனடியாகக் கட்டுப்படுத்தும் நோக்கில் வீடுகளில் உள்ள நீர் தேங்கும் கொள்கலன்களை அகற்றுவதற்கு மாநகர சபையின் வழமையான வட்டார திண்மக் கழிவகற்றல் நடைமுறையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்வரும் சனிக்கிழமை கொள்கலன் கழிவுகளை வட்டார ரீதியாக அகற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தங்களின் வீட்டின் முன்புறம் முதன்மை நுழைவாயில் உட்படசுற்றுச்சூழலில் உள்ள புல், பூண்டுகளையும் தாங்களே அகற்றி, டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் துப்புரவு செய்ய வேண்டும்.

மாநகர சுகாதாரப் பிரிவினர் மற்றும் பொலிஸ் பிரிவினர் தங்கள் வீடுகளைப் பரிசோதிக்க வருகின்ற போது, மேற்படி விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்படும். அதன் போது தங்கள் வீடுகளில் டெங்கு நுளம்பு பரவுவதற்கான அறிகுறிகள் தென்பட்டாலோ, வீட்டின் முதன்மை நுழைவாயில் மற்றும் சுற்றுச் சூழல் சுத்தமாகக் காணப்படாவிட்டாலோ உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றுள்ளது. (க)

### முன்பள்ளி கலைவிழா

சாவகச்சேரி,டிசெ.6

சாவகச்சேரி மட்டுவில் தெற்கு கலைமகள் முன்பள்ளியின் கலைவிழா இன்று பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறும். முன்பள்ளி முகாமைத்துவக் குழுவின் தலைவர் மு.சிவகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன், சிறப்பு விருந்தினர்களாக நகர சபையின் செயலாளர் சீ.சபேசன், தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச. அரியநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)

### குருதிக்கொடை முகாம்

நல்லூர் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் ஒன்று நெடுந்தீவு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

குருதிக்கொடை நிகழ்வைத் தொடர்ந்து நெடுந்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 200 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், பயன்தரு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு நெடுந்தீவு பிரதேச செயலகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், நெடுந்தீவு நண்பர்கள் வட்டம் ஆகியன அனுசரணை வழங்கியிருந்தன. (ஜ-104)

### மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், டிசெ.6

இலவச நீரிழிவுப் பரிசோதனை, கண்பரிசோதனை, டெங்குக் காய்ச்சல் பாதுகாப்புக் கருத்தரங்கு உள்ளிட்ட மருத்துவ முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. மானிப்பாய் கோவிற்பற்று லயன்ஸ் கழகம், லியோ கழகங்கள், யாழ்ப்பாணம் நீரிழிவு சங்கம் மற்றும் விசன் கெயார் நிறுவனம் ஆகியன இணைந்து மருத்துவ முகாமை ஏற்பாடு செய்துள்ளன.

நீரிழிவுப் பரிசோதனை செய்பவர்கள் சீனி உணவுகளைத் தவிர்த்து, முடியுமாயின் காலை உணவை 7 மணியளவில் உட்கொண்டு வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

# சட்டநாதர் வீதியை காப்பெற்றாக மாற்ற அனுமதிக்கப்பட்டும் நடவடிக்கையில்லை

நல்லூர் சட்டநாதர் வீதியை காப்பெற் வீதியாக அமைக்கும் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு சுமார் 2 வருடங்களாகின்றபோதும், இன்றுவரை அது காப்பெற் வீதியாக மாற்றப்படவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் தெ.கிரிதரன் மேற்குறித்த வீதியை காப்பெற் வீதியாகச் சீரமைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார். அது ஒருங்கிணைப்புக் குழுவினரால் ஏற்கப்பட்டது.

இதன் பிரதி மாநகர முதல்வருக்கும் மாநகர சபை ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை.

மழை காலம் ஆரம்பித்துள்ளதால், இந்த வீதிதற்போது குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. பல விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன. எனவே இதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் தெ. கிரிதரன் வலியுறுத்தியுள்ளார். (து)



# பல்வேறு இடங்களில் திருடப்பட்ட 15 ஈருருளிகள் கைப்பற்றப்பட்டன

## கைதான இருவர் மறியலில்

சுன்னாகம்,.டிசெ.6

பல இடங்களில் திருடப்பட்டதாகக் கருதப்படும் 15 ஈருருளிகளை சுன்னாகம் பொலிஸார் நேற்றுக் கைப்பற்றினர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இணுவில் பகுதியில் கடந்த முதலாம் திகதி பாடசாலை மாணவி ஒருவரின் ஈருருளி திருட்டப்பட்டது என்று சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் திருட்டுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தெல்லிப்பழையைச் சேர்ந்த 33 வயதுடையவரை நபரை சந்தேகத்தில் கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கொக்குவிலைச் சேர்ந்த இன்னொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கொக்குவில் நபரிடம் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணையில் அவரிடமிருந்து பல்வேறு இடங்களில் திருடப்பட்டதாகக் கருதப்படும் 15 ஈருருளிகளைப் பொலிஸார் கைப்பற்றினர்.

நீண்ட நாள்களாக இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று சந்தேகநபர்களிடம் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் மல்லாகம் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (க-26)

# பணிகள் நிறைவடைந்தும் கடைகள் திறக்க தாமதம்

## வர்த்தகர்கள் குற்றச்சாட்டு: பணிகள் நிறைவடையவில்லை என்கிறார் தவிசாளர்

சங்கானை நவீன ஒரு மாடி வர்த்தகக் கடைத்தொகுதியின் உட்கட்டுமானப்பணிகள் முழுமை பெற்றுள்ள போதிலும், இதுவரை புதிய கடைத் தொகுதி பாவனைக்குத் திறந்து வைக்கப்படவில்லை என்று வர்த்தகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் முயற்சியால், முன்னாள் மீள்குடியமர்வு அமைச்சராக இருந்த டி.எம். சுவாமிநாதன் இந்த வர்த்தக கடைத் தொகுதிக்காக 40 மில்லியன் ரூபா நிதியை வழங்கி இருந்தார்.

உட்கட்டுமானத்துக்கான முழுமையான கருத்திட்டம், முன்னாள் வலி. மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சண்முகலிங்கம் குணவதியால் முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தற்போது வர்த்தக கடைத்தொகுதியின் கீழ்த் தளத்தில் வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும் மாடிக்கடைத் தொகுதிப் பணிகள் நிறைவடைந்தும், இதுவரை திறந்து வைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் கடைகளை எதிர்பார்த்துள்ள வர்த்தகர்கள் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இதனுடன் ஆரம்பிக்கப்பட்ட வலி. தென்மேற்கு சந்தை வர்த்தக கடை தொகுதி உட்கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து, முறைப்படி திறந்து வைக்கப்பட்டுள்ளது. வலி. மேற்கு சுழிபுரம், வலி. தென்மேற்கு, மானிப்பாய் ஆகிய கடைத் தொகுதிகளுக்கான முழுமையான நிதி யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனது முயற்சியால் யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் ஊடாக வழங்கப்பட்டிருந்தது.

கடைத் தொகுதிகள் திறக்கப்படுவதற்கான தாமதம் தொடர்பாக வலிகாமம் மேற்கு தவிசாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, வர்த்தகக் கடைத்தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் வேலைகள் நிறைவடைந்துள்ளன. ஏனைய பணிகளுக்கு மேலதிக நிதி தேவைப்பட்டதால் சபை நிதியில் பணிகளை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான கேள்விகோரல் இடம்பெறுகின்றது. விரைவில் நிறுத்தப்பட்ட பணிகள் ஆரம்பிக்கப்படும். பணிகள் முழுமையாக நிறைவடைந்து, கடைகள் வர்த்தகர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று பதிலளித்தார். (க-59)

*யாழ்ப்பாணத்தில்*

# குறைவடைகிறது டெங்குத் தொற்று

## நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துமாறு பணிப்பாளர் அவசரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த மாதம் டெங்கின் தாக்கம் அதிகமாகக் காணப்பட்ட நிலையில், தற்போது அதன் தாக்கம் படிப்படையாகக் குறைவடைந்து வருகிறது. எனவே பொதுமக்கள் டெங்கு நுளம்பு பெருகாத வகையில் சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: இந்த வருடம் டெங்குத் தொற்றின் தாக்கம் பல மடங்காக அதிகரித்துக் காணப்பட்டது. குறிப்பாக யாழ்ப்பாணம் நகரப் பகுதி நல்லூர், சண்டிலிப்பாய், கோப்பாய் பகுதிகளில் இருந்து அதிகளவானோர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். விடுதிகளில் சுமார் 150 பேர் தங்கியுள்ளனர். எனினும் கடந்த இரு நாள்கள் தொடக்கம் டெங்குத் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் அனுமதி குறைவடைந்துள்ளது. தினசரி 110 க்கும் மேற்பட்டவர்கள் சேர்க்கப்பட்ட நிலமை குறைவடைந்து, சுமார் 50 வரையானவர்கள் சேர்க்கப்படும் நிலமை ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மட்டும் 30 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இனிவரும் நாள்களில் இதன் தாக்கம் குறையும் என்று எதிர்பார்க்கின்றோம்.

டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களைச் சமாளிக்க மருத்துவமனையில் புதிய விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன. டெங்கைக் கட்டுப்படுத்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. நுளம்புகள் பெருகுவதைத் தடுப்பதன் மூலமே டெங்கைக் கட்டுப்படுத்த முடியும்.

இனி வரும் காலங்களில் பொதுமக்கள் அவர்கள் இருக்கும் பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் இருப்பின், அவற்றைச் சீர் செய்ய வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டும். காய்ச்சல் ஏற்படும் போது அயலிலுள்ள மருத்துவமனைகளுக்குச் சென்று குருதிப் பரிசோதனைகள் மேற்கொள்ள முடியும். டெங்குத் தொடர்பாக மக்களுக்குப் போதியளவு விழிப்புணர்வு உள்ளது. டெங்குத் தொற்று இருப்பின் பொருத்தமான மருத்துவமனையில் சிகிச்சை பெற முடியும். டெங்கின் தாக்கம் குறைவடைந்து சென்றாலும், அதன் தாக்கம் இருப்பதால் பொதுமக்கள் கூடுகின்ற நிகழ்வுகள் நிறுத்தப்பட வேண்டும். அல்லது தற்காலிகமாக வேணும் நிறுத்தப்பட வேண்டும். இதன் மூலம் டெங்கின் பரம்பலைக் குறைக்க முடியும்.

டெங்கு, வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்படுபவர்களுக்குப் போதிய சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. அதேவேளை மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ள நோயாளிகளை அதிகளவானோர் வருகை தந்து பார்வையிடுவதைத் தவிர்க்க வேண்டும். பாஸ் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். நோயாளிக்கு அருகில் இருவர் மாத்திரம் செல்வது விரும்பத்தக்கது. பலர் செல்வதால் அசௌகரியமான நிலமை ஏற்படுகிறது மருத்துவர்கள், தாதியர்கள் கடமையாற்ற முடியாத நிலமை, நோயளிகளும் அவதிப்படுவர். ஆயிரக்கணக்கானவர்கள் தினமும் வந்து செல்லும் மருத்துவமனையைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பொது இடங்களையும் துப்புரவாக வைத்திருக்க வேண்டும். அதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என்றார்.

(க-111,7)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் ஊடாக வடமாகாண கிராம அபிவிருத்தி த் திணைக்களத்தால்நடத்தப்படும்தையல் மற்றும் அழகுக்கலை டிப்ளோமாபயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பயிற்சிகள்யாழ்ப்பாணம் பிரதேசசெயலகத்தின்பழைய கட்டடத் தொகுதியில் இடம்பெறும். எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி அலுவலரிடம் பெற்றுச் சமர்ப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## டெங்கின் தாக்கம் வடக்கில் மிக உயர்வு

யாழ்ப்பாணம், டிசெ.6

உயிர்க்கொல்லி நோயான டெங்கின் தாக்கம் வடக்கு மாகாணத்தில் உயர்வடைந்துள்ளது. கடந்த நவம்பர் மாதம்வரை யாழ்ப்பாணத்தில் 2 ஆயிரத்து 634 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி முல்லை த்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் வழமைக்கு மாறாக டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளது. சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவினர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் டெங்கின் தாக்கம் கூடிய மாவட்டங்களில் மூன்றாவது மாவட்டமாக யாழ்ப்பாணம் இனங்காணப்பட்டுள்ளது. கடந்த ஒக்ரோபர் மாதம் 538 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர். அந்த எண்ணிக்கை நவம்பர் மாதம் நான்கு மடங்காக அதிகரித்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் 96 பேரும், வவுனியா மாவட்டத்தில் 44 பேரும், டெங்கு அற்ற மாவட்டமாக அடையாளப்படுத்தப்பட்ட முல்லைத்தீவில் 50 பேரும், மன்னார் மாவட்டத்தில் 32 பேரும் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். டெங்குத் தாக்கத்திலிருந்து மாணவர்களைப் பாதுகாப்பதற்காக யாழ்ப்பாணம் நகரில் இயங்கும் கல்வி நிறுவனங்களை இரண்டு வாரங்களுக்கு மூடுமாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் வீடுகளில் தேங்கியுள்ள குப்பைகள் மற்றும் சுற்றுப் புறச் சூழலில் காணப்படும் குப்பைகளை அகற்றி நுளம்பு பெருகாதவாறு சூழலை வைத்திருக்குமாறு சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

(க-21)

## தேர்தலில் கடமையாற்றிய அதிகாரிகளுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், டிசெ.6

அரச தலைவர் தேர்தலில் வினைத்திறனுடன் பங்காற்றிய அதிகாரிகளை யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் பாராட்டியுள்ளார். பாராட்டுக்களுடன் கூடிய கடிதங்கள் அதிகாரிகளுக்குத் தனித்தனியாகஅனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கடந்த மாதம் 16ஆம் திகதி அரச தலைவர் தேர்தல் இடம்பெற்றது. இதில் மூத்த தலைமை தாங்கும் அலுவலர்களாக வாக்கெடுப்பு நிலையத்திலும் வாக்கெண்ணும் நிலையத்திலும் அரச அதிகாரிகள் பணியாற்றியிருந்தனர். இவ்வாறு வினைத்திறனுடன் பணியாற்றிய அதிகாரிகளே பாராட்டுக்களைப் பெற்றுள்ளனர். நீதியானதும் நியாயமானதுமான தேர்தல் நடைபெறுவதற்கு வழங்கிய பங்களிப்பு உயர்வானது என்று அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-50)

## மருத்துவமனைக்குள் படுத்துறங்கும் நாய்கள்

### காரைநகர் மருத்துவமனையில் தொடரும் சுகாதாரச் சீர்கேடு



யாழ்ப்பாணம்,டிசெ.6

காரைநகர் பிரதேச மருத்துவமனையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதில் மருத்துவமனை நிர்வாகம் அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. மருத்துவமனையில் பயன்படுத்தும் பொருள்களுக்கு மேல் நாய்கள் படுத்துறங்கும் சம்பவங்களும் நடந்தேறுகின்றன. மருத்துவமனையில் சுகாதார நடைமுறைகள் தொடக்கம், நோயாளர்களுக்கான பொது ஒழுங்கு வரை பல்வேறு குறைபாடுகள் நிலவி வருகின்றன. இவை தொடர்பாக பொதுமக்கள் மற்றும் நோயாளிகள் தரப்பில் பல தடவைகள்சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், அவற்றை நிவர்த்தி செய்ய இதுவரை மருத்துவமனை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை.

நோயாளர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்படுத்தும் மலசலகூடங்கள் சுகாதார முறையில் சுத்தம் செய்யப்படுவதில்லை. சுத்தம் செய்யப் பயன்படுத்தப்படும் திராவகங்கள் போத்தல்களுடன் அடிக்கடி காணாமல்போகின்றன ஏனத் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதாரமான முறையில் பாதுகாக்கப்பட வேண்டிய பொருள்கள் நிலத்தில் வைக்கப்பட்டுள்ஏன.

பாதுகாப்பற்ற அறை ஒன்றில் வைக்கப்பட்டுள்ள பொருள்களுக்கு மேல் நாய்கள்படுத்துறங்கும் நிலமை காணப்படுகின்றது. அதேவேளை சிகிச்சைக்காகக் செல்லும் நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது, நோயாளர் காவு வண்டிக்கு சாரதி இல்லை எனக் கூறப்படுகின்றது. இதனால் தாங்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று காரைநகர் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

காரைநகர் பிரதேச மருத்துவமனையில் நிலவும் இவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக அறிந்துள்ளேன். அது தொடர்பில் பொறுப்பானவருடன் பேசுகின்றேன் என்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் மருத்துவர் க.தேவநேசன் தெரிவித்தார். (க-21)

# யாழ். மாவட்டத்தில் 219 வீடுகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் 219 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மழைப்பாதிப்பால் வீடுகளின் கூரைகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. அதனைச் சீர் செய்வதற்கான நடவடிக்கைகளை இடர் முகாமைத்துவ அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொண்டுள்ளோம். அதேபோன்று மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 41 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. அவர்களின் வசிப்பிடங்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. அவர்களுக்கான உலர் உணவுகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

டெங்கின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், இரண்டு வாரங்களுக்குத் தனியார் வகுப்புகளை நிறுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு அறிவித்துள்ளோம்.

மாவட்டத்தில் இடர் முகாமைத்துவ குழுக்கள் மற்றும் இராணுவத்தினர் இடர்களால் பாதிக்கப்படுபவர்களுக்கு உதவுவதற்குத் தயாராக உள்ளனர்- என்றார். (க-7)





## விநாயகபுரம் கிராமத்தில் சிறுவர் பூங்கா அமைப்பு

கிளிநொச்சி, டிசெ.6

இயக்கச்சி விநாயகபுரம் கிராமத்தில் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டு சிறுவர் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

கிராம மக்களால் தொடர்ச்சியாக கோரிக்கை விடப்பட்டதை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் 5 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்திருந்தார்.

சிறுவர் பூங்காக்கான சுற்றுவேலி அமைத்து, விளையாட்டு உபகரணங்கள் பொருத்தி பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், உப தவிசாளர் கஜன், உறுப்பினர் ரமேஷ் ஆகியோர் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். (ஐ-6)

## ஓய்வூதியத்துக்கான திகதிகள் அறிவிப்பு

தென்மராட்சி, டிசெ. 6

2020ஆம் ஆண்டுக்கான மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான சுற்றறிக்கை ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஏ.ஜகத் டி டயஸால், பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அந்தச் சுற்றறிக்கையின் படி, எதிர்வரும் ஜனவரி 9, பெப்ரவரி 10, மார்ச் 10, ஏப்ரல் 6, மே 6, ஜூன் 10, ஜூலை 10, ஓகஸ்ட் 10, செப்ரெம்பர் 10. ஒக்ரோபர் 6, நவம்பர் 10, டிசெம்பர் 10 ஆகிய திகதிகளில் ஓய்வூதியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## 12 வர்த்தகர்களுக்கு ரூ.57 ஆயிரம் தண்டம்



சாவகச்சேரி, டிசெ.6

பாவனையாளர் பாதுகாப்பு விதிமுறைகளை மீறி பொருள்களை விற்பனை செய்த 12 வர்த்தகர்களுக்கு 57 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட பாவனையாளர்கள் பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரிகள் அண்மையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் நடத்திய திடீர்ப் பரிசோதனையின் போது விதிமுறைகளை மீறிப் பொருள்களை வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்குகள் நேற்று முன்தினம் புதன்கிழமை நீதிமன்றத்தில் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நால்வருக்குத் தலா 6 ஆயிரம் ரூபா வீதமும், ஆறு வர்த்தகர்களுக்குத் தலா 4 ஆயிரத்து 500 ரூபா வீதமும், இருவருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமுமாக 57 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

## தென்மராட்சி பிரதேச கலாசார விழா

தென்மராட்சி, டிசெ.6

தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசார விழா நாளை தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிகச் செயலர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களம், சாவகச்சேரிப் பிரதேச செயலகம், தென்மராட்சிப்பிரதேச கலாசாரப் பேரவை மற்றும்கலாசார அதிகார சபை ஆகியவை இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

கலை நிகழ்வுகளாக மீசாலை சங்கீத நர்த்தனாலயத்தின் காவடி ஆட்டம், பூர்ணா நர்த்தனாலயத்தின் கோலாட்டம், சிறிவாணி கலைக்கூடத்தின் நாட்டார் பாடல், கைதடி மேற்கு சரஸ்வதி கலைமன்றத்தின் காத்தவராயன் கூத்து ஆகியவை இடம்பெறவுள்ளன. பிரதேசத்தின் 'கலைசாகரம்' நூல் வெளியீடு இடம்பெறும். (ஐ-9)

## டெங்குக் கட்டுப்பாடு; மக்களுக்கு விழிப்புணர்வு

கொடிகாமம், டிசெ.6

டெங்குக் கட்டுப்பாடு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று வியாழக்கிழமை கொடிகாமம் தெற்குப் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

கொடிகாமம் தெற்குப் பகுதியில் 12 ஆவது டெங்குத் தொற்றாளர் இனம் காணப்பட்டமையை அடுத்து, அவசரமாக கிராம மக்கள் ஒன்று கூட்டப்பட்டு கருத்தரங்கு நடத்தப்பட்டது.

காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக உரிய சிகிச்சை பெற வேண்டியதன் அவசியம், சுற்றாடலிலுள்ள நுளம்பு பெருகும் இடங்களை அழிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாக பொதுச் சுகாதார பரிசோதகர் சூ.குணசாந்தனால் விளக்கமளிக்கப்பட்டது. அதேவேளை பொலிஸ் அலுவலர், பொதுச் சுகாதார பரிசோதகர், டெங்குக் கள உதவியாளர்கள், கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர், சமுர்த்தி அலுவலர் ஆகியோர் இணைந்து இன்று வெள்ளிக்கிழமை வீடுகளைத் தரிசிக்கவுள்ளனர். நுளம்புக் குடம்பி காணப்படும் இடங்களின் உரிமையாளர்களுக்கு உடனடியாக வழக்கு தாக்கல் செய்யப்படும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். (க-159)



## பொதுக் கூட்டமும் நிர்வாக தெரிவும்

வடமராட்சி, டிசெ.6

புலோலி, சர்ரையடி நண்பர்கள் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் அண்மையில் நடைபெற்றன.

போசகர் க.பாலஸ்ரீஸ் கந்தராஜா, தலைவர் வே.சிவகுமாரன், உப தலைவர் இ.பார்த்தீபன், செயலர் க.ஏரம்பநாதன், உபசெயலர் அ.கௌதமன், பொருளாளர் பெ.ஸ்ரீகிருஷ்ணா, அத்துடன் 9 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (ஐ-173)

## மழை பாதித்த பகுதிகளை எம்.பி. அவதானித்தார்

கிளிநொச்சி, டிசெ. 6

கிளிநொச்சியில் சில நாள்களாக மழை பெய்துவருவதால், மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். 4 குடும்பங்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி கட்டைக்காடு அ.த.க. பாடசாலையில் தங்கியுள்ளன. அவர்களையும் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் நேற்றுமுன்தினம் பார்வையிட்டார்.

பரந்தன், சிவபுரம், ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, கட்டைக்காடு ஆகிய இடங்களுக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் நிலைமைகளைப் பார்வையிட்டார்.

இறுதியில் மக்களின் உடனடித்தேவைகள் தொடர்பாகப் பிரதேச செயலருடன் கலந்துரையாடினார்.

வெள்ளம் காரணமாகப் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் கடும் இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினருடன் பெரியகுளம் கிராம அலுவலர் சங்கம், தமிழ் அரசுக் கட்சியின் பிரதேச அமைப்பாளர்களான விநாயககுமார்(ரஞ்சன்), சிவேந்திரன், ஜங்கரன், கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் விக்டர் சாந்தி, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-6)

# வவுனியா நகரில் இரு நாள்களில் கட்டாக்காலி மாடுகள் 160 பிடிப்பு

வவுனியா, டிசெ.6

வவுனியா நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்த நகர சபையினர் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த இரண்டு நாள்களில் மட்டும் 160க்கும் மேற்பட்ட கட்டாக்காலி மாடுகளை வவுனியா நகரசபையினர் பிடித்துள்ளனர்.



வவுனியா நகர சபையினரால் கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று இரவு ஐந்து மணித்தியாலங்களுக்குள் மட்டும் 90 மாடுகள் பிடிக்கப்பட்டன. நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 11 மணி முதல் நேற்று அதிகாலை 4 மணிவரை 70 மாடுகள் பிடிக்கப்பட்டன. வவுனியா நகர், பட்டாணிச்சூர், வேப்பங்குளம், பண்டாரிக்குளம், திருநாவற்குளம், கோவிற்குளம் போன்ற பகுதிகளில் கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டன.

கடந்த 2 ஆம் திகதி பிடிக்கப்பட்ட 90 மாடுகளில் 86 மாடுகளின் உரிமையாளர்கள் தண்டப்பணம் செலுத்தி மாடுகளைப் பெற்றுள்ளனர். தற்போது 76 மாடுகள் வவுனியா நகரசபை வளாகத்திலும், வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள நகரசபையின் கழிவகற்றல் நிலையத்திலும் அடைத்து வைக்கப்பட்டுள்ளன. பிடிக்கப்பட்ட மாடுகளில் வவுனியா நகர சபை உறுப்பினர்களின் மாடுகளும் உள்ளடங்குகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாட்டின் உரிமையாளர்கள்பிடிகூலி600. ரூபா, தண்டம் ஆயிரம் ரூபா, ஒரு நாள் பராமரிப்புச் செலவு 300 ரூபா ஆகியவற்றைச் செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும். பராமரிப்புச் செலவு நாளாந்தம் 300 ரூபா விதிக்கப்படும் என்று நகரசபையினர் தெரிவித்துள்ளனர். (க-ரி4)

*உழவு இயந்திரம் மூலம் நாற்று நடுகை*

## மன்னார் விவசாயிகளுக்கு விரைவில் களப்பயிற்சிகள்

மன்னார், டிசெ.6

உழவு இயந்திரம் மூலம் நாற்று நடுகை தொடர்பாக, மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு விரைவில் களப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்று மன்னார் மாவட்ட பிரதி மாகாணப் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மன்னார் மாவட்டத்தில் இயந்திரம் மூலம் பயிர் நடுகை 2016 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெறுகிறது. மன்னார் மாவட்டத்தில் உள்ள சில விவசாயிகளுக்கு இயந்திரம் மூலம் நாற்று நடுகை பற்றிய போதிய அறிவு இல்லாமல் இருப்பதை அறியக் கூடியதாக இருக்கிறது.

அவர்களுக்கு இயந்திரம் மூலம் நாற்று நடுகை செய்யும் அறிவை விருத்தி செய்யும் முகமாக 2019-2020 காலபோகத்தில் ஆட்காட்டிவெளி, விலாவத்துறை ஆகிய விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் செயன்முறை பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

நெல்நாற்று நடுகை செய்து காட்டுவதற்கு அமைவாக நாற்று மேடைகள் அமைக்கப்பட்டு, நாற்று நடுகை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆர்வமுள்ள, விவசாயிகள் ஆட்காட்டிவெளி மற்றும் சிலாத்துறை ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளுக்கு வருகை தந்து இயந்திரம் மூலம் நாற்று நடுகை சம்பந்தமான முழுமையான அறிவையும், பயிற்சிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

கடந்த மாதம் ஆட்காட்டி வெளி முருங்கன் விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் இயந்திரம் மூலம் நெல் நாற்று நடுகை சுமார் பத்து ஏக்கர் அளவில் செய்யப்பட்டுள்ளது. இவற்றையும் நேரில் சென்று பார்வையிட்டு விவரங்களை பெற்றுக்கொள்ளலாம்- என்றுள்ளது. (க-213)

## குளங்களின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரிப்பு

கிளிநொச்சி, டிசெ.6

கிளிநொச்சி மாவட்டத்தில் குளங்களின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரித்துள்ளது. மாவட்டத்தில் உள்ள சிறு குளங்கள் அடைவு மட்டத்தை அடைந்துள்ளது. நீர்ப்பாசனக் குளங்கள் சில அடைவுமட்டத்தை அடைந்து வான்பாய்ந்து வருகின்றன.

வடக்கு மாகாணத்தில் உள்ள மிகப்பெரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்து வருகின்றது. 36 அடி கொள்ளளவு கொண்ட இரணைமடுக் குளம் 26' 06' அடியாகவும், 25 அடி கொள்ளளவு கொண்ட அக்கராயன் குளம் 18' 01' அடி யாகவும், 10 அடிகொள்ளளவுகொண்ட கரியாலை நாக படுவான்குளம் 6'06' அடியாகவும், 19 அடி கொள்ளளவு கொண்ட புதுமுறிப்பு குளம் 14' 08' அடியாகவும் அதிகரித்துள்ளது.

அதேவேளை 24 அடி கொள்ளளவு கொண்ட கல்மடு குளம் 24'04' அடியாக அதிகரித்து 4 அங்குலம் வரை வான் பாய்கின்றது. 12 அடி கொள்வனவு கொண்ட பிரமந்தனாறுகுளம் 12'05' அதிகரித்து 5 அங்குலம்வரை வான் பாய்கின்றது. 8 அடி கொள்ளளவு கொண்ட குடமுருட்டி குளம் 8'03' அதிகரித்து 3 அங்குலம்வரை வான்பாய்ந்து வருகின்றது. 9'06' அடி கொள்ளளவு கொண்ட வன்னேரிக்குளம் அதிகரித்து 3 அங்குலம் வரை வான்பாய்கின்றது. 10'06' அடி கொள்ளளவு கொண்ட கனகாம்பிகைக்குளம் 10'08' அதிகரித்து 2 அங்குலம் வலை வான் பாய்ந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தகவல் தெரிவித்துள்ளது.

இவ்வாறு இருக்க பல குளங்கள் அடைவுமட்டம் அடைந்து வான்பாய்ந்து வருவதுடன், நிறைந்து காணப்படுகின்றது. அதனால் குளங்கள் மற்றும் வான்பாயும் பகுதிகளில் நீராடுவதற்காக செல்லுதலை இயன்றவரை தவிர்க்குமாறும், சிறுவர்கள் தனித்து செல்லுதலை முழுமையாக தவிர்க்குமாறும் மாவட்ட இடர் முகாமைத்தவ நிலையம் அறிவித்துள்ளது. தொடர்ந்து மழை வீழ்ச்சி பதிவாகும் நிலை காணப்படுவதால் மக்கள் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்படுமாறும் இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (க-6)

## கிளிநொச்சியில் மழை 24 குடும்பங்கள் பாதிப்பு

கிளிநொச்சி, டிசெ.6

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக 24 குடும்பங்களைச் சேர்ந்த 78 பேர் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ புள்ளி விவரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

கண்டாவளை பிரதேச செயல் பிரிவில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேரும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 12 குடும்பங்களை சேர்ந்த 42 பேரும் இவ்வாறு உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். அதேவேளை குறித்த குடும்பங்களில் பாதுகாப்பான அமைவிடம் ஒன்றில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் தங்க வைக்கப்பட்டள்ளனர்.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் பெரியகுளம் பிரதேசத்தில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் தொடர்ந்தும் உறவினர் மற்றும் பாதுகாப்பான அமைவிடங்களில் தங்கியுள்ளனர். அவர்களில் கட்டைக்காடு அ.த.க பாடசாலையில் 2 குடும்பங்களைச்சேர்ந்த 8 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான சுகாதாரம் உணவு உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் செயலர் முல்லையடிப் பிரதேசத்தில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேரும், தம்பகாமம் பிரதேசத்தில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 5 பேரும், அல்லிப்பளை பிரதேசத்தில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 13பேரும், கிளாலிப் பிரதேசத்தில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேருமாக 12 குடும்பங்களைச் சேர்ந்த 42 பேர் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர் என்று நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-6)

## மழையால் தென்மராட்சியில் 12 குடும்பங்கள் பாதிப்பு

தென்மராட்சி, டிசெ. 6

அண்மையில் கொட்டித் தீர்த்த மழையால், தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள குடியிருப்புக்கள் சிறு சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அங்கு 12 குடும்பங்களைச் சேர்ந்த 40 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் பல பகுதிகளிலும் மழைபெய்ய ஆரம்பித்துள்ளது. வடக்கிலும் அதிகளவு மழை வீழ்ச்சி கிடைத்துள்ளது. தென்மராட்சியில் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் குடியிருப்புகளுக்குள் புகுந்துள்ளது.

இதனால் குடியிருப்பில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதோடு அங்குள்ள மக்களும்பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பிரிவு கிராம அலுவலர்கள், பிரதேச இடர் முகாமைத்துவ அலகுக்கு அறிவித்துள்ளனர்.

வரணி மாசேரி பிரிவில் 5 குடும்பங்களும், நாவற்குழி கிழக்கில் 2 குடும்பங்களும், வரணி இயற்றாலையில் 5 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் உறவினர்களுடைய வீடுகளில் தங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.6

வேலணையூர் ரஜிந்தனின் "கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும்" என்ற கவிதை நூல் வெளியிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை பிரதி அதிபர் பு.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வேலணை பிரதேச செயலர் அம்பலவாணர் சோதிநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

## 7 குடும்பங்களுக்கு உலர் உணவுகள்

வவுனியா, டிசெ.6

வவுனியாவில் சீரற்ற கால நிலையால் பாதிக்கப்பட்ட 7 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன.

வவுனியா புதியவேலர்சின்னக்குளம் ஓமந்தையைச் சேர்ந்த ஏழு குடும்பங்கள் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து லண்டனில் புலம்பெயர்ந்து வசித்து வரும் தாயக உறவுகளான சுகந்தி, பாலரஞ்சன் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார் பொதிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். (க)

# ஆறுமுகநாவலரின் நினைவு தினம்



வவுனியா,டிசெ.6
ஆறுமுகநாவலரின் 140 ஆவது நினைவு தினம் வவுனியா குடியிருப்பில் அமைந்துள்ள ஆறுமுகநாவலரின் நினைவு தூபியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் கடைப்பிடிக்கப்பட்டது.
உள்ளூர் விளைபொருள் உற்பத்தியார்கள் சங்கம் மற்றும் நகரசபையின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை உபதவிசாளர் சு. குமாரசாமி தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.
நிகழ்வில் தமிழருவி சிவகுமாரன், பிரதேச கலாசார அலுவலகர் வீ.பிரதீபன், நகரசபை உறுப்பினர்கள், வர்த்தகர்கள், சமூகசேவையாளர்கள், நகரசபை ஊழியர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.
இதன்போது ஆறுமுக நாவலரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது
(ஐ-110,ரி4)

# வவுனியா பூந்தோட்டத்திலும் நாவலர் தினம் கடைப்பிடிப்பு



வவுனியா, டிசெ. 6
வவுனியா பூந்தோட்டம் ஆறுமுகநாவலர் வீதியிலுள்ள, ஆறுமுகநாவலர் சிலை முன்பாக அவருடைய 140ஆவது நினைவு தினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.
காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் இந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அந்தச் சிலை முன்பாக வவுனியா நகரசபை உறுப்பினர் பால பிரசன்னா மற்றும் தமிழ் விருட்சம் அமைப்பினரால் நிகழ்வு நடத்தப்பட்டது.
தமிழருவி சிவகுமார் சொற்பொழிவாற்றினார். நிகழ்வில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரகுமார், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பலரும் கலந்துகொண்டு மலர் அஞ்சலி செலுத்தினர். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 12 பேருக்கு நிகழ்வில், தமிழ் விருட்சம் அமைப்பினர் புத்தாடைகளை வழங்கினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.
(து-ரி4,110)

# புதிய வீதி வரைபடம் இந்த மாத இறுதியில்

கொழும்பு, டிசெ.6
இலங்கையின் புதுப்பிக்கப்பட்ட வீதி வரைபடம் இந்த மாத இறுதியில் வெளியிடப்படும் என்று நில அளவைப் பணிப்பாளர் நாயகம் கே.ஆர்.எஸ். சங்கக்கார நேற்றுத் தெரிவித்தார்.
புதிய வீதி வரைபடத்தில் அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் பிற வசதியான தகவல்கள் இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.
நாட்டின் வீதி வரைபடம் 5 ஆண்டுகளுக்கு முன்னரே இறுதியாகப் புதுப்பிக்கப்பட்டிருந்தது.
(எ)

## கிளிநொச்சி இந்துக் கல்லூரியில்

# வெள்ளம் காரணமாக மாணவர் வருடாந்தம் திண்டாடும் நிலை

## திணைக்களத்தினர் இருவேறு கருத்துக்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 6
இரு திணைக்களங்களின் கவனவீனத்தால் ஆயிரத்து 200 மாணவர்கள் ஆண்டாண்டு காலமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் எவருமே கண்டு கொள்ளவில்லை என்று கிளிநொச்சி இந்துக் கல்லூரி அதிபர் கி.விக்னராச கவலை தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப் பெரிய பாடசாலைகளில் ஒன்றான கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் ஆயிரத்து 200 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.
பாடசாலையின் அருகே கால்வாய் காணப்படுகின்றது. வெள்ளம் அதிகளவில் வரும்போது அது பாடசாலை வளாகத்துக்குள் புகுந்து ஒரு முழம் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.
வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் அந்தப் பகுதியில் அமைத்துள்ள மதகு வெள்ளம் வழிந்தோடக்கூடியதாகவோ பெரிய அளவிலோ இல்லை. அதனால்தான் வெள்ளம் வாய்க்காலைவிட்டு வெளியேறி நிலங்களில் தேங்குகின்றது என்று கூறப்பட்டது.
வேகமாக வரும் வெள்ளம் குறித்த மதகினூடாகச் செல்லமுடியாத நிலையிலேயே பாடசாலை வளாகத்துக்குள்ளும் தேங்குகின்றது என்று பாடசாலைத்தரப்பினர்கூறுகின்றனர்.
இது பற்றி 2015 ஆம் ஆண்டு நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தி, சீர்செய்யுமாறு கோரிக்கை விடுத்தோம். "பாடசாலைக்குள் வெள்ளம் புகுவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தவறு கிடையாது. வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் அமைத்துள்ள மதகு சிறியதாக இருக்கின்றமையே இதற்குக் காரணம்." என்று நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் கூறுகின்றனர்.
"வீதி அபிவிருத்திப் பணியின்போது போதிய வசதி ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும் அந்த வசதி போதாது என்பதை முன்னரே கூறியிருந்தால், மதகு அமைக்கும்போது மாற்றம் செய்திருக்க முடியும். இனி மதகில் மாற்றம் ஏற்படுத்துவதாயின் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் செலவிலேயே மேற்கொள்ள முடியும்" என்று வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர்.
இவ்வாறு இரு திணைக்களங்களும் ஆயிரத்து 200 மாணவர்களின் கற்றல் கற்பித்தல் பணி தொடர்பில் கரிசனை கொள்ளாது பதிலிறுக்கின்றனர்.
மாணவர்கள் தினமும் காலைமூடும் பாதணிகள் (சப்பாத்து) அணிந்துவருபவர்கள். வெள்ளம் காரணமாக அவர்கள் அவற்றைக் கையில் கொண்டு செல்லும் நிலமையும் ஏற்பட்டுள்ளது. தினமும் இவ்வாறுசெயற்படுவதைப் பார்த்துக்கொண்டிருக்க வாளாவிருக்க முடியவில்லை. குளிரும் அதிகமாகவுள்ளது. என்று பாடசாலை அதிபர் தெரிவிக்கின்றார். இது பற்றி இரணைமடு நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளரிடம் கேட்டபோது, இந்தப் பிரச்சினை தொடர்பில் உடனடியாகவே ஆராயப்படும், நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.
இது பற்றி வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்டப் பொறியியலாளரிடம் கேட்டபோது, "பாடசாலையில் இப்படிப் பிரச்சினை நீடிக்கின்றமை தொடர்பில் இதுவரை எழுத்தில் எந்தவித முறைப்பாடும் கிடைக்கவில்லை. எழுத்து மூலமாகத் தந்தால் ஆராயலாம்." என்று தெரிவித்தார். (து-105)

# கூட்டுறவுப் பெரியாரின் 55ஆவது நினைவு தினம்




யாழ்ப்பாணம்,டிசெ.6
கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 55 ஆவது நினைவுதினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.
மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் நிகழ்வு இடம்பெற்றது.
நினைவு தினத்தில் முதலில் பெரியாரின் உருவச் சிலைக்கு, நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் மலர் மாலை அணிவித்தார்.
தொடர்ந்து மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய முகாமையாளர் பா.சிவதீபன் நினைவுப்பேருரை ஆற்றினார். யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ச.சியாமளா, மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் கே.கோடிஸ்வரன், வடக்குக் கூட்டுறவு அபிவிருத்தி வங்கித் தலைவர் அகிலன் கதிர்காமர், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடக்குப் பிராந்திய சந்தைப்படுத்தல் அதிகாரி ஆர்.ஜெயபாலன், ஓய்வு நிலை ஆசிரியர் த.செந்தினி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். பணியாளர்கள் மதிப்பளிப்பு மற்றும் பரிசில் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், ,பணியாளர்கள், கூட்டுறவாளர்கள் கலந்து கொண்டனர்.
(க-17)

# கல்வி மேம்பாட்டு பரிசளிப்பு நிகழ்வு

கைதடி,டிசெ.6
கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக்கழகத்தின் கல்வி மேம்பாட்டுப் பரிசளிப்பு நிகழ்வு நாளை மறுதினம் கைதடிச் சந்தியிலுள்ள விநாயகர் மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
சுவிற்சர்லாந்திலுள்ள கைதடி மேம்பாட்டு ஒன்றியத்தின் நிதி அனுசரணையில் கழகத் தலைவர் க.சிறிதரன் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தி னராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் க.கன கேஸ்வரன்,சி றப்பு விருந்தி னராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன், ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.
பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.
(ஐ-222)

## முதலீடு மேற்கொள்ள கோத்தபாய அழைப்பு

கொழும்பு, டிசெ.6
சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் இலங்கையில் முதலீடு செய்ய வேண்டும் என்று அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச அழைப்பு விடுத்துள்ளார்.
தனது உத்தியோகபூர்வ டுவீற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.
இலங்கை மீது நம்பிக்கை வைத்து, இலங்கையின் அடையாளங்களுக்கு மதிப்பளித்து முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கின்றேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.
அதேவேளை, அண்மையில் இந்தியா சென்றிருந்த போது அங்கு வைத்தும் அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச இந்த அழைப்பை விடுத்திருந்தார். (எ)

## ஞானசாரருக்கு எதிரான மனு மார்ச் வரையும் ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ.6
பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்டமையைச் சவாலுக்குட்படுத்தித் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.
நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஞானசார தேரரை, முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பொதுமன்னிப்பின் கீழ் விடுவித்திருந்தார்.
இந்தத் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சந்தியா எக்னெலிகொட மற்றும் மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையம் சார்பாக கொழும்பு உயர் நீதிமன்றில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. சந்தியா எக்னெலிகொட, காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியாவார்.
இந்த மனுக்கள் உயர் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இந்த மனுவுக்குப் பதில் வழங்க வேண்டியவர்கள் பதவியில் இருந்து மாறியுள்ளமையால், திருத்தப்பட்ட மனுக்களைத் தாக்கல் செய்யுமாறு மனுதாரர்களுக்கு உயர் நீதிமன்று உத்தரவிட்டது. விசாரணையை எதிர்வரும் மார்ச் மாதம் 2ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.
மனுவுக்குப் பதில் வழங்க வேண்டியவர்களாக சட்டமா அதிபர், நீதி அமைச்சர், அரச தலைவரின் செயலாளர், பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, பதில் பொலிஸ் மா அதிபர் மற்றும் வெலிக்கடை சிறைக் கண்காணிப்பாளர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். (எ)

## சபாநாயகர் கரு ஜயசூரிய பதவி விலகுவதே சிறப்பு

### ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.6
ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் தலைவர் என்ற ரீதியில் சபாநாயகர் கரு ஜயசூரிய உடன் பதவியில் இருந்து நீங்குவதே சிறப்பாக இருக்கும்.
இவ்வாறு வீதி, பெருந் தெருக்கள் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
நாட்டு மக்கள் தீர்ப்பொன்றை வழங்கியுள்ளனர். அந்த முடிவை உள்ளூராட்சித் தேர்தலின்போதே மக்கள் வழங்கினார்கள். மீண்டும் அரச தலைவர் தேர்தலில் அந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளனர். இது வரலாற்று வெற்றியாகும். மக்களால் பெற்றுக் கொண்ட இந்த வரலாற்று வெற்றியின் மூலம் அவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் இடமாக நாடாளுமன்றம் மாற வேண்டுமாயின் சபாநாயகர் பதவி விலகுவதே சிறந்ததாகும். - என்றார். (எ)


# தற்காலிகமாக மீளப் பெறப்பட்டன கோத்தாவுக்கு எதிரான வழக்குகள்

## யஸ்மின் சூக்கா அறிவிப்பு

கொழும்பு, டிசெ.6
இலங்கை அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்த 11 பேரும் தங்கள் வழக்குகளைத் தற்காலிகமாக விலக்கிக் கொண்டுள்ளனர் என்று பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் என்ற அமைப்பு தெரிவித்தது.



கோத்தபாய ராஜபக்சவின் பதவிக் காலம் முடிந்த பின்னர் அவருக்கு எதிராக மீண்டும் வழக்குத் தாக்கல் செய்வதற்குப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ள உரிமையைப் பாதுகாக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அரச தலைவர் என்ற அடிப்படையில் கோத்தபாய ராஜபக்ச தனக்குள்ள விடுபாட்டுரிமையை வலியுறுத்துவதை தடுப்பதற்காகவே இந்தத் தந்திரோபாய நடவடிக்கையை அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.
கோத்தபாய ராஜபக்ச வாழ்நாள் முழுவதும் அரச தலைவராக இருக்கப் போவதில்லை. ஒரு நாள் கோத்தபாயவுடன், அவருக்கு உதவியவர்களும் பொறுப்புக் கூறும் நிலை ஏற்படும். இந்தத் தாமதத்தால், பாதிக்கப்பட்டவர்கள் நீதிக்காக நீண்ட நாள் காத்திருக்க வேண்டியிருக்கும்.
வழக்குத் தாக்கல் செய்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தவர்களுக்கு எதிராகப் பழிவாங்கல் நடவடிக்கைகள் இடம்பெற்றால் இந்தக் குற்றங்களுக்கு யார் காரணம் என்பது தெளிவாகிவிடும். அதைப் பன்னாட்டுச் சமூகம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது. - என்றார்.
பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான திட்டம், ஹவுஸ்பீல்ட் எல்.எல்.பி. என்ற அமைப்புடன் இணைந்து வழக்கு தாக்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. கடந்த ஏப்ரல் மாதம் கலிபோர்னியா நீதிமன்றில் ரோய் சமாதானம் என்பவர் வழக்கு தாக்கல் செய்த நிலையில் இதன் பின்னர் ஜூன் மாதத்தில் இரண்டு சிங்களவர்கள் உட்பட பத்துப்பேர் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.
சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமெரிக்க நீதிமன்றில் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (எ)



நன்றி: நாமல் அமரசிங்க

# கொலைச் சதித்திட்டம் பற்றி விளக்கமளிக்கப்படவில்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.6
அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவைப் படுகொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டது என்று கூறப்படும் சதித்திட்டம் தொடர்பாக அமைச்சரவைக்கு விளக்கமளிக்கப்படவில்லை என்று அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது.
அமைச்சரவை முடிவுகளை அறிவித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இந்தச் சதித் திட்டம் தொடர்பாகப் பொலிஸார் தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்தச் சதித் திட்டம் தொடர்பான விவரங்கள் அமைச்சரவைக்கு விளக்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.
அதேவேளை, அரச தலைவர் அல்லது அவரது குடும்ப உறுப்பினரைக் கொலை செய்யச் சதித் திட்டம் தீட்டினர் என்று 5 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் 4 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார். (எ)

## ஈஸ்டர் தாக்குதல்: 63 பேருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ.6
உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலின் பின்னர் தேசிய தௌபீக் ஜமாத் இயக்கத்துடன் தொடர்டையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 63 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. நுவரெலியாவில் உள்ள தேசிய தௌபீக் ஜமாத் தலைமையகத்தில் ஆயுதப் பயிற்சி பெற்றனர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட காத்தான்குடியைச் சேர்ந்தவர்களே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.ரிஸ்வான் முன் இவர்கள் முற்படுத்தப்பட்டனர். அவர்களின் விளக்கமறியலை நீடித்து நீதிவான் உத்தரவிட்டார். (எ)

# தூதரகப் பெண் கடத்தலில் ஏற்பட்ட சந்தேகம் என்ன?

## இலங்கைத் தூதுவரை அழைத்து விளக்கம் கோரியது சுவிஸ் நாட்டு அரசு

கொழும்பு, டிசெ.6

இலங்கையில் உள்ள சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரி கடத்தப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இலங்கை கொண்டுள்ள சந்தேகங்களை விளக்க வேண்டும் என்று இலங்கைத் தூதுவரை அழைத்து சுவிஸ் அரசு விளக்கம் கோரியுள்ளது. இலங்கை அரசு வெளியிட்டுள்ள சந்தேகங்களை நிரூபிக்க வேண்டும் என்றும் அவரிடம் கோரப்பட்டுள்ளது.

சுவிஸின் அழைப்பையேற்று பெர்லினில் உள்ள இலங்கைத் தூதுவர் கருணசேன ஹெட்டியாராச்சி, சுவிஸின் அரச தலைமைச் செயலாளர் பாஸ்கல் பெரிஸ்வைலை பெர்னில் கடந்த திங்கட்கிழமை சந்தித்துள்ளார்.

இலங்கையின் பொலிஸ் புலனாய்வுத்துறையின் மூத்த அதிகாரி நிசாந்த டி சில்வா சுவிஸில் தஞ்சம் கோரியுள்ளார். தற்போது இலங்கையில் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச குடும்பத்தினரின் பல வழக்குகளை அவர் விசாரித்திருந்தார்.

அவர் சுவிஸில் தஞ்சம் கோரிய மறுநாள் கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றும் பெண் அதிகாரி ஒருவர் கடத்தப்பட்டுசுவிஸில்தஞ்சக்கோரிக்கை விடுத்துள்ள இலங்கையர்களின் பெயர்கள் உள்ளிட்ட விவரங்களைத் தரக்கோரி மிரட்டப்பட்டார் எனக் கூறப்படுகின்றது. தூதரகத்தில் பணியாற்றும் பெண் அடையாளம் தெரியாத ஆண்களால் அச்சுறுத்தப்பட்டு தூதரகம் தொடர்பான தகவல்களை வெளியிடக் கட்டாயப்படுத்தப்பட்டார் என சுவிஸ் வெளியுறவு அமைச்சகம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. சுவிஸ் தூதரகத்தின் விளக்கம் தொடர்பில் இலங்கை அரசு சந்தேகம் எழுப்பியுள்ளது.

தூதரகத்தின் தகவல்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக உள்ளன என்று இலங்கையிலுள்ள சுவிஸ் தூதர் ஹான்ஸ்பீட்டர் மோக்கை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்து இலங்கை அரச தரப்பினர் தெரிவித்தனர். தமது சந்தேகங்களுக்குரிய ஆதாரங்களை சமர்ப்பித்துள்ளோம் என்றும் இலங்கைவெளிவிவகார அமைச்சு தெரிவித்திருந்தது.

ஆனால், இலங்கையின் சந்தேகத்தை நிரூபிக்கும் ஆதாரங்கள் எவையும் தம்முடன் பகிரப்படவில்லை என சுவிஸ் வெளியுறவு அமைச்சகம் கடந்த திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கைத் தூதுவர் ஹெட்டியாராச்சியை அழைத்து சுவிஸ் அரசு இலங்கையின் சந்தேகங்கள் தொடர்பாக விளக்க வேண்டும் என்றும் சந்தேகத்துக்குரிய ஆதாரங்களைத் தர வேண்டும் என்றும் கோரியுள்ளது.

அதேவேளை, தூதரகப் பெண் அதிகாரி கடத்தப்பட்டமை குறித்து எதிர்வரும் 9ஆம் திகதிக்குள் அறிக்கை வழங்க வேண்டும் என்று கொழும்பு முதன்மை நீதிவான் லங்கா ஜெயரத்ன புலனாய்வுத் துறையினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடத்தப்பட்டார் என்று கூறப்படும் சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரி வெளிநாடு செல்லவும் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்த இலங்கையின் விசாரணைகளுக்கு ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாக சுவிஸ் அரசு அறிவித்துள்ளது. சம்பந்தப்பட்ட பெண் அதிகாரி சம்பவம் குறித்து வாக்கு மூலம் வழங்குவதற்கு ஏதுவான உடல்நிலையில் தற்போது இல்லை என்பதால் அவரை உடனடியாக விசாரிக்க முடியாது எனவும் சுவிஸ் அரசு தெரிவித்துள்ளது. (எ-22)

## முக்கிய சட்டத் திருத்தங்கள் அடங்கிய அரசிதழ் விரைவில்

கொழும்பு, டிசெ.6

மக்களுக்குச் சலுகைகளை வழங்குவதற்காக அரச தலைவரால் எடுக்கப்பட்டுள்ள முடிவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டத் திருத்தங்கள் அரசிதழில் வெளியிடப்படவுள்ளன.

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமாகுவதற்கு இரண்டு வாரத்துக்கு முன்னர் அவற்றை அரசிதழில் வெளியிடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற முக்கிய கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. இந்தக் கலந்துரையாடலின் போது இந்தியப் பயணம் தொடர்பான அறிக்கை ஒன்றை அரச தலைவர் முன்வைத்துள்ளார் என்றும் தகவல்கள்வெளியாகியுள்ளன. இந்தக் கலந்துரையாடலில் அரசின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாகவே அதிகளவில் அவதானம் செலுத்தப்பட்டிருந்தது என்றும், அரச தலைவர், தலைமை அமைச்சர், அமைச்சர்கள் உட்படப் பலர் அதில் பங்கேற்றனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)

## மண் சரிவுகளைக் கண்காணிக்க இலங்கைக்கு அமெரிக்கக் கருவி

கொழும்பு, டிசெ. 6

களுத்துறை நிக்கஹ, பகுதியில் காணப்படும் மண் சரிவு அபாயத்தை மேலும் வினைத்திறனாக முகாமைத்துவம் செய்யவென்று, மண்சரிவு கண்காணிப்புக் கருவிகளை ஐக்கிய அமெரிக்கா நன்கொடையாக வழங்கியுள்ளது. இலங்கையின் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்துக்கு இவை வழங்கப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக அமெரிக்காவின் புவியியல் ஆய்வைச் சேர்ந்த பொறியியலாளர்கள் மற்றும் புவியியலாளர்கள் கடந்த நவம்பர் 5 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வந்து இலங்கை விஞ்ஞானிகளின் பங்காண்மையுடன் இந்த உபகரணங்களை நிறுவுவது மற்றும் அவற்றைப் பயன்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடியிருந்தனர். இதனால்கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிகாரிகளும் மண்சரிவு அபாயம் இருக்கும் பகுதிகளை உடனடியாக அடையாளம் கண்டு மண்சரிவால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் மற்றும்சொத்துச்சேதங்களைத்தடுக்க முடிந்துள்ளது.

•சிறப்பான தயார்ப்படுத்தல் உயிர்களைப் பாதுகாக்கும் என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா பி.டெப்லிட்ஸ் தெரிவித்தார். இந்த உபகரணங்களைப்பயன்படுத்திகட்டட ஆராய்ச்சி நிறு வனத்தினர் மண்சரிவு ஏற்படக் கூடிய பிராந்திய இடங்களை அடையாளம் கண்டு முன்னெச்சரிக்கை வெளியிட முடியும். இது கிராம மக்களுக்கு மிகவும் அவசியமானதாகும்-என்றார். நான்கு மில்லியன் ரூபா பெறுமதியான இந்த உபகரணங்களைப் பயன்படுத்திக்கட்ட ஆராய்ச்சி நிறுவனத்தினர் நிலமட்ட நீர் மற்றும் மழைவீழ்ச்சி என்பவற்றைக் கண்காணித்து மண்சரிவுஅபாயத்தைமுற்கூட்டி யே அறிந்துகொள்ள முடியும். அமெரிக்க புவியியல் ஆய்வு நிறுவனத்தின் குழுவினர் மண்சரிவு ஏற்படும் இடங்களை அடையாளம் காணுதல், இடவியல் தரவுகளைப் பயன்படுத்துவது இடர் பதிலிறுப்பு நேரங்களில் விஞ்ஞானிகளின் பங்களிப்பு ஆகியவை தொடர்பில் கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணியாளர்களுக்குச் செயலமர்வுகளையும் நடத்தியிருந்தனர். ஒளி கண்டறிதல் மற்றும் வரம்புமுறையைப் பயன்படுத்திப் பெறப்பட்ட தகவல்களை எவ்வாறு பயன்படுத்துவது நிலத்தின் மேற்குப் பகுதியில் நிலைமைகளை அளவிடுதல் போன்ற விடயங்கள் பற்றியும் பங்குபற்றியவர்கள் தெரிந்து கொண்டனர். களத்திலிருந்து மண்சரிவு பற்றிய தகவல்களைச்சேகரித்தற்கான தொழில்நுட்பம் மடிக்கணினிகளைப் பயன்படுத்தி களத்திலிருந்து தகவல்களைச் சேகரித்தல் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (கு)

## தூதரகப் பணியாளர் கடத்தல் அரசுக்கு எதிரான சூழ்ச்சியே!

### பேராசிரியர் பீரிஸின் கண்டுபிடிப்பு

கொழும்பு, டிசெ. 6

கொழும்பிலுள்ள சுவிற்சர்லாந்துத் தூதரகத்தின் பெண் அதிகாரி ஒருவர் கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவத்துக்குப் பின்னால் பன்னாட்டு மட்டத்தில் தற்போதைய அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் சூழ்ச்சி உள்ளது என ஸ்ரீலங்கா பொதுமக்கள் முன்னணியின் முன்னாள் தவிசாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மத நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது அந்தப் பெண் வழங்கியுள்ள சாட்சியத்தில் அவர் தெரிவித்த விடயங்கள் பொய் என்று தொழிநுட்ப சாட்சிகளின் மூலம் தெரியவந்துள்ளது. தற்போதைய அரசு தனது கடமைகளை ஆரம்பித்துள்ள இந்த நேரத்தில் இவ்வாறான குற்றச்சாட்டை மேற்கொண்டு, நாட்டுக்கும் மற்றும் புதிய அரசுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளது.

அதில் பன்னாட்டு மட்டத்தில் இலங்கை மீது குற்றச்சாட்டை முன்வைத்து தற்போதைய அரசின் மீது ஆரம்பித்திலேயே அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடே இது. இந்தச் சவால்கள் அனைத்தையும் எதிர்கொண்டு முன்னோக்கிச் செல்வதற்குத் தேவையான பலம் தற்போதைய அரசுக்கு உண்டு. பொதுமக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதே தற்போதைய அரசின் பிரதான நோக்கமாகும் - என்றார். (எ-22)

## ஹெரோயின் உடைமையில் வைத்திருந்த மூவர் கைது

கொழும்பு, டிசெ.6

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 3 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீடு ஒன்றைச் சோதனைக்கு உட்படுத்திய போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும், சந்தேக நபர்களிடம் இருந்து 22 கிராம் 410 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

# இலங்கையில் இரு தேசம் இது எம் கொள்கையில்லை

## பிரிட்டன் கொன்சர்வேட்டிவ் கட்சி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.6

இலங்கையில் இரு தேச கொள்கையைத் தமது கட்சி கடைப்பிடிக்கவில்லையென பிரிட்டன் கொன்சர்வேட்டிவ் கட்சி தெரிவித்துள்ளது. இது குறித்து தெளிவுபடுத்தலை இலங்கை அயலுறவு அமைச்சு வெளியிட்டுள்ளது.

கொன்சர்வேட்டிவ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் மத்திய கிழக்கு, சைப்பிரஸ், இலங்கையில் இரு தேசக் கொள்கையை கடைப்பிடிப்போம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது அதில் திருத்தம் செய்து மத்திய கிழக்கில் மத்திரமே அந்தக் கொள்கையைக் கடைப்பிடிப்போம் எனத் தெரிவித்துள்ளது.

"உலகெங்கிலும் நல்லிணக்கம், நிலைத்தன்மை மற்றும் நீதியை அடைவதற்கான பன்னாட்டு முயற்சிகளுக்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவளிப்போம். முன்னர் மோதல் நடந்த நாடுகளான சைப்பிரஸ், இலங்கை மற்றும் மத்திய கிழக்கு போன்ற நாடுகளில் இரு அரச தீர்வுக்கான எங்கள் ஆதரவைத் தொடர்வோம்" என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதையடுத்துப் பிரிட்டனுக்கான இலங்கைத் தூதர் மனிஷா குணசேகர, கொன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர்களுடன் பேச்சு நடத்தியிருந்தார்.

இது தொடர்பாக, பிரிட்டனுக்கான தூதர் மனிஷா குணசேகர தெரிவித்தபோது, இரு அரச தீர்வு தேவைப்படும் ஒரு நாடு என்று இலங்கையைக் குறிப்பிடுவது ஏற்றுக் கொள்ள முடியாதது. பிரிட்டனில் எந்தவொரு கட்சியினதும் நிலைப்பாடு இதுவாக இல்லை. ஐக்கியப்பட்ட இலங்கையில் எப்போதும் அமைதி மற்றும் நல்லிணக்கத்தையே அனைத்துப் பிரிட்டன் அரசுகளும் ஆதரித்தன. இலங்கை பற்றிய கொன்சர்வேடிவ் கட்சி நிலைப்பாட்டை துல்லியமாகப் பிரதிபலிக்கும் வகையில் பத்தி திருத்தப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

கொன்சர்வேடிவ் கட்சியின் துணைத் தலைவர் போல் ஸ்கல்லி இந்த விடயத்தில் பின்வரும் விளக்கத்தை இலங்கைத் தூதுவருக்குத் தனது மின்னஞ்சல் மூலம் விளக்கமளித்துள்ளார்.

"இலங்கை தொடர்பாக கட்சியின் நிலைப்பாடு மாறவில்லை. முற்றிலும் தெளிவாக இருக்கிறது. இந்த பிரிவில் இரு அரச வரிசை மத்திய கிழக்கில் இஸ்ரேல் பாலஸ்தீன நிலைமையை மட்டுமே குறிக்க வேண்டும். இலங்கை மற்றும் சைப்பிரஸுடனான கடமைகள் பிளவுபட்ட சமூகங்களில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஆதரிப்பதற்கான தற்போதைய முயற்சிகளைத் தொடர்வதாகும்" என்று அவர் தெரிவித்துள்ளார். (எ)

# மதுபானம் சிகரெட் விலைகள் குறையா!

கொழும்பு, டிசெ.6

மதுபானம் மற்றும் சிகரெட் வகைகளுக்கான விலைகள் குறையா என்று அரசு தெரிவித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானத்தை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

பெறுமதி சேர் வரி எட்டு வீதத்தால் குறைக்கப்பட்டபோதும் அது மதுபானம் மற்றும் புகையிலை உற்பத்தி பொருள்களின் விலைகளில் மாற்றத்தை ஏற்படுத்தாது.

குறைக்கப்படும் பெறுமதி சேர் வரியானது மதுபான மற்றும் சிகரெட் உற்பத்தி தொடர்பாக அறவீடு செய்யப்படும் உற்பத்தி வரியை அதிகரிப்பதன் மூலம் சமனிலை செய்யப்பட்டுள்ளது.- என்றார். (எ)

## ஐ.தே.கவை உடைக்கும் முயற்சிகள் பலிக்கா!

### நவீன் திசாநாயக்க தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியை எவராலும் துண்டாட முடியாது என்று தெரிவித்துள்ளார் முன்னாள் அமைச்சர் நவீன் திசாநாயக்க.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எனது தந்தை காமினி திசாநாயக்கா, லலித் அத்துலத் முதலி போன்றோர் அன்றைய அரச தலைவர் ரணசிங்க பிரேமதாசவுடன் முரண்பட்டுத் தனித்துச் செயற்பட்டுக் கட்சி துண்டாடப்படும் நிலைக்கு இட்டுச் சென்றனர். ஆனால் அன்று அவர்களால் அதில் வெற்றிபெற முடியாது போனது. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் காணப்பட்ட ஜனநாயக மரபு காரணமாக கட்சி இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

அண்மைக்காலமாக கட்சிக்குள் சிலர் கட்சியைச் சின்னாபின்னப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அரச தலைவர் தேர்தலில் நாம் அடைந்த பின்னடைவுக்கு ஒற்றுமையின்மையும் ஒரு காரணமாகும். அதிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஜனநாயகத்தின் மீது பலம்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியை பிளவுப்படுத்தித் துண்டாட எவருக்கும் இடமளிக்க முடியாது. எமக்கிடையேயான கருத்து முரண்பாடுகளை உள்ளே இருந்துதான் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். கட்சிக் கட்டுப்பாட்டை மீறிச் செயற்பட முனையக்கூடாது. - என்றார். (எ)



## பேராயரை சந்தித்தார் பாதுகாப்புச் செயலர்

கொழும்பு, டிசெ.6

பாதுகாப்புச் செயலர் கமல் குணரட்ணவுக்கும், கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும்இடையே நேற்றுமுன்தினம் சந்திப்பு நடந்துள்ளது.

கொழும்பு ஆயர் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது. இதன்போது பல்வேறுபட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனக் கர்தினால் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார். அண்மையில் தன்னைச் சந்தித்த அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவிடமும் அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியிருந்தார். (எ)

## பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சட்டத்தரணிகளாக செயற்படமுடியாது

யாழ்ப்பாணம், டிசெ. 6

பல்கலைக் கழகங்களில் பணியாற்றும் போதனைசார் பணியாளர் தொகுதியினர் எவருமே சட்டத்தரணிகளாகச் செயற்பட முடியாது என்றும், தமது வழக்கமான பணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில், அவ்வப் பல்கலைக்கழகங்களின் கல்வி நிறுவனங்களின் ஆளும் அதிகார சபை (பேரவை) அனுமதியுடன் நொத்தாரிசுக்களாக பணியாற்ற முடியும் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் அவதானங்களுக்கு அமைவாக கடந்த மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 885 ஆவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து, கடந்த செப்ரெம்பர் 5ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 1017 ஆவது கூட்டத்தில் இந்தத் தீர்மானம் உறுதி செய்யப்பட்டிருப்பதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மெஹான் டி சில்வா தெரிவித்துள்ளார். பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10 / 2019 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கையின் மூலம் சகல பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கும் இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (து-ரி1)

# இது பௌத்த நாடு என்னும் அடிப்படையிலேயே ஆட்சி

## பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

இலங்கை பௌத்த நாடு. இந்த அரசு அதை அடிப்படையாக வைத்தே ஆட்சியை முன்னெடுக்கும் என்று உயர் கல்வி அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள், தகுதி வாய்ந்த அதிகாரிகள், பீடாதிபதிகள் மற்றும் பதிவாளர் ஆகியோருடன் கடந்த செவ்வாய்க்கிழமை உயர்கல்வி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்தக் கலந்துரையாடல் தனிச்சிங்கள மொழியிலேயே முன்னெடுக்கப்பட்டது என்று தெரியவருகின்றது. அதில் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்ததாவது:

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடையும் அனைவருக்கும் பல்கலைக் கழக வாய்ப்பை வழங்கவேண்டும் என்ற குறிக்கோள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதனால் அடுத்துவரும் ஆண்டுகளில் பல்கலைக் கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவால் அதிகரித்துச் செல்லும். தற்போது பல்கலைக் கழகங்களில் காணப்படும் பௌதீக வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கான திட்டங்களைத் துணைவேந்தர்கள், பீடாதிபதிகள் முன்னெடுக்கவேண்டும். - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசுவாமி, விவசாயப் பீடாதிபதி கலாநிதி எஸ்.சூரியகுமார், விஞ்ஞானப் பீடாதிபதி பிறின்ஸ் ஜெயதேவன், வவுனியா வளாக வணிகக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி ஏ.புஸ்பநாதன், பல்கலைக்கழகப் பிரதிப் பதிவாளர் என்.ராஜவிசாகன் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ)




## கலை நிகழ்வு

சாவகச்சேரி,டிசெ.6
யாழ்ப்பாணம் மட்டுவில் சரசாலை குடும்ப முன்பள்ளிகளின் கலை நிகழ்வு வளர்மதி விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், உதயன் குழுமப் பணிப்பாளர் திருமதி யசோதை சரவணபவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.

(ஐ-9,159)



கிளிநொச்சி ஆனந்தநகர் கலைமகள் முன்பள்ளிச் சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த மாதம் மர நடுகை மாதமாகும். இதையொட்டி அங்கு மரங்களும் நடுகை செய்யப்பட்டன. யாழ்ப்பாணம் தீவகம் செண்பகம் தமிழ்த் தேசிய செயற்பாட்டுக் குழுமத்தால் இவை வழங்கப்பட்டன. (து)

## சிறப்புத் தேவையுடையோர் தின சிறப்பு நிகழ்வு

முல்லைத்தீவு,டிசெ.6
சிறப்புத் தேவையுடையோர் தின நிகழ்வு துணுக்காய் ஒளிரும் வாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை அமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்றது.
நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா, கமநல சேவை பெரும் போக அலுவலகர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.


(ஐ-222)



## மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

கொடிகாமம்,டிசெ.6
யாழ்ப்பாணம் கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் கையளிக்கப்பட்டன.
பாடசாலை அதிபரின் வேண்டுகோளையடுத்து இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்க உறுப்பினர் ந.ஹிரிஷாந்தின் பிறந்தநாளை முன்னிட்டு இந்த உபகரண்ங்கள் வழங்கப்பட்டன. (ஐ-159)





திருமறைக் கலாமன்றத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக்கொடை நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மன்ற கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெற்றது. (ஐ-23)



## மாணவர்கள் 153 பேருக்கு கற்றல் உபகரணங்கள்

முல்லைத்தீவு,டிசெ.6
முல்லைத்தீவு மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் 153 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றியத்தால் ஒன்றியத்தின் லண்டன் கிளையினரின் அனுசரணையில் இந்த உதவி அண்மையில் வழங்கப்பட்டது.
முல்லைத்தீவு அம்பலவன்பொக்கனை மகா வித்தியாலயம், முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு க.உ.வித்தியாலயம், முல்லைத்தீவு ஆனந்தபுரம் அ.த.க பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்கே இந்த உதவி வழங்கப்பட்டது.
நிகழ்வில் மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றியச் செயலர் மோகன், பொருளாளர் வசந்தராஜ், உபதலைவர் கண்ணன், அங்கத்தவர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-159)



## தமிழ் கரோல் பாடல் போட்டியில் புனித சூசையப்பர் ஆலயம் முதலிடம்

வவுனியா,டிசெ.6
அகில இலங்கை தமிழ் கரோல் பாடல் போட்டியில் வவுனியா வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலய பங்குப் பாடகர் குழு முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.
கொழும்பு - றாகம புனித பேதுருவானவர் மற்றும் பவுலடியார் பேராலயத்தில் இந்தப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
வவுனியா வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலய பங்குப்பாடகர் குழுவில் சனோஜன், நிதுஷன், டிலைக்சன், ஜெறோன், திலோஷன், றொக்ஷினி, சோபிகா, ஜெசிந்தா, ஜெனுஷியா, வைலட் சொப்னா ஆகிய மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)



## மருத்துவ இயந்திரம் வழங்கல்

ஊர்காவற்றுறை,டிசெ.6
மாரடைப்பின் போது மருந்துகளைக் குருதிக் குழாயில் செலுத்தும் இயந்திரம் (Syringe infusion pump) ஒன்று ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது.
இந்த இயந்திரத்தை லண்டனில் இருந்து வருகை தந்திருந்த அனலைதீவைச் சேர்ந்த பொறியியலாளர் நாதன்சபாபதி பத்மநாதன் அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.
ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைக்கு கடந்த மாதம் பொது மருத்துவ நிபுணர் நியமிக்கப்பட்டமையைத் தொடர்ந்து நோயாளர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் அதிகரித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-154)



## டெங்குக் கட்டுப்பாடு சிறப்புக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.6
டெங்குக் கட்டுப்பாடு தொடர்பில் சிறப்புக் கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
மாவட்டச் செயலர் என். வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் ,பிரதேச செயலர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், சுகாதார அமைச்சின் பிரதிநிதிகள், பொலிஸார், சுகாதாரப் பிரிவினர், அரச உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்று மாநகர முதல்வர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வருடாந்த பரிசளிப்பு விழா





யாழ்ப்பாணம்,டிசெ.6

புத்தூர் சோமஸ்கந்தா இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அதிபர் இ.கோகுலராகவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தி னராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன், சோமஸ்கந்தாக் கல்லூரியின் ஓய்வுநிலைப் பிரதி அதிபர் வ.சிவலீலாதேவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. (க-9)

## சாவகச்சேரி சந்தையில் குருதிப் பரிசோதனைகள்



சாவகச்சேரி,டிசெ.6

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர், பன்னாட்டு நீரிழிவு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பொதுச் சந்தையில் அண்மையில் இலவச குருதிப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

பரிசோதனைகளின் போது நீரிழிவு அடைவுமட்டம் அதிகரித்துக் காணப்பட்டவர்கள், சாவகச்சேரி மருத்து வமனையில் சிகிச்சை பெறுமாறும் அறிவுறுத்தப் பட்டனர்.

கழகத்தின் மூத்த உறுப்பினர்களான லயன் .ச.சி.அரு ளானந்தம், லயன் கா.சற்குணதேவன் ஆகியோர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

காலையில் சந்தைக்கு வந்திருந்த பெருமளவு மக்கள் பரிசோதனைகளை மேற்கொண்டமையைக் காண முடிந்தது. (க-9)



மூளாய் இந்து இளைஞர் மன்ற முன்பள்ளியில் கல்வி பயின்ற சிறார்கள் தரம் ஒன்றுக்கு செல்வ தற்காக வழியனுப்பும் நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது . (க)

## வருடாந்த ஒளிவிழா

வவுனியா,டிசெ.6

வவுனியா சின்னத்தம்பனை அ.த.க பாடசாலையின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வுகள் அண்மையில் இடம் பெற்றன.

நிகழ்வில் அண்மையில் இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் கள் மதிப்பளிக்கப்பட்டனர். அவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன. பரி சில்கள் மற்றும் வெற்றிக்கிண்ணத்துக்கான நிதியு தவியை வவுனியா உதவிடும் கைகள் அமைப்பு வழங் கியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா தெற்கு வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் இராஜமோ கன், சிறப்பு விருந்தினர்களாக செட்டிகுளம் பிரதேச சபைத் தவிசாளர் அந்தோனி ஆசீர்வாதம் மற்றும் உறுப்பினர் அஜந்தன், முன்பள்ளி ஆசிரியை சிவகு மார் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-104)



## பாடசாலை மாணவர்களால் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம்

கொடிகாமம்,டிசெ.6

கைதடி நவபுரம் இராசபுரி கிராமத்தில் ஆசிரியர்கள் மற் றும் மாணவர்களால் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்டது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் அனுமதியுடன் கைதடி எருதில் அ.த.க பாடசாலையின் அதிபர் தேசுதாசன் தர்ம துரை தலைமையில் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.கிருஷ்ண ரட்ச கன், ஜே/292 கிராம அலுவலர் கே.முல்லைமாறன், பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்துக்குப் பொறுப்பான ஆசிரிய ஆலோசகர் வே.சந்திரகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் விழிப்புணர்வு நாடகமும் மாணவர்களால் நிகழ்த்தப்பட்டது. (க-159)



## தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு வைபவம்

கோப்பாய், டிசெ.6

வலி.கிழக்குப் பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கோப்பாய் உப அலுவலகத்தில் இடம்பெற்றது.

தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் ராஜரட்ணம் ராஜேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ)





## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.6

அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், கல்வி உதவித் தொகையும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை முன்னாள் அதிபர் வை.குகானந்தன் நினை வாக அவரது குடும்பத்தினரால் இந்த உதவிகள் வழங் கப்பட்டன. வித்தியாலய அதிபர் நா. இராதாகிருஷ்ணன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. (ஐ-9)

## நஞ்சற்ற உணவின் நன்மைகள் விழிப்புணர்வு கலந்துரையாடல்



யாழ்ப்பாணம்,டிசெ.6

நஞ்சற்ற உணவின் நன்மைகள் மற்றும் நஞ்சுள்ள உணவுக ளின் பாதிப்புக்கள் தொடர்பான விழிப்பு ணர்வுக் கலந்துரையா டல் மருதனார்மடம் விவசாயக் கல்லூரி மண்டபத்தில் கடந்த வாரம் இடம் பெற்றது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் என்.இன்பம் தலைமையில் கலந்துரை யாடல் இடம்பெற்றது.

இதில் வளவாளராக விவசாயப் போதனாசிரியர் எஸ். கந்தசாமி கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கி னார்

கலந்துரையாடலில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க இளைஞர்கள் குழு, உறுப்பினர்கள் யாழ். மாவட்ட பூந்தளிர் பெண்கள் குழு உறுப்பினர்கள், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கச் செயற்பாட்டாளர் கள் கலந்து கொண்டனர். (க-160)

## குண்டும் குழியுமாக வீதி பயணிப்போர் பெரும் சிரமம்



ஊர்காவற்றுறை, டிசெ.6

ஊர்காவற்றுறை சுருவில் வீதி மிகவும் சேதமடைந்து காணப்படுவதால் மக்கள் போக்குவரத்தில் பெரும் சிர மங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்பொழுது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் வீதியில் வெள்ளம் தேங்கியுள்ளது. குழிகளுக்குள் மக்கள் விழுந்தெழும்பும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

குறித்த வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்குச் சொந் தமானது. வீதியைச் சீரமைத்துத் தருமாறு பல தடவை களில் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைக் கப்பட்ட போதும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித் துள்ளனர். உரிய அதிகாரிகள் கவனமெடுத்து வீதி யைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-154)

# பொதுத் தேர்தலிலும் மொட்டுச் சின்னமே

## பிரசன்ன ரணதுங்க கூறுகின்றார்

கொழும்பு, டிசெ.6

உள்ளூராட்சி மன்றத் தேர்தல், அரச தலைவர் தேர்தல் போன்று நாடாளுமன்றத் தேர்தலிலும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி மொட்டுச் சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் மஹர தொகுதியில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: ஏனைய அரசியல் கட்சிகள் பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்தமைக்கான முதன்மைக் காரணம் உள்ளூராட்சித் தேர்தலில் மொட்டுச் சின்னத்துக்குக் கிடைத்த பெரும் மக்கள் ஆணையே.

அதனால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி மொட்டுச் சின்னத்திலேயே போட்டியிட வேண்டும். எதிர்வரும் 4 மாத காலப் பகுதியில் கம்பகா மாவட்டத்தில் 4 இலட்சம் மேலதிக வாக்குகளைப் பெறும் வேலைத் திட்டம் ஒன்று செயற்படுத்தவுள்ளோம்.

எதிர்வரும் 3 மாத காலப் பகுதியில் தற்போதைய அரசில் ஒரு சில குறைபாடுகள் ஏற்படலாம். ஆனால் பொதுத் தேர்தலின் பின்னர் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்ற பின்னர் அமைக்கப்படும் அரசில் பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்ய முடியும் - என்றார். (எ)



## அமைச்சராக மாறிய துமிந்தவின் மகள்!

கொழும்பு, டிசெ. 6

இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸநாயக்கவின் மகள் தனது தந்தை பதவியேற்பதைப்போன்று ஒளிப்படம் எடுத்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளார்.

பலராலும் விரும்பப்பட்டு, பகிரப்பட்டு வருகின்றது இந்த ஒளிப்படம். 'என்னதான் அப்பா அமைச்சராக இருந்தாலும் மகள்களுக்கு அவர் அலுவலக உதவியாளர்தானே' என்கின்றனர் வலைத்தளவாசிகள். (ம)

## பாதுகாப்பை உறுதி செய்ய பாதுகாப்புத் தரப்புத் தயார்

### பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.6

பண்டிகைக் காலம் ஆரம்பித்துள்ளதால் நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. மக்களின் பாதுகாப்பைத் தடையின்றி உறுதிப்படுத்தப் பொலிஸாரும், இராணுவத்தினரும் தயாராகவே உள்ளனர்.

இவ்வாறு பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

சீன அரசின் நிதி உதவியில் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள உந்துருளிகளை நாடளாவிய ரீதியில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நேற்றுக் கொழும்பில் உள்ள பொலிஸ் காலாட் படைத் தலைமையகத்தில் நடைபெற்றது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்ட பாதுகாப்புச் செயலர், நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச தலைவர் கோத்தாபய ராஜபக்சவை கொலை செய்யச் சதித் திட்டம் தீட்டினர் எனக் கூறிச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பில் நீங்கள் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறீர்கள்? என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

தகவல்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. அந்த தகவல்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு தொடர்பில் எந்த சிக்கலும் இல்லை என்று உறுதியளிக்கின்றோம்.

இராணுவம் மற்றும் பொலிஸ் உள்ளிட்ட அனைத்து பாதுகாப்பு துறையினரும் சிறப்பாகத் தமது பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். டிசெம்பர் மாதம் ஆரம்பித்துள்ளது.

இந்த மாதத்தில் பெரும்பாலான மக்கள் பல உற்சவங்கள், பண்டிகைகளில் கலந்து கொள்வார்கள். விடுமுறை காலம் என்பதால் பாடசாலை மாணவர்கள் சுற்றுலா செல்வார்கள். இவை மாத்திரமின்றி புலம்பெயர் இலங்கையர்கள் உள்நாட்டுக்கு வருவார்கள்.

இவர்கள் அனைவரதும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது எமது பொறுப்பாகும். அந்த பொறுப்பை தடையின்றி நிறைவேற்றப் பொலிஸாரும் இராணுவத்தினரும் தயாராகவே இருக்கின்றனர். அதற்கான முறையான வேலைத்திட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் பதிலளித்தார். (எ)

## பாடசாலை சீருடைக்கான வவுச்சர் வழங்க அனுமதி

கொழும்பு, டிசெ. 6

பாடசாலை சீருடைக்கான வவுச்சர் வழங்கும் செயன்முறையை தொடர்ந்தும் செயற்படுத்தும் கல்வி அமைச்சின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி 2020ஆம் ஆண்டு முதல் பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வவுச்சர்களை தொடர்ந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போதே அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டில் புதிய அரசின் பதவிக் காலத்தின் தொடக்கத்தில் அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலைச் சீருடைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெரும முன்னர் குறிப்பிட்டிருந்தார். சீருடைக்குப் பதிலாக வவுச்சர்களை வழங்க கடந்த அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக அரசிடம் அதிக செலவுகள் ஏற்பட்டுள்ளதாக, அரச தலைவர் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



## க.பொ.த சாதாரண பரீட்சையில் தோற்றிய ராமநாயக்க எம்.பி

கொழும்பு, டிசெ. 6

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க க.பொ.த சாதாரண தர பரீட்சையில் நேற்றுத் தோற்றினார்.

ஆங்கில பாடத்தில் எனக்கு 'எஸ்' சித்தி உள்ளது. சட்டத்தரணியாக கல்வியை தொடர விரும்புவதால், சி சித்தி எனக்கு தேவை. எனவேதான் இன்று நான் ஆங்கில பாட பரீட்சை எழுத வந்தேன். சி சித்தியை என்னால் பெறமுடியும் என்று நான் நம்புகிறேன் என்று அவர் தெரிவித்தார். (ம)

### சாவகச்சேரி நகரசபை உறுப்பினருக்கு எதிராக

## சாவகச்சேரி கடலுணவு வியாபாரிகள் கடையடைப்புக்குத் தயாராகின்றனர்!

சாவகச்சேரி, டிசெ. 6

பொய்யான தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கி தமது வாழ்வாதாரத்தைக் கெடுத்தார் என்று சாவகச்சேரி நகர சபை உறுப்பினருக்கு எதிராக குற்றச்சாட்டொன்றை முன்வைக்கும் சாவகச்சேரி கடலுணவு வியாபாரிகள் குறித்த உறுப்பினருக்கு எதிராகக் கடையடைப்பை முன்னெடுக்கப் போவதாக தவிசாளருக்கு அறிவித்துள்ளனர்.

சாவகச்சேரி பொதுச்சந்தையில் சடலங்களுக்குப் பயன்படுத்தும் பொமிலன் மருந்து பயன்படுத்திய கடலுணவுகள் விற்பனை செய்யப்படுகின்றன என்று நகரசபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்த கருத்து ஊடகங்களில் நேற்றுமுன்தினம் வெளியாகி பரபரப்பாகியிருந்தது. இந்தக் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கும் வியாபாரிகள், குறித்த நபர் திட்டமிட்ட பொய்ப் பரப்புரையில் ஈடுபடுகின்றார் என்று உதயனுக்குத் தெரிவித்தனர். அத்துடன் குறித்த நகர சபை உறுப்பினருக்கு எதிராக ஒருநாள் முழுஅடைப்புப் போராட்டத்தில் ஈடுபடப்போகின்றோம் என்றும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தவிசாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, அவர்கள் வியாபாரிகள் முழு அடைப்புத் தொடர்பில் அறிவித்தமையை உறுதிப்படுத்தினார். எனினும் எப்போது முழு அடைப்பு என்று தெரிவிக்கப்படவில்லை. (ம-9)

# சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரி வாக்குமூலம் தருவது அவசியம்!

## அமைச்சரவைப் பேச்சாளர்கள் வலியுறுத்தல்

கடத்தப்பட்டார் என்று கூறப்படும் சுவிஸ் தூதரகத்தின் பெண் அதிகாரி தானாக முன்வந்து வாக்குமூலம் வழங்க வேண்டும் என்று தெரிவித்தனர் அமைச்சரவைப் பேச்சாளர்கள்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கடத்தப்பட்டதாக கூறப்படும் சுவிஸ் தூதரக பெண் ஊழியர் இலங்கையில்தான் உள்ளாரா அல்லது வெளிநாட்டுக்கு சென்றுவிட்டாரா என்று எதுவேமே தெரியாது.

அத்தோடு, சுவிஸ் தூதரக பெண் ஊழியர் கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டதாகக் கூறப்படும் விவாகரத்தில் அவராக வந்து வாக்குமூலம் வழங்க வேண்டும்.

இந்த சூழலில் வலுக்கட்டாயமாக வாக்குமூலம் பெற அரசு முயற்சிக்கவில்லை என்றும் அவ்வாறு ஏதேனும் முயற்சிகள் எடுத்தால் அதுவும் எமக்கு எதிராகவே மாறும் என்றனர். (ம)

### ஜனநாயகத்துக்கு...

சம்பந்தனுக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டேபிளிஸ்க்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே சம்பந்தன் மேற்படி வலியுறுத்தினார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

நடைபெற்று முடிந்த அரச தலைவர் தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகளால் தேர்தல் புறக்கணிப்பு மற்றும் தமிழ் வேட்பாளர் ஒருவருக்கு வாக்களித்தல் போன்ற கோரிக்கைக்ள் முன்வைக்கப்பட்டிருந்த போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமே தமிழ் மக்களை சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்குமாறு கோரியது. அத்தகைய கோரிக்கையை தமிழ்மக்கள் அங்கீகரித்திருந்தமையை தேர்தல் முடிவுக்ள் வெளிக்காட்டியிருந்தன இந்த விடயம் தூதுவரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

மேலும் தேசியப் பிரச்சினைக்கு துரிதமாக தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்திய இரா. சம்பந்தன், மக்கள் சுயமரியாதையுடனும் தன்மானத்துடனும் தமது நாளாந்தப் பிரச்சினைகள் தொடர்பில் தாமே முடிவெடுக்கக்கூடிய வகையிலான ஓர் அரசியல் தீர்வினை அரசமைப்பின் ஊடாக அடைவதே எமது நோக்கம் - என்றார்.

19ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், ஜனநாயகப் பண்புகளுக்கு விரோதமான எந்தவொரு திருத்தங்களுக்கும் நாம் ஆதரவளிக்கப்போவதில்லை என்றும் சுயாதீன ஆணைக் குழுக்களை இல்லாதொழிப்பதற்கு தாம் சார்பாகச் செயற்பட முடியாது என்பதனையும் வலியுறுத்திக் கூறினார்.

இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் நிறைவேறிய மனித உரிமை பேரவை பிரேரணை தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன் இலங்கை அரசு உள்நாட்டிலே கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியமையே இந்த விடயங்கள் பன்னாட்டு மயப்படுத்தப்பட்டமைக்கான முக்கிய காரணமாகும் என்று தெரிவித்தார் - என்றுள்ளது. (ம)

### யாழ்...

பல்கலைக் கழகம்" என்பது எழுத்துப் பிழைகளுடன் அச்சிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பதிவாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, பல்கலைக் கழகத்தின் அனுமதியைக் கோராது குறித்த இலச்சினை அச்சிடப்பட்டுள்ளது. அது வெறும் ஸ்ரிக்கர் மட்டுமே. ஸ்ரிக்கர் உரிக்கப்பட்டு சரி செய்யப்படும் என்று தெரிவித்தார்.

"பட்டமளிப்பு விழா என்பது எமது கனவு. தமிழுக்குப் பெயர்போன பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளமை வேதனையைத் தருகின்றது'' என்று மாணவர்கள் சிலர் உதயனுக்குத் தமது ஆதங்கத்தைத் தெரிவித்தனர். (ம-21)

### டெங்கால்...

போதிலும் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார் என்று முசலி இறப்பு விசாரணை அதிகாரி ஏ.ஆர்.நசீர் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது. (ம-56)

### அரசியல்...

வில்லை. அவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிக்குமாறு எவ்வித அறிவித்தரும் வெளிவரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-22,105)

### எதிர்க்...

ளது.

அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிட்டார் சஜித் பிரேமதாஸ. இந்தத் தேர்தலில் சஜித் படுதோல்வியைச் சந்தித்தார். இதையடுத்து ஆட்சியில் இருந்து விலகி பொது மக்கள் முன்னணியினர் அரசமைக்க இடம்கொடுத்தார் ரணில் விக்கிரமசிங்க. இதையடுத்து எதிர்க்கட்சித் தலைமை தொடர்பில் ஐ.தே.கவுக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க தான் எதிர்க்கட்சித் தலைவர் என்று சிலரும், சஜித்தான் எதிர் கட்சித் தலைவர் என்று இன்னும் சிலரும் விவாதித்தனர். இதையடுத்து இடம்பெற்ற பல சுற்றுக் கலந்துரையாடல்களை அடுத்து சஜித்தை நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

சஜித் பரிந்துரைக்கப்பட்டதை ஏற்றுக் கொண்டுள்ள சபாநாயகர் ஜனவரி மாதம் 3ஆம் திகதிய அமர்வில் அவர் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுவார் என்று தெரிவித்தார். (ம)

### பரீட்சைகளை...

என்போருடன் அரச தலைவர் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அரச தலைவர் இவ்வாறு வலியுறுத்தினார் என்று அவரின் ஊடகப்பிரிவால் அனுப்பப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட உலக பொருளாதாரத்துக்குத் திறமைவாய்ந்த இளம் தலைமுறைய உலகுக்கு வழங்கக்கூடிய கல்வி முறைமைக்குள் உடனடியாக பிரவேசிக்க வேண்டியுள்ளது. இதன்போது பரீட்சையை மையமாகக்கொண்ட கல்வி முறைமையிலிருந்து விலகி பிள்ளைகளின் தோள்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சுமக்க முடியாத சுமைகளை நீக்கும் வகையிலான பின்புலமொன்றை அமைக்க வேண்டும்.

கல்வித்துறை குறித்த தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அரசியலில் இருந்து விலகி கல்வியியலாளர்களினால் அவை மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம்.

2018ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளை கூடிய விரைவில் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். 2019ஆம் ஆண்டிலிருந்து உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகி குறுகிய காலத்திற்குள் பிள்ளைகளை பல்கலைக்கழகங்களுக்குள் உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நாட்டின் தேவையை கண்டறிந்து பாடநெறிகளை தயாரிக்கும் சந்தர்ப்பத்தை பல்கலைக்கழகங்களுக்கு வழங்க வேண்டிய காலம் உருவாகியுள்ளது. இதற்காக பல்கலைக்கழகங்களை வலுவூட்ட வேண்டியுள்ளதுடன், போலியான நியாயங்களில் இருந்து விலகி கல்வித் துறையை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

விஞ்ஞானம் மற்றும் கணிதத் துறைகளில் அதிகளவு மாணவர்களை நாட்டுக்கு வழங்க வேண்டியுள்ளது. கலைத்துறையில் கல்விகற்று வருகின்றவர்களை குறுகிய காலத்தில் தகவல் தொழிநுட்ப அறிவுடன் பொருளாதார நடவடிக்கைகளுடன் இணைத்துக்கொள்வதும் மிகவும் முக்கியமானது.

உயர்கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளுக்கு செல்லும் மாணவர்களுக்கு தமது கல்வி நடவடிக்கைகளை நாட்டுக்குள்ளேயே பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும். ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் பாடசாலைகளில் இருக்க வேண்டிய ஆசிரியர்களின் தொகையை வெற்றிடங்கள் ஏற்படாத வகையில் பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்றும் அரச தலைவர் வலியுறுத்தினார் -என்றுள்ளது. (ம)

### தேசிய...

கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அரச தலைவரின் கொள்கைக்கு அமைய நாட்டின் அனைத்து ஆசிரியர்களையும் பட்டதாரிகளாக மாற்றும் திட்டத்தின் கீழ் இந்தத் தீர்மான வரைவு முன்வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்குக் குழுவொன்றும் நியமிக்கப்படவுள்ளது. கல்வி மற்றும் உயர் கல்வித்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இந்தக் குழுவில் நியமிக்கப்படவுள்ளனர்.

அதேவேளை, கல்விச் சேவைக்கான புதியதிட்டங்களைவகுப்பதற்கானகுழுவை நியமிக்கவும் அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது. இந்தக் குழுவில் கல்வித் துறைசார் வல்லுநர் மற்றும் நிபுணர்கள் உள்ளடக்கப்படவுள்ளனர்.

தொழில் சேவைப் பிரச்சினைகளைத் துரிதமாகத் தீர்த்தல், சேவையைப் பாராட்டுவதற்கான முறை மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் நிறைவேற்றுதல், தொழில் தன்மையை மேம்படுத்துதல், சேவைத் திருப்தியின் தன்மையை மேம்படுத்துவதன் மூலம் சிறந்த செயற்திறன் மிக்க சேவையை வழங்கக் கூடிய வகையில் இந்தக் குழு நியமிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### இலங்கையர்களுக்கு...

இல்லை என தூதரகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் 25ஆம் திகதி சுவிஸ் தூதரக பணியாளர் கடத்தபட்டு துன்புறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக ஏற்பட்ட அதிருப்தியால் நுழைவிசைவு வழங்கும் சேவைகள் இடைநிறுத்தப்பட்டதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

இந்த விடயம் தொடர்பாக சுவிஸ் தூதரகம் தனது கீச்சகத்தில், நுழைவிசைவு பெற்றுக்கொள்ளும் நடைமுறைகளை சுவிஸ் தூதரகம் நிறுத்தவில்லை. நுழைவிசைவு விண்ணப்பத்தை ஏற்றுக்கொளும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதுடன் குறித்த செயல்முறை இடம்பெற்று வருகின்றது' என பதிவிட்டுள்ளது. (ம)

### கடல்...

மூன்று மாத கிறிஸ்தவ கற்கை நெறியைக் கற்பதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த குறித்த இளைஞன், தல்செவன கடல் பகுதியில் நண்பர்களுடன் நேற்று நீராடச் சென்றார். இதன்போதே மேற்படி அசம்பாவிதம் இடம்பெற்றது.

நேற்று இரவு 9 மணி வரை இளைஞன் தொடர்பான எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. கடற்படையினர் தேடுதலைத் தொடர்ந்துகொண்டிருந்தனர். (ம-26,105)

### ஐ.தே.க...

கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸ நியமிக்கப்பட்டார். கட்சித் தலைவர் பதவி ரணிலுக்கு என்ற புரிந்துணர்வின் அடிப்படையிலேயே சஜித்தின் நியமனம் அமைந்தது என்று கொழும்பு ஊடகங்கள் சிலவும் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

## வாடிக்கையாளர் சேவைக்கு 24ஆயிரம் தடவைகள் அழைப்பு

டோக்கியோ, டிசெ. 6
ஜப்பானின் சைடாமா மாகாணத்தின் கசுகபே நகரைச் சேர்ந்தவர் அகிடோசி ஒகமோடோ (வயது-71). இவர் ஜப்பானின் தொலைத்தொடர்பு நிறுவனமான கே.டி.டி.ஐ.யின் வாடிக்கையாளர்.
இவர் தனது அலைபேசியில் வானொலி ஒலிபரப்புகளை கொண்டுவர இயலவில்லை. இது நிறுவனத்தின் தவறு, என்று குறைகூறி வந்துள்ளார். இது தொடர்பாக பலமுறை கட்டணமில்லா இலவச வாடிக்கையாளர் சேவை இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு விவாதித்துள்ளார்.
கே.டி.டி.ஐ. நிறுவனம் அவர்களது ஒப்பந்தத்தை மீறியதாகவும் அந்த நிறுவனப் பணியாளர்கள் தன்னிடம் மன்னிப்பு கேட்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். தொடர்ந்து வாடிக்கையாளர் சேவை இலக்கத்துக்கு அழைப்புகள் எடுத்துக் கொண்டேயிருந்துள்ளார். பொதுத் தொலைபேசியிலிருந்தும் அழைப்புகள் எடுத்துள்ளார்.
ஒரு கட்டத்துக்கு மேல் இவரது தொடர் அழைப்புகள் மூலம் மற்ற வாடிக்கையாளர்களுக்கு சேவை விவரங்கள் அளிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனையடுத்து வர்த்தக தடை ஏற்படுத்த முயற்சி செய்த குற்றச்சாட்டுகளின் கீழ் அகிடோசி ஒகமோடோ கடந்த வாரம் கைது செய்யப்பட்டார்.
"அகிடோசி இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 24 ஆயிரம் முறை வாடிக்கையாளர் இலக்கத்துக்கு அழைப்பு எடுத்துள்ளார். அவர் கைது செய்யப்படுவதற்கு முதல் வாரத்தில் கூட 411 முறை வாடிக்கையாளர் இலக்கத்துக்கு அழைப்பு எடுத்துள்ளார். இது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது" என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5)



இந்தியாவின் ஜலந்தர் குடியிருப்புப் பகுதியில் புகுந்த சிறுத்தை நபர் ஒருவரை தாக்கமுயலும் போது அவரைக் காப்பாற்ற முயலாமல் அதனைப் ஒளிப்படம் எடுத்துவிட்டு மற்றவர் தப்பியோடுகிறார். (ஒ.5)

## ஐ.எஸ். விவகாரம் : அமெரிக்கா பிரான்ஸ் தலைவர்கள் காரசார விவாதம்

லண்டன், டிசெ. 6
ஈராக் மற்றும் சிரியாவில் ஆயிரக்கணக்கான ஐ.எஸ். பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டு உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் வேறு நாடுகளிலிருந்து வந்து ஐ.எஸ். இயக்கத்தில் இணைந்தவர்கள்.
ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 800இற்கும் அதிகமான ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஈராக், சிரியா சிறைகளில் உள்ளனர்.
அவர்களை அந்த நாடுகள் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. இந்த விவகாரத்தில் அமெரிக்க அரச தலைவர் ட்ரம்புக்கும், பிரான்ஸ் அரச தலைவர் மெக்ரானுக்கும் இடையில் கருத்து மோதல் நீடிக்கிறது. இங்கிலாந்தின் தலைநகர் லண்டனில் நடந்து வரும் நேட்டோ படைகளின் உச்சி மாநாட்டுக்கு மத்தியில் ட்ரம்பும், மெக்ரானும் சந்தித்து பேசினர். ஐ.எஸ். பயங்கரவாதிகளை திரும்ப பெறும் விவகாரத்தில் இருவருக்கும் இடையே காரசார விவாதம் நடந்தது.
மெக்ரானைப் பார்த்து ட்ரம்ப், சில நல்ல ஐ.எஸ். போராளிகளைத் தரட்டுமா? என்னால் அவர்களை உங்களுக்குத் தர முடியும் நீங்கள் யாரை விரும்புகிறீர்களோ அவர்களை எடுத்துக்கொள்ளலாம் என்று கூறினார். அதற்கு 'நாம் சீரியசாக பேசலாம்' என்று மெக்ரான் பதற்றமாகப் பதிலளித்தார். (ஒ.5)

# சிரியாவில் தாக்குதல்: 8 குழந்தைகள் சாவு

டமாஸ்கஸ், டிசெ. 6
சிரியாவின் வடக்குப் பிரதேசத்தில் நடந்த வான்வழித் தாக்குதலில் 8 குழந்தைகள் உயிரிழந்தனர். இது குறித்து ஏஎன்ஐ வெளியிட்ட செய்தியில்,



சிரியாவின் வடக்குப் பகுதியில் உள்ள ரிபாத் நகரில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் 10 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 8 பேர் குழந்தைகள். பலர் காயமடைந்தனர். இருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கல்ஜிபிரின் கிராமத்திலும் வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
இந்தத் தாக்குதல்களை யார் நடத்தினார்கள் என்ற தகவல் இதுவரை வெளியாகவில்லை. துருக்கி ராணுவம் குர்து படைகளுக்கு எதிராக சிரியாவின் வடக்குப் பகுதியில் தாக்குதல் நடத்தி வருவதால் அவர்கள் இந்தத் தாக்குதலை நடத்தி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. முன்னதாக, சிரியாவின் வடமேற்குப் பகுதியில் இவ்வார தொடக்கத்தில் துருக்கி ராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 19 பேர் உயிரிழந்தனர். அதில் 12 பேர் குழந்தைகள்.
துருக்கி எல்லையையொட்டிய சிரியாவில் குர்து போராளிகள் எல்லையோரப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளனர் என்று கூறி அவர்கள் மீது தாக்குதல் நடத்த துருக்கி அரச தலைவர் எர்டோகன் உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து அந்தப் பகுதியிலிருந்து அமெரிக்கா தங்கள் படைகளைத் திரும்பப் பெற்றது. சிரியாவில் துருக்கிப் படையினர் குர்து படைகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தினர். துருக்கியின் தாக்குதல் காரணமாக சுமார் 4 லட்சம் மக்கள் சிரியாவின் வடக்குப் பகுதியிலிருந்து வெளியேறினர். பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர். தொடர்ந்து சிரியாவின் வடக்குப் பகுதியில் துருக்கி ராணுவம் குர்து படைகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தி வருகிறது. (ஒ.5)

## சீனாவுக்கு விற்கப்படும் பாகிஸ்தான் பெண்கள்

### அதிர்ச்சித் தகவல்

லாகூர், டிசெ. 6
பாகிஸ்தானின் ஏழைப் பெண்கள் பணத்துக்காக சீனர்களுக்குத் திருமணம் செய்து கொடுக்கப்படும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.
அந்தப் பெண்கள் சீனர்களின் மனைவிகளாக சீனாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டாலும் அங்கு அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சீனாவுக்கு அழைத்துச் செல்லப்படும் பெண்கள் தங்கள் குடும்பத்தவர்களைத் தொடர்பு கொண்டு தங்களை மீட்குமாறு கெஞ்சுகின்றனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. பெண்கள் திருமணமாகி சீனாவுக்கு கடத்தப்படுவதை தடுக்க பாகிஸ்தான் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். 629 பெண்கள் சீனர்களுக்கு திருமணம் செய்யப்பட்டு கடத்தப்பட்டனர் என்று தெரிய வந்துள்ளது.
இந்த விசாரணைகளால் சீனாவுடனான நட்புறவில் பாதிப்பு ஏற்படும் என்று பாகிஸ்தான் அரசு அஞ்சுகிறது. ஆகவே இது தொடர்பான விசாரணைகளுக்குப் பாகிஸ்தான் அரசு முட்டுக்கட்டை போடுவதாகத் தன்னார்வலர்கள் தெரிவித்துள்ளனர். பெண்கள் கடத்தல் வழக்கில் கைது செய்யப்படும் சீனர்கள் பலர் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
பாகிஸ்தான் பெண்களைத் திருமணம் செய்து சீனாவுக்கு கடத்தி சென்றாலும் சட்டம் தங்களை எதுவும் செய்யாது என்ற தைரியத்தில் இந்தக் குற்றத்தில் சிலர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ.5)



# பொருளாதார தடையை நீக்குங்கள் பேச்சுக்குத் தயார் என்கிறது ஈரான்

தெஹ்ரான், டிசெ. 6
பொருளாதாரத் தடைகளை நீக்கினால் அமெரிக்காவுடன் பேச்சுக்குத் தயார் என்று ஈரான் அரச தலைவர் ஹசன் ரவ்ஹானி தெரிவித்துள்ளார்.
அமெரிக்க - ஈரான் இடையே அணு ஆயுத சோதனை தொடர்பான மோதல் வலுப்பெற்று வரும் நிலையில் பேச்சு ஊடாக இதற்குத் தீர்வு காண உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.
இவ்வாறானதொரு நீண்ட இடைவேளைக்குப் பிறகு அமெரிக்காவுடனான பேச்சுக் குறித்து ஈரான் தரப்பில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.
ஈரான் அரச தலைவர் ஹசன் ரவ்ஹானி தெரிவிக்கையில்,
"ஈரான் மீதான சட்டவிரோத தடைகளை அமெரிக்கா நீக்கினால், அவர்களுடனான பேச்சுக்கு ஈரான் தயாராக உள்ளது" என்றார்.
அமெரிக்கா உள்ளிட்ட 6 வளர்ந்த நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே கடந்த 2015ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
ஆக்கபூர்வ தேவைகளுக்கு யுரேனியம் செறிவூட்ட ஈரானுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அந்த நாடு எவ்வளவு யுரேனியம் இருப்பு வைத்துக் கொள்ளலாம், எந்த அளவுக்கு அதைச் செறிவூட்டலாம் என்ற வரம்பும் விதிக்கப்பட்டது.
அமெரிக்க அரச தலைவராக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் உள்ளன என்றும் தெரிவித்து அதிலிருந்து விலகினார்.
மேலும் ஈரான் மீது மீண்டும் பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறார். இதற்குப் பதிலடியாக ஈரான் அணுசக்தி ஒப்பந்த விதிகளை அடுத்தடுத்து மீறி வருகிறது. (ஒ.5)

# ‘கோமா’வில் இருந்த தாய் மகளின் குரல் கேட்டு பாலூட்டிய அதிசயம்

## ஆர்ஜென்டினாவில் சம்பவம்

பியூனோஸ் அயர்ஸ், டிசெ. 6

ஆர்ஜென்டினாவின் வடக்கு மாகாணமான கோர்டோபாவில் உள்ள சான் பிரான்சிஸ்கோ நகரைச் சேர்ந்தவர் மரியா லாரா பெர்ரேயரா (வயது42). 3 குழந்தைகளுக்கு தாயான இவர் கடந்த மாதம் உந்துருளியில் பயணித்தபோது இனந்தெரியாதவரால் தாக்கப்பட்டார். அவருக்கு தலையில் பெரிய காயம் ஏற்பட்டு சுயநினைவை இழந்தார். பல நாள்கள் தீவிர சிகிச்சைப் பின்னரும் அவருக்கு சுயநினைவு திரும்பவில்லை. அவர் மூளை இறப்புக்கு உள்ளாகக் கூடும் என்றும் எனவே அவரது உறுப்புகளை தானம் செய்யுமாறும் குடும்பத்தினருக்கு மருத்துவர்கள் பரிந்துரைத்தனர். அவரது கணவர் மார்ட்டின் டெல்கடோ அதிர்ச்சியடைந்தாலும், நம்பிக்கையுடன் தனது மனைவிக்கு தொடர்ந்து சிகிச்சை வழங்கக் கோரினார். மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு சிகிச்சை வழங்கப்படுகின்றது.



கடந்த வாரம் மருத்துவமனைக்கு வந்த பெர்ரேயராவின் 2 வயது இளைய மகள் பாசத்துடன் அவர் அருகில் சென்று படுத்தார். தாயின் அவல நிலையை அறியாத அந்தக் குழந்தை வழக்கமாக கேட்பது போல அவரை கட்டி அணைத்து கொண்டு தனக்கு பசிக்கிறது என்று கூறி தாய்ப்பால் கேட்டது. அப்போதுதான் அந்த அற்புதம் நிகழ்ந்துள்ளது. 30 நாள்கள் சுயநினைவின்றி இருந்த பெர்ரேயரா தன் குழந்தையின் பசிக் குரல் கேட்டு சட்டென்று கண் விழித்து தாய்ப்பால் கொடுத்தார்.

இதைப்பார்த்த பெர்ரேயராவின் கணவர் மற்றும் குடும்பத்தினர் ஆச்சரியத்தில் உறைந்து போயினர். பெர்ரேயராவின்தாய்மைஉணர்வை கண்டு அவர்கள் மெய்சிலிர்த்து கண்ணீர் விட்டனர். இந்த ஆச்சரியம் சில நிமிடங்கள்தான் நீடித்தது. குழந்தையின் பசியை தீர்த்துவிட்டு பெர்ரேயரா மீண்டும் கோமாவுக்கு சென்று விட்டார். மகளின் குரலைக் கேட்டதும் பெர்ரேயரா கோமாவுக்கு முன் இருந்ததை போன்று இயல்பாக எழுந்து தாய்ப்பால் கொடுத்ததால் அவர் விரைவில் குணமடைவார் என்று நம்புவதாக அவரது கணவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஒ.5)

# அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தியுள்ளார் ட்ரம்ப்

## அமெரிக்க நாடாளுமன்றில் அறிக்கை முன்வைப்பு

வொஷிங்டன், டிசெ. 6

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெறும் அரச தலைவர் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய அரச தலைவர் ட்ரம்ப் மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து, ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் துணை அரச தலைவர் ஜோ பிடென் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



ஜோ பிடெனின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் உக்ரைன் நாட்டில் அவரும், அவரது மகன் ஹன்டாரும் நடத்தி வரும் தொழில் தொடர்பாக அவர்கள் மீது விசாரணை நடத்த வேண்டும்; இதை செய்யாவிட்டால் உக்ரைனுக்கு வழங்குகின்ற பயங்கரவாத ஒழிப்பு நிதியை நிறுத்திவிடுவோம் என்று அந்த நாட்டு அதிபர் விளாடிமிர் ஜெலென்ஸ்கிக்கு ட்ரம்ப் நெருக்கடி கொடுத்தார் என்று குற்றச்சாட்டு எழுந்தது.

ட்ரம்ப் தனது பதவியைத் தவறாகப் பயன்படுத்தினார் என்றும், இன்னொரு நாட்டுடன் ரகசிய பேரத்தில் ஈடுபட்டு தேசப் பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தினார் என்றும் கூறி அவரைப் பதவி நீக்கம் செய்வதற்கான விசாரணையை ஜனநாயக கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடங்கினர்.

ஒரு மாதத்துக்கும் மேலாக நாடாளுமன்றப் புலனாய்வு குழு விசாரணையை நடத்தி வருகிறது. முதற்கட்டமாக ஜோ பிடென் மீது விசாரணை நடத்துவது தொடர்பாக உக்ரைனில் உள்ள அமெரிக்க அதிகாரிகளிடம் டிரம்ப் பேசியது குறித்து விசாரிக்கப்பட்டது. இந்த விசாரணையில் அமெரிக்க தூதுவர்கள் 2 பேர் ட்ரம்புக்கு எதிராக சாட்சியம் அளித்தனர்.

டிரம்ப் சொந்த இலாபத்துக்காக தனது அதிகாரத்தை பயன்படுத்தினாரா என்பது குறித்து நாடாளுமன்ற புலனாய்வுக் குழு அடுத்த கட்ட விசாரணையை தொடங்கியது.

நேற்று முன்தினம் இது தொடர்பாக நடந்த விசாரணையில் முன்னிலையாகுமாறு டிரம்புக்கு நாடாளுமன்ற புலனாய்வுக் குழு அழைப்பு விடுத்திருந்தது. ஆனால் விசாரணை நடைமுறைகளில் அடிப்படை நேர்மை இல்லை எனத் தெரிவித்து டிரம்ப் விசாரணைக்கு முன்னிலையாக மறுத்துவிட்டார்.

பதவி நீக்க விசாரணையை நடத்தி வரும் நாடாளுமன்ற புலனாய்வுக் குழு 300 பக்கங்கள் கொண்ட அறிக்கையை அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்தது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தனது அரசியல் எதிரியான முன்னாள் துணை அரச தலைவர் ஜோ பிடென் மீது விசாரணையை அறிவிக்க உக்ரைனுக்கு அழுத்தம் கொடுக்க அரச தலைவர் டிரம்ப் தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தினார் என்பதற்கான ஆதாரங்கள் தெளிவாக உள்ளன. 2016ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் தலையிட்டது ரஷ்யா அல்ல உக்ரைன்தான் என்ற சதி கருத்து ஒழித்துக் கட்டப்படுகிறது. மேலும் பதவி நீக்க விசாரணையை தடுக்க டிரம்ப் முயற்சிகளை மேற்கொண்டார் என்பதையும் விசாரணை முடிவு செய்கிறது. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



## இன்றைய நாள்

**மேடம்:** பணி திறமையை வளர்த்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய பரிமாணம் ஏற்படும். பண பரிவர்த்தனை அதிகரிக்கும். தாயின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** நண்பர்களின் உதவி நெகிழ்ச்சியை தரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். உபரி பண வருமானம் கிடைக்கும். குடும்ப தேவை பூர்த்தியாகும்.

**மிதுனம்:** எவரிடமும் விவாதம் பேச கூடாது. நிதான செயல்கள் நன்மையை பெற்று தரும். தொழில், வியாபாரத்தில் கொஞ்சம் போட்டி அதிகரிக்கும். சுமாரான அளவில் பணம் கிடைக்கும்.

**கடகம்:** நிகழ்வுகள் மனதில் வருத்தம் தரலாம். சுய லாபத்துக்காக சிலர் தரும் உதவியை ஏற்க வேண்டாம். அதிக உழைப்பினால் தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராகும். பண செலவில் சிக்கனம் நல்லது.

**சிம்மம்:** மனதில் புத்துணர்வு பிறக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். புதிய வாடிக்கையாளர்களின் ஆதரவுகிடைக்கும். வீட்டுஉபயோகபொருள் வாங்குவீர்கள். பணியாளர்சலுகைபெறுவர்.

**கன்னி:** எதிர்ப்பாக செயல்பட்டவர் விலகுவார். நம்பிக்கையுடன் பணி புரிவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து வளரும். நிலுவை பணம் வசூலாகும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**துலாம்:** முழுமனதுடன் பணிபுரிவதால் உரிய நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரம்சுமாரான அளவில் இருக்கும். அளவான பண வரவு கிடைக்கும். தெய்வ வழிபாடு மனதில் சாந்தம் தரும்.

**விருச்சிகம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வது அவசியம். புதிய இனங்களில் பண செலவு ஏற்படலாம்.

**தனுசு:** ப்ணிகளில் முழு அளவிலான நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூல தனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை செழித்து வளரும்.

**மகரம்:** நண்பரிடம் விவாதம் பேச வேண்டாம். தொழிலில் திட்டமிட்ட இலக்கை அடைய அவகாசம் தேவைப்படும். சேமிப்பு பணம் செலவுகளுக்கு பயன்படும்.

**கும்பம்:** சமூக அக்கறையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். நண்பர் மற்றும் உறவினர் மனம் மகிழ்ந்து பாராட்டுவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.

**மீனம்:** எண்ணத்திலும், செயலிலும் சிறு முரண்பாடு ஏற்படலாம். தொழில், வியாபாரம் வளர கூடுதல் உழைப்பு தேவைப்படும். அளவான பண வரவு கிடைக்கும்.




### 13ஆவது தெற்காசிய விளையாட்டில்

# தடகளப் போட்டியில் நேற்று இலங்கைக்கு நான்கு தங்கம்




13ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் நேற்று இடம்பெற்ற தடகளப் போட்டிகளில் இலங்கை அணி 4 தங்கப் பதக்கங்களை சுவீகரித்தது. அதேவேளை முப்பாய்ச்சலில் சவ்ரின் அஹமட் வெண்கலப் பதக்கத்தையும் வென்றார்.

400 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில், பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் டில்ஸி தங்கப்பதக்கத்தையும், ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் அனுர தர்ஸன தங்கப் பதக்கத்தையும், லக்மால் பிரியஞ்சன் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

பெண்களுக்கான முப்பாய்ச்சலில் ஹஸினி பிரபோதி 13.21 மீற்றர் நீளத்தை தாண்டி தங்கப் பதக்கத்தையும், விதுஸா 13.14 மீற்றர் நீளத்தை தாண்டி வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.

பெண்களுக்கான 100 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் 13.68 செக்கன்களில் ஓடி முடித்து லக்ஸிகா சுகந்தி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

## கபடிப் போட்டியில் இலங்கைக்கு முதல் வெற்றி



யாழ்ப்பாணம், டிசெ.6

தெற்காசிய விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான கபடித் தொடரில் முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற முதல் லீக் முறையிலான ஆட்டத்தில் இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதின.

இதில் இலங்கை அணி 29:27 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றியை தக்கவைத்தது. இந்தப் போட்டியில் தமிழ் வீரரான கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வி.சினோதரன் முதல் ஆறு பேர் கொண்ட அணியில் இடம்பிடித்து விளையாடியிருந்தார். (23)

## இலங்கைக்கு எதிரான கால்பந்தாட்டத்தில் நேபாள அணி வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.6

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நடைபெற்று வரும் 13ஆவது தெற்காசிய விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றது.

நேற்று வியாழக்கிழமை காத்மண்டு டசரத் அரங்கில் இடம்பெற்ற 3ஆவது லீக் முறையிலான ஆட்டத்தில் இலங்கை- பங்களாதேஷ் அணிகள் மோதின.

முதற்பாதி ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் பங்களாதேஷ் அணிக்கான முதலாவது கோலை பதிவு செய்தார் அந்த அணியின் வீரர் முகபுர் ரகுமான். இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் தமது அணிக்கான கோல்களை பதிவு செய்வதற்காக முயற்சிகள் மேற்கொண்ட போதும் கோல்கள் எதுவும் பதிவுசெய்ய முடியாது போக ஆட்ட நேரமுடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றது. (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.6

இலங்கை பாடசாலைகள் கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் வடக்கு வலய பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் லீக் ஆட்டங்கள் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் காலை 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கோப்பாய் கிறிஸ்வக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வேலணை மத்திய கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (23)

## சதுரங்க பயிற்சி முகாம்

கிளிநொச்சி.டிசெ.6

நெடுந்தீவு நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாடடில் சிறகுகள் அமையம் விளையாட்டு பிரிவினரால் நெடுந்தீவு பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்படும் 'சதுரங்கம் முதற்படி பயிலரங்கம்' பயிற்சி முகாம் சனி,ஞாயிற்றுக் கிழமைகளில் நெடுந்தீவு சீக்கிரியாம் பள்ளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி 'சதுரங்கம் முதற்படி பயிலரங்கம்' பயிற்சி முகாமில் நெடுந்தீவு மகா வித்தியாலயம், சைவப்பிரகாச வித்தியாலயம், றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி, சீக்கிரியாம்பள்ள அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய நான்கு பாடசாலை மாணவர்கள் பயிற்சி முகாமில் கலந்துகொள்ளவுள்ளனர்.

நெடுந்தீவு பிரதேசத்தில் சதுரங்க விளையாட்டை திறன் விருத்தி செய்யும் வகையில் குறித்த பயிற்சி முகாம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (222.23)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.6

இலங்கை பாடசாலைகள் கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் வடக்கு வலய பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் லீக் ஆட்டங்கள் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றது.

இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 58:36 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை அணிக்கும், யாழ்ப்பாணம் இந்துக் கூல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 52:51 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணிக்கும். சென், ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி 42 : 20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

(23)

## ஆஸியின் பந்து வீச்சு மிகப் பலமானது

### ரிக்கி பொண்டிங் கருத்து

இந்தியாவை விட ஆஸ்திரேலியாவின் பந்து வீச்சு சிறந்தது என்று ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

இந்திய டெஸ்ட் அணி வேகப்பந்து வீச்சாளர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அபாரமாக பந்து வீசி வருகின்றனர். பும்ரா டெஸ்ட் அணியில் இடம் பிடித்தபின் மிகவும் அசுர பலத்துடன் இந்திய பந்து வீச்சு திகழ்ந்து வருகிறது.

இந்த நிலையில் ஆஸ்திரேலியாவின் பந்து வீச்சு தான் சிறந்தது என்று ஆஸ்திரேலியா அணியின் முன்னாள் அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்தியாவின் வேகப்பந்து வீச்சு பிரம்மாண்டமானது. பும்ரா, முகமது ஷமி ஆகியோர் கடந்த இரண்டு வருடங்களாக சிறப்பாக பந்து வீசுகின்றனர்.



உமேஷ் யாதவை இஷாந்த் சர்மாவுடன் ஒப்பிடலாம். இருவரும் மிகமிக சிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள். அவர்களின் சுழற்பந்து வீச்சாளர்கள் அஸ்வின், ஜடேஜாவின் தாக்குதல் சிறப்பானது. ஆனால், அவர்களுடைய சுழற்பந்து வீச்சாளர்கள் ஆஸ்திரேலிய மண்ணில் அதிகளவில் திணறுகிறார்கள். இந்திய சுழற்பந்து வீச்சாளர்களை விட நாதன் லயன் ஆஸ்திரேலியா மண்ணில் சிறப்பான இடத்தை தக்க வைத்துள்ளர்.

இடதுகை வேகப்பந்து வீச்சாளரான மிட்செல் ஸ்டார்க் வித்தியாசமாக ஏதாவது ஒன்றை அணிக்கு வழங்குகிறார். அவரது பந்து வீச்சு சிறப்பு. அவரைப் போன்று மற்றொருவரை நான் பார்க்கவில்லை. ஆகவே, இந்தியாவை விட இந்த ஆஸ்திரேலியாவின் பந்து வீச்சு பலம்- என்றார்.



## உலகின் மிகப் பெரிய மைதானம் அடுத்த ஆண்டு இந்தியாவில் திறப்பு

இந்தியாவின், அகமதாபாத்தில் நிர்மாணிக்கப்படும் உலகின் மிகப் பெரிய கிரிக்கெட் மைதானம் அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்த மைதானம் ஒரு இலட்சம் இருக்கை வசதிகளை கொண்டதும், ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் மைதானத்தை விட மிகப் பெரியதும் ஆகும். இந்த மைதனத்தில் மொத்தம் 11 ஆடுகளங்கள் அமைக்கப்படுகிறது. மழை பெய்தால் 30 நிமிடத்துக்குள் தண்ணீர் வெளியேறும் வகையில் நவீன வடிகால் வசதிகள் செய்யப்பட்டும் உள்ளன. அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்குள் இந்த மைதானம் தயாராகி விடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## கோக்லியையும் சீண்டினார் பாக்.முன்னாள் வீரர் அப்துல் ரசாக்

பும்ராவை குழந்தை பந்த வீச்சாளர் என்ற அப்துல் ரசாக், விராட் கோக்லி சச்சினுக்கு சமமானவர் அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணியின் முன்னாள் கசல துறை ஆட்டக்காரர் அப்துல் ரசாக். பும்ராவை கிண்டலடித்ததோடு கோக்லியையும் சீண்டியுள்ளார்.

கோக்லி குறித்து அவர் தெரிவிக்கையில்;

கடந்த காலப் பகுதியில் விளையாடிய வீரர்களிடம் நீங்கள் பேசினால், கிரிக்கெட் என்றால் என்ற என்பதை அவர்கள் கூறுவார்கள். அந்த காலக்கட்டத்தில் உள்ள உலகத் தரம் வாய்ந்த வீரர்களை போன்று தற்போதுள்ளவர்களை பார்க்க முடியாது.

அப்போது உலகத்தரம் வாய்ந்த வீரர்கள் இருந்தனர். தற்போது அந்த அளவுக்கு நீண்ட கால உலகத்தரம் வாய்ந்த வீரர்கள் இல்லை.

ரி-20 போட்டி கிரிக்கெட்டை மாற்றிவிட்டது. ஆதிக்கம் செலுத்தும் பந்து வீச்சு, துடுப்பாட்ட மற்றும் களத்தடுப்பு இங்கு இல்லை. கிரிக்கெட்டில் இது தற்போது அடிப்படையாகவே ஆகிவிட்டது.

அவர்களுக்கு விராட் கோலி சிறந்த வீரர். அவர் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். ஆனால், சச்சினுக்கு நிகரான இடத்தை அவருக்கு வழங்க இயலாது-என்றார்.

## குழந்தை பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா

### அப்துல் ரசாக் நகைச்சுவை

இந்தியாவின் ஜஸ்பிரித் பும்ரா ஒரு குழந்தை பந்து வீச்சாளர் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் சக்லதுறை ஆட்டக்காரர் அப்துல் ரசாக் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:


கிளைன் மெக்ராத், வாசிம் அக்ரம் போன்ற மிகச் சிறந்த பந்து வீச்சாளர்களுக்கு எதிராக நான் விளையாடி இருக்கிறேன். என்னை பொறுத்தவரை இந்தியாவின் ஜஸ்பிரித் பும்ரா ஒரு குழந்தை (பேபி) பந்து வீச்சாளர்.

இப்போது விளையாடி இருந்தால் அவரது பந்து வீச்சுக்கு எதிராக நான் ஆதிக்கம் செலுத்தி, அடித்து நொறுக்கியிருப்பேன். நான் விளையாடிய காலத்தில் உலகத் தரம் வாய்ந்த பந்து வீச்சாளர்களை எதிர்கொண்ட எனக்கு, பும்ரா போன்ற பந்து வீச்சாளர்களை எதிர்கொள்வதில் எந்தவிதப் பிரச்சினையும் இருந்திருக்காது. அவருக்கு தான் நெருக்கடி இருந்திருக்கும். ஆனாலும் அவர் நன்றாக செயற்படுகிறார். வெகுவாக முன்னேற்றம் கண்டு இருக்கிறார். அவரது வித்தியாசமான பந்து வீச்சு தாக்கத்தை ஏற்படுத்துகிறது - என்றார்.



## இந்தியா - மேற்கிந்தியத்தீவுகள் ரி-20 போட்டி இன்று ஆரம்பம்





இந்தியா - மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதும் முதலாவது ரி-20 போட்டி இன்று ஹைதராபாத்தில் ஆரம்பமாகின்றது.

மேற்கிந்தியத்தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையில் மூன்று ரி-20 போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகள் இடம்பெறவுள்ளது. இதில் இன்று முதலாவது ரி-20 போட்டி இரு அணிகளுக்குமிடையில் இடம்பெறவுள்ளது. இந்திய அணியைப் பொறுத்தவரையில் கோக்லியின் தலைமையில் களமிறங்குகின்றது. சொந்த மைதானத்தில் களமிங்குவதால் அவர்களுக்குச் சாதகமாகவே போட்டி காணப்படும். 16 பேர் கொண்ட பெயர்ப் பட்டியலில் துடுப்பாட்டத்தை பொறுத்தவரைக்கும் ஸ்ரேயர் அய்யர், மனிஸ் பாண்டே, ரிஷப் பந்த், கோக்லி, கே.எல். ராகுல் அணிக்கு பலம் சேர்க்கின்றனர். ஸ்ரேயர் அய்யர், மனிஸ் பாண்டேக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பந்து வீச்சைப் பொறுத்தவரைக்கும் மொகமட் சமி, சாஹல், யாதவ் அணிக்குப் பலம். அவர்களுடன் திபக் சாஹலுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பும்ரா காயத்திலிருந்து மீண்டு பயிற்சியில் ஈடுபட்டு வருவதால் இந்தப் போட்டியில் உள்வாங்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் அணியில் இடம்பெறவில்லை.

கிரான் பொல்லார்ட் தலைமையில் களமிறங்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு துடுப்பாட்டத்தைப் பொறுத்த வரைக்கும் குறைகள் கூறுவதற்கில்லை. ஏனெனில் அவர்களின் துடுப்பாட்டத்தில் பந்துகள் எல்லைக் கோடுகளைத் தாண்டுவது இயல்பே. ஹிட்மெயர், பொல்லார்ட், ஹோல்டர், பூரன், லூயிஸ் துடுப்பாட்டத்தில் அணிக்குப் பலம். பந்து வீச்சிலும் அணி குறைந்தவர்கள் இல்லை. இரு அணிகளுக்குமிடையிலான போட்டி விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாது இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.




# இலங்கை அணியின் புதிய பயிற்சியாளர்கள் நியமனம்

இலங்கை கிரிக்கெட் அணிக்கான தலைமைப் பயிற்சியாளர், துடுப்பாட்டம் மற்றும் 'ஏ' அணிக்கான தலைமைப் பயிற்சியாளர், வேகப் பந்து பயிற்சியாளர், களத்தடுப்பு பயிற்சியாளர் மற்றும் அபிவிருத்தியாளர் ஆகியோர் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைமையகத்தில் வைத்து நேற்று நியமிக்கப்பட்டனர்.

**தலைமைப் பயிற்சியாளர்**

மிக்கி ஆர்தர் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளருக்கான தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

ஆர்தர் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரராவார். அத்தோடு தென்னாபிரிக்கா அணியின் பயிற்றுவிப்பாளராக 2005 -2010ஆம் ஆண்டு முதல் இருந்துள்ளார். ஆஸ்திரேலியா அணியின் பயிற்றுவிப்பாளராக 2011 - 2013 வரையான காலப்பகுதியில் இருந்தார். அத்துடன் பாகிஸ்தான் அணிக்கும் தலைமைப் பயிற்றுவிப்பாளராக இருந்துள்ளார்.

**துடுப்பாட்டம் / 'ஏ' அணிக்கான தலைமைப் பயிற்சியாளர்**

கிரேண்ட் ப்ளவர் இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டம் மற்றும் 'ஏ' அணிக்கான தலைமைப் பயிற்சியாளருக்கான தனது கடமைகளை இன்று பொறுப்பேற்பார்.

48 வயதான இவர் சிம்பாப்வே அணியின் முன்னாள் வீரர் ஆவார். கிரேண்ட் ப்ளவர் சிம்பாப்வே அணிக்கு 2010 - 2014 வரையும், பாகிஸ்தான் அணிக்கு 2014 - 2019 வரையும் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக இருந்துள்ளார்.

**வேகப் பந்து வீச்சுப் பயிற்சியாளர்**

டேவிட் சேகர் இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சுப் பயிற்சியாளராக பொறுப்பேற்பார்.

இவர் ஆஸ்திரேலிய அணியின் உதவிப் பயிற்சியாளராகவும், மெல்போர்ன் ரெனிகேட்ஸ் அணிக்கு 2015 - 2016 வரை தலைமை பயிற்சியாளராகவும் இருந்துள்ளார்.

**களத்தடுப்பு பயிற்சியாளர்**

ஷேன் மெக்டெர்மொட் இலங்கை கிரிக்கெட் அணியின் களத்தடுப்பு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ஆவார்.

**தலைமை கிரிக்கெட் செயற்பாட்டு அதிகாரி**

ஜெரோம் ஜெயரட்ன இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை செயற்பாட்டு அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

**கிரிக்கெட் அணியின் அபிவிருத்தியாளர்**

டிம் மெக்கஸ்கில் இலங்கை கிரிக்கெட் அணியின் அபிவிருத்தியாளராக இன்று தனது கடமைகளை பொறுப்பேற்பார்.

# கோக்லி, ரவி சாஸ்திரியுடன் கருத்துப் பகிர்வில் கங்குலி

ஆஸ்திரேலியாவில் அடுத்த வருடம் நடைபெற இருக்கும் ரி-20 உலகக் கிண்ணம் குறித்து அணித் தலைவர் விராட் கோக்லி, பயிற்சியாளர் ரவி சாஸ்திரியுடன் கருத்துக்களை பகிர்வேன் என கங்குலி தெரிவித்துள்ளார்.

ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த வருடம் ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் இந்திய அணி விளையாடுவது குறித்து எனக்கு சில கருத்துக்கள் உள்ளன. இது குறித்து இந்திய அணித் தலைவர் விராட் கோக்லி, தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரி மற்றும் அணி நிர்வாகத்துடன் விவாதிப்பேன் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

ரி-20 கிரிக்கெட்டில் முதலில் துடுப்பெடுத்தாடும் போது அணி சிறப்பாக செயற்படவேண்டிய தேவை உள்ளது. நான் சில கருத்துக்களை வைத்துள்ளேன். அதை கோக்லி, ரவி சாஸ்திரி மற்றும் அணி நிர்வாகத்திடம் பகிர்வேன். நாம் அதிக அளவில் ரி-20 கிரிக்கெட்டில் விளையாடவில்லை. இந்திய அணி உலகக் கிண்ணத்துக்கு சிறந்த முறையில் தயாராகும் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார்.

வேலைக்கு ஆள்கள் தேவை
சிவம் களஞ்சியம் (சுப்பர் மார்க்கட்) பிரதான வீதி, சுழிபுரம் என்னும் முகவரியிலுள்ள எமது நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள பெண் ஊழியர்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். மேலும் அருகில் உள்ள கிராமங்களில் உள்ளவர்கள் வரவேற்கப்படுகின்றனர்.
077 721 7304 (CS/29748) (11.17)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1627 சீட்டிழுப்பு திகதி 05.12.2019
வெற்றி இலக்கங்கள் 04 39 43 57 R
அடுத்த செவ்வாய்கிழமைக்கான ஜக்பொட் ரூ.42, 111, 396 /=

ராசி அதிர்ஷ்டம்
திகதி 05.12.2019 வெற்றி வாரம் 2698 வர்ணம் கபிலம்
கடகம்
வெற்றி இலக்கங்கள் 13 34 36 46
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 962, 808/=
06.12.2019ம் திகதி வெள்ளிக் கிழமை கருநீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 812
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.12.05
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 70,666,655/-
வெற்றி இலக்கங்கள் 14 20 42 43 G

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 17, Kandy Road, Jaffna

போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்குகள்
•SLAS, SLAcS
•புகையிரத பாதுகாவலர்
•EB Exam
என்பனவற்றுக் கானவை
தொடர்புகளுக்கு 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புக்கள் பிரிவு

SLAS Open & Limited
உமாசங்கர்& வவானர்கள் மீட்டல் கருத்தரங்கு தொடர் 06
பொதுஅறிவு
அன்ரன் பெரேரா
08/12/2019 ஞாயிறு
9am- 4.30 pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"
G.K Essay, SL, World
நூல் பெற்றுக்கொள்ளலாம்.
நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
076 166 1986, 077 741 7143

SLAS கருத்தரங்கு
R.திரவியராஜ் (SLAS) இன் இறுதிக்கருத்தரங்கு
07.12.2019 சனி
9Am - 2Pm
மாதிரிப்பரீட்சை - 2
உலகளாவிய போக்குகள்
2Pm-4Pm
நாவலர் கல்விநிறுவனம்
ஆனைப்பந்தி
076 166 1986
077 111 6739

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.